
October 2025

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## தீபாவளி மலர்




தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS
VARSHA™


# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

October 2025

சுவடி— 15
ஓலை— 8


## உள்ளே...





**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*


**வணக்கம் பல**

பொருளாதாரச் சிக்கல்களும் போர்ச் சூழல்களும் நிலவிக் கொண்டிருந்தாலும், அவற்றையெல்லாம் கடந்து எதிர் வரக்கூடிய இன்பங்களை நோக்கும் விதமாகவே மக்கள் பண்டிகைகளை வரவேற்கத் தயாராகிறார்கள்.

ஒவ்வொரு நாட்டுக்கும், இனத்துக்கும் குறிப்பிட்ட நேரத்தில் ஏதோவொரு பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் மூலம் மக்களுக்கு மிகப் பெரிய செய்தி ஒளிந்திருக்கிறது. தலைமுறைக்கு வழிகாட்ட ஒரு உயர்ந்த நெறியினை வைத்திருக்கிறார்கள். அன்பையும், ஈகைக் குணத்தையும், உயர்ந்த இலக்குகளை அடைவதற்கு உறுதியையும், நம்பிக்கையும் தரக்கூடியதாகவே பண்டிகைகளின் அடித்தளம் அமைந்திருக்கிறது

கொண்டாட்டங்களை மட்டுமே முன்னிறுத்தி கொண்டாடப்படாமல் அதன் பின்னணியில் ஒளிந்து இருக்கக்கூடிய தத்துவங்களை உள்வாங்கிக் கொண்டாடும் போது, அந்த பண்டிகை மூலம் மிகப்பெரிய நன்மை சமூகத்தில் விளைகிறது.

மனித குலம் நெடுங்காலமாக, ஏதேதோ காரணங்களால் குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்தாலும், சொந்தங்களை ஒன்று சேர்க்கும் திருவிழாவாக பண்டிகைகள் அமைந்து விடுகின்றன. உலகமே ஒரு குடையின் கீழ் இருக்க, அனைவரும் உறவினர்களாக மகிழ்வோடும் பண்போடும் அன்போடும் பண்டிகைகளைக் கொண்டாடி மகிழ்வோம்.

தீபாவளி ஒரு சிறப்பான பண்டிகை. தீபத்திருநாளின் பின்னணியில் அறியாமையும் அகந்தையும் அழிந்து, ஞானமும் உயர் பண்பும் ஒளியாகப் பரவ வேண்டும் என்ற நோக்கில் கொண்டாடப்படுகின்ற தீபத்திருநாளை உலகெங்கும் தமிழர்களும் சிறப்புடன் கொண்டாடி மகிழ்வர்.

தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை சேர்க்கும் நல்ல பல பனுவல்களுடனும், அற்புதமான ஆக்கங்களுடனும் மலர்கின்ற படைப்புகளைச் சுமந்து கொண்டு மலர்கின்ற ‘அய் தமிழ்’ தீபத்திருநாள் சிறப்பு மலரை வரவேற்றுக் கொண்டாடுங்கள்.

உலகத்தனைவருக்கும் நம் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு


(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

பாழும் பணம்


எங்கே போகும்?

பணம் பத்தும் செய்யும்

பாயும் பணம்
பாதாளம் வரை!
நூல் பெருமை

யோக யோகம்!

மழலை மகிமை



# உள்ளே


தமிழே தமிழே

தல வலம்

தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

மருத்துவ தமிழ்

கவிதைகள்

சிறுகதைகள்

சினிமா

பாலிவுட், கோலிவுட், டோலிவுட், மாலிவுட்




# பாழும்

## லண்டன் போராட்டங்கள்

லண்டனில் தொடங்கிய மற்றொரு தீவிர வலதுசாரி கூட்டம், பல தசாப்தங்களில் பிரிட்டன் கண்டிராத வகையில், புலம்பெயர்ந்தோருக்கு எதிரான மிகப் பெரிய ஆர்ப்பாட்டமாக மாறியது.

தீவிர வலதுசாரியான டாமி ராபின்சன் ஏற்பாடு செய்த "யுனைட் தி கிங்டம்" பேரணிக்காக 1,10,000—க்கும் மேற்பட்டோர் செப்டம்பர் 13 அன்று, மத்திய லண்டனில் கூடினர். பல தசாப்தங்களில் பிரிட்டன் கண்டிராத வகையில், புலம்பெயர்ந்தோருக்கு எதிரான மிகப் பெரிய ஆர்ப்பாட்டமாக மாறியது.

யூனியன் ஜாக், பிரிட்டனின் செயின்ட் ஜார்ஜ் கிராஸ், அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய கொடிகளை ஏந்திய ஆர்ப்பாட்டக்காரர்கள், காவல்துறையின் பாதுகாப்பு ஏற்பாடுகளை கடுமையாக சோதித்தனர்.

முதலில் "சுதந்திர பேச்சு விழா" (யீமீவமீ வீஸ்ணீறீ ஷீயீ யீகூஷீமீம் ஹீஜீமீமீநீலீ) என்று அறிவிக்கப்பட்ட இந்தப் பேரணி, விரைவில் இனவாத சதிக் கோட்பாடுகளை நோக்கி நகர்ந்து, இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புப் பிரசாரமாக மாறியது.

மிகப்பெரிய அளவில் காவல்துறையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், வன்முறை வெடித்தது. அதில், 20க்கும் மேற்பட்ட அதிகாரிகள் காயமடைந்தனர். இந்த நிகழ்வு, குடியேற்றம் எவ்வளவு தூரம் ஒரு பிரச்னையாக மாறியுள்ளது என்பதை நினைவூட்டுவதாக அமைந்தது. இது அடையாளம் மற்றும் நாட்டின் எதிர்காலம் குறித்த ஆழமான முரண்பாடுகளையும் வெளிப்படுத்தியது.

ஏன் அணிவகுத்துச் சென்றனர்?









## நடியா சுலேமான்

குடியேற்றம் மீதான கோபம் மற்றும் நாட்டின் எல்லைகளில் அரசாங்கம் கட்டுப்பாட்டை இழந்துவிட்டது என்ற கருத்தின் மீதான நம்பிக்கையால், லண்டனில் பெருமளவில் மக்கள் திரண்டனர்.

பல ஆர்ப்பாட்டக்காரர்கள், சட்டவிரோத குடியேற்றத்தை தடுத்து, அகதிகளுக்கு த!சமளிக்கும் விதிகளை கடுமையாக்குவதன் மூலம், பிரிட்டன் தனது “கட்டுப்பாட்டை மீட்டெடுக்க வேண்டும்“ என்று கூறினர். பிரித்தானிய கலாசாரம் அழிந்து வருவதாகவும், அதைப் பாதுகாக்கவே தாங்கள் வந்ததாகவும் சிலர் தெரிவித்தனர்.

பேச்சு சுதந்திரத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தன. குடியேற்றத்திற்கு எதிராகப் பேசும் சாதாரண மக்களுக்கு பேச்சு சுதந்திரம் இல்லை என்று பலரும் குறிப்பிட்டனர்.

பிரதமர் கெய்ர் ஸ்டார்மரை குறிவைத்து, கோஷங்கள் மற்றும் பதாகைகளுடன் பெரிய அரசியல் மாற்றத்திற்கான கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டன. ராபின்சனைத் தவிர, அமெரிக்க கோடீஸ்வரர் ஈலோன் மஸ்க் காணொளி மூலம் பங்கேற்றார்.




பிரிட்டனில் சமூகத்தை இது எவ்வாறு பாதிக்கிறது?



*2021*—ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பிரிட்டனில் தெற்காசிய மக்கள் இரண்டாவது பெரிய இனக்குழுவாக உள்ளனர். இதில் இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள், வங்கதேசத்தவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர், சிங்களர்களும் நேபாளிகளும் சிறிய அளவில் உள்ளனர்.

போராட்டங்கள் கடுமையான எல்லைக் கட்டுப்பாடு மற்றும் அகதிகளுக்கு த!சமளிக்கும் கொள்கைகளை நோக்கி இருந்தாலும், பல தலைமுறைகளாக பிரிட்டனில் வாழும் இந்த தெற்காசிய சமூகங்கள் இதன் தாக்கத்தை உணர்கின்றன. குறிப்பாக இஸ்லாம் மற்றும் சீக்கிய சமூகங்களுக்கு எதிரான வெறுப்பு பிரசாரங்கள் அதிகரித்து வருகின்றன.




*2024*—ல் இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்பு சம்பவங்கள் புதிய உச்சத்தை எட்டியதாக ‘டெல் மாமா’ அமைப்பு அறிக்கை வெளியிட்டது. வெஸ்ட் மிட்லாண்ட்ஸ் பகுதியில் இளம் சீக்கிய பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான சம்பவத்தை காவல்துறை “இன ரீதியாக தூண்டப்பட்ட தாக்குதல்” எனக் கருதுகிறது.




கடந்த சில மாதங்களாக, தீவிர வலதுசாரி மற்றும் குடியேற்ற எதிர்ப்பு குழுக்களால் நடத்தப்பட்ட போராட்டங்கள், சமூகத்தில் பயத்தையும் கவலையையும் அதிகரித்துள்ளன.

கடந்த வார இறுதி போராட்டங்களில், “வீட்டிற்கு திரும்புங்கள்”, “சட்டவிரோதமாக வந்தவர்களை நாடு கடத்துங்கள்” என்ற பதாகைகள், வெறுப்பு மற்றும் எதிர்ப்பு உணர்வுகளை மேலும் தூண்டுவதாக இருந்தன.

புலம்பெயர்ந்தோருக்கு எதிரான உணர்வு அதிகரிப்பது ஏன் ?

புலம்பெயர்ந்தோர் நீண்ட காலமாக பிரிட்டனின் மக்கள் தொகை, கலாசாரம் மற்றும் பொருளாதார அடையாளத்தை தகவமைத்து வருகின்றனர். ஆனால், பிரெக்ஸிட்—க்குப் பிறகு, தீவிர வலதுசாரி குழுக்கள் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான விரோதப் போக்கை அதிகரித்துள்ளன.

ரிஷி சுனக் அரசாங்கத்தின் கீழ் நிகர இடப்பெயர்வு புதிய உச்சத்தை எட்டியது, இது மக்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

பிரிட்டனின் தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் படி, *2022*—ல் நிகர இடம்பெயர்வு (சட்டப்பூர்வமாக வருவோருக்கும் வெளியேறுவோருக்கும் இடையிலான வித்தியாசம்) *7,45,000* ஆக இருந்தது. இது பிரெக்ஸிட்—க்கு முந்தைய அளவை விட


HAPPY
Diwali
HAPPY
Diwallii
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA

மூன்று மடங்கு அதிகம்.

மார்ச் 2025—ல் முடிவடைந்த ஆண்டில், 1,09,343 பேர் பிரிட்டனில் புகலிடம் கோரி விண்ணப்பித்தனர், இது சமீப ஆண்டுகளில் மிக அதிக எண்ணிக்கைகளில் ஒன்று.

விண்ணப்பதாரர்களில் அல்பேனியர்கள் முதலிடத்தில் இருந்தனர், பின்னர் ஆப்கானியர்கள்,




பாகிஸ்தானியர்கள், இரானியர்கள் மற்றும் வங்கதேசத்ததவர். வளங்களின் பங்கீடு மற்றும் பொது பாதுகாப்பு குறித்த கவலைகளை தூண்டியுள்ள தவறான தகவல்கள், குடியேற்ற எதிர்ப்பு மற்றும் இஸ்லாமிய எதிர்ப்பு பிரசாரங்களை மேலும் தீவிரமாக்கியுள்ளன.

லண்டன், பர்மிங்காம் போன்ற முக்கிய நகரங்களில் உள்ள மக்கள் தொகையில், கிட்டத்தட்ட 40% புலம்பெயர்ந்தவர்கள். இதனால், அவர்கள் வாய்ப்புகளையும் வளங்களையும் கைப்பற்றுவதாக ஒரு உணர்வு பரவியுள்ளது.




தீவிர வலதுசாரிகள் இதை நாடு “முற்றுகையில்” இருப்பதற்கான அடையாளமாக சித்தரிக்கின்றனர்.

அதேநேரம், பொருளாதார அழுத்தங்கள், அதிகரிக்கும் செலவுகள், வீடுகள் பற்றாக்குறை, அரசியல் நிலையற்ற தன்மை ஆகியவை குடியேற்றத்தை எளிதாக குற்றம் சாட்டக்கூடிய இலக்காக மாற்றியுள்ளன. தெருக்களில் வரையப்பட்ட யூனியன் ஜாக் கொடிகள், லண்டனில் நடைபெறும் அணிவகுப்புகள் போன்ற தேசியவாத சின்னங்கள் இந்த பதற்றங்களை வெளிப்படையாக காட்டுகின்றன.

இந்த சூழல் மோசமடைய வாய்ப்புள்ளதா ?

மிகப் பெரிய பிளவுகளையும், பதற்றமான கட்டத்தையும் நோக்கி பிரிட்டன் செல்கிறது என்பதை நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன.

‘ஸ்டாண்ட் அப் டு ரேசிசம்‘ அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் சுமார் 5,000 மக்களை ஈர்த்தது. இது ராபின்சன் ஏற்பாடு செய்த கூட்டத்தில் ஒரு சிறிய பகுதி தான். இனவெறி எதிர்ப்பு இயக்கத்துடன் ஒப்பிடுகையில், குடியேற்ற எதிர்ப்பு இயக்கம் வேகமாக வலுவடைவதை இந்த வித்தியாசம் வெளிப்படுத்துகிறது.

லண்டனில் இவ்வளவு பெரிய பேரணி நடக்கும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை


METROPOLITAN
POLICE


JIMMY
Kimmel
CENSORED
LIVE!
I JUST FIRED DEMOCRACY
JIMMY KIMMEL
THAT'S NOT A JOKE
CHAPPATTE










என்று காவல்துறையினர் தெரிவித்தனர். அதில், 26 அதிகாரிகள் காயமடைந்தனர், 25 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், ஆகஸ்ட் மாதத்தில் நடந்த பல போராட்டங்களால், புகலிட விடுதிகளை விரைவாக மூடும் திட்டங்களை வேகப்படுத்துமாறு பிரிட்டன் அரசுக்கு அழுத்தம் அதிகரித்துள்ளது.

மறுபுறம், புகலிட விடுதிகள் மூடப்படும் போது, தொடர்பில்லாத குழுக்கள் ஒரே வீட்டில் வசதிகளைப் பகிர்ந்து கொள்ள நேரிடலாம். இது புதிய எதிர்வினையைத் தூண்டலாம் என்ற கவலை நிலவுகிறது.

தற்போது பிரிட்டனின் வெளிநாட்டினரின் குடியேற்றம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இதை எதிர்த்துதான் இந்தப் போராட்டம் வெடித்துள்ளது.

சமீபத்தில், இதே மாதிரியான போராட்டம் ஆஸ்திரேலியாவிலும் முன்னெடுக்கப்பட்டது.


சமீப காலமாகவே, உலக நாடுகளில், ஆட்சியாளர்களுக்கு எதிரான அதிருப்தி, ஆட்சி மாற்றம் போன்றவை எழுந்து வருகின்றன.

பிரிட்டனின் புலம்பெயர்ந்த சமூகங்களுக்கு, குடியேற்ற எதிர்ப்பு உணர்வுகள் வெறும் குரலாக இல்லாமல், முக்கிய அரசியல் பாதையாக மாறிவரும் சூழலைச் சமாளிப்பதே பெரும் சவாலாக மாறியுள்ளது.

# கருத்துப் ப(ா)டம்


நன்றி: தினமலர்





# சொல்றாங்க... சொல்றாங்க...



*"காஸாவுக்கான புதிய அமைதித் திட்டம்"*

**டிரம்ப்**

*(எப்படி? அங்கே இன்னும் கொஞ்சமாவது அமைதி இருந்தா அதையும் எப்படி அழிக்கிறதுன்னா?)*



*"நாம் படைத்த சாதனைகளை நாமே முறியடிக்கிறோம்!"*

**மு.க. ஸ்டாலின்**

*(ஆமா, அதென்னமோ உண்மைதான்! தி.மு.க. ஆட்சின்னாலே 'மொத்தமா' 'சாதனைகளை' அள்ளிடுவீங்களே?...)*



*"மோகன்லாலின் ஒப்பற்ற கலை வாழ்க்கைக்கு இது தகுதியான அங்கீகாரம்"*

**பினராயி விஜயன்**

*(தெற்கத்திப் பக்கம் ஒருத்தரைக் கூப்பிட்டு விருது கொடுத்ததுக்கு பாராட்டித்தான் ஆகணும்.)*



*"யூடுபர் 10 பேர் சேர்ந்து உட்கார்ந்துக்கிட்டு சினிமாவையே அழிக்க முயல்கிறார்கள்"*

**வடிவேலு**

*('திண்ணைப் பேச்சு வீணரிடம் ஒரு கண்ணாய் இருக்கணும் அண்ணாச்சி!...' எப்பவோ பாடி வைச்சிட்டாங்க உங்களுக்கு முன்னோடியா இருந்த கலைஞர்கள்.)*

# எங்கே

## இந்தியா – துருக்கி உத்தியில் ஒற்றுமை

துருக்கி யுக்ரேனுக்கு ட்ரோன்களை வழங்குகிறது, அதே நேரத்தில் ரஷ்யாவிலிருந்து எரிசக்தியையும் வாங்குகிறது.துருக்கி நேட்டோ உறுப்பினராகவும் இருக்கிறது, பிரிக்ஸ் உச்சிமாநாட்டிலும் கலந்துகொள்கிறது. மேலும், இஸ்ரேலை வெளிப்படையாக எதிர்க்கும் துருக்கி, சிரியாவில் அமெரிக்க ஆதரவு பெற்ற குர்திஷ் படைகளையும் தாக்கி வருகிறது.

ரஷ்யாவுக்கு எதிரான மேற்கத்திய பொருளாதாரத் தடைகளில் துருக்கி சேரவில்லை. மாறாக, பில்லியன் டாலர் மதிப்பில் ரஷ்யாவிலிருந்து எண்ணெயை வாங்கி வருகிறது.

இவ்வளவு விஷயங்களை ஒரே நேரத்தில் நிர்வகித்தாலும், அதிபர் எர்துவான் மீது டிரம்ப் கோபப்படவில்லை.

துருக்கி அதிபர் ரசீப் தய்யீப் எர்துவான் 2019 க்கு பிறகு முதல் முறையாக அமெரிக்காவுக்கு இருதரப்புப் பயணமாக வருகிறார். அவர் கடைசியாக 2019 இல் டிரம்பின் முதல் பதவிக்காலத்தில் வெள்ளை மாளிகைக்குப் பயணம் செய்தார்.ஜோ பைடனுடனான எர்துவானின் உறவு சீராக இல்லை. பைடன், எர்துவானை அடிக்கடி எதேச்சதிகார ஆட்சி நடத்துவதாக விமர்சித்தார். ஆனால் டிரம்ப், அதிபராகப் பதவி ஏற்பதற்கு முன்பு இருந்தே எர்துவானைப் புகழ்ந்து வருகிறார்.

2012 இல் இஸ்தான்புல்லில் டிரம்ப் டவரின் திறப்பு விழாவில், டிரம்ப் எர்துவானை, 'உலகம் முழுவதும் மதிக்கப்படுகிறார், மிகவும் நல்ல மனிதர், துருக்கி மக்களை சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்துகிறார்' என்று பாராட்டினார்.








# போகும்?

ரஜ்னிஷ் குமார்

அதிபராகப் பதவியேற்ற பிறகும், எர்துவானை தனது நண்பர் என்றும் சிறந்த தலைவர் என்றும் டிரம்ப் குறிப்பிட்டார். பிரதமர் மோதியையும் டிரம்ப் தனது நண்பர் எனக் கூறியிருந்தாலும், அந்த நட்பு இதுவரை இந்தியாவின் நலன்களை காப்பாற்ற உதவவில்லை.

ஆனால், டிரம்பின் முதல் பதவிக்காலத்தில் அமெரிக்கா, நேட்டோ கூட்டாளி துருக்கியை எஃப்—35 போர் விமானத் திட்டத்தில் இருந்து விலக்கியது. காரணம், துருக்கி ரஷ்யாவின் எஸ்—400 ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை வாங்கியிருந்தது. இது அமெரிக்காவை அதிருப்தியடையச் செய்தது.

வரும் செப்டம்பர் 25 அன்று எர்துவான் வெள்ளை மாளிகைக்கு வந்து டிரம்புடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவார்.

செப்டம்பர் 19 அன்று, டிரம்ப் ட்ரூத் சோஷியலில் இதை அறிவித்து, "துருக்கி அதிபருடன் பல்வேறு வணிக மற்றும் ராணுவ ஒப்பந்தங்களில் பணிபுரிந்து வருகிறோம். இதில் போயிங் விமானங்கள் வாங்குதல், எஃப் —16 ஒப்பந்தம் ஆகியவை அடங்கும். எஃப் —35 பற்றிய







பேச்சுவார்த்தைகளும் தொடரும். அனைத்தும் நேர்மறையாக அமையும் என நம்புகிறோம்“ என்று குறிப்பிட்டார்.

### இந்தியா மீது கடுமை, துருக்கி மீது மென்மை

இதற்கிடையில், அதிநவீன ஜெட் விமானங்கள் குறித்து டிரம்புடன் ஒரு உடன்பாட்டை எட்டியதாக எர்துவான் ஜூலை மாதம் கூறினார். டிரம்பின் பதவிக்காலத்தில் எஃப் —35 விநியோகங்கள் படிப்படியாகத் தொடங்கும் என்றும் எர்துவான் கூறினார்.

ஐசிஐஎஸ் ஆலோசனை நிறுவனத்தின் மூத்த எரிசக்தி ஆய்வாளரான ஆரா சபாடாக், செப்டம்பர் 15 அன்று தி பொலிட்டிக்கோ **(The Politico)** விடம், கடந்த ஆண்டு துருக்கி தனது மொத்த எரிவாயு இறக்குமதியில் 41 சதவிகிதத்தை ரஷ்யாவிலிருந்து வாங்கியதாகத் தெரிவித்தார்.

எண்ணெய் இறக்குமதியை நிறுத்துமாறு நேட்டோவிடம் டிரம்ப் வேண்டுகோள் விடுத்த போதிலும், துருக்கி தனது எண்ணெய் இறக்குமதியில் 57% ரஷ்யாவிலிருந்து பெறுவதாக கேப்லெர் கம்மோடிடிஸின் (**Kpler Commodities)** கச்சா எண்ணெய் ஆய்வாளர் ஹுமாயுன் ஃபாலக்ஷாஹி பொலிட்டிகோவிடம் தெரிவித்தார்.




இப்படிப்பட்ட சூழ்நிலையில், டிரம்ப் ஏன் இந்தியாவைப் போல எர்துவானிடம் கண்டிப்புடன் இல்லை என்ற கேள்வி எழுகிறதுதுருக்கி அதன் உத்தி சார்ந்த இருப்பிடத்தின் காரணமாக உலகளவில் ஒரு முக்கியமான நாடு.

இதன் விளைவாக, இது ஒரு முக்கிய நேட்டோ நட்பு நாடாகக் கருதப்படுகிறது. கருங்கடலுக்கான அணுகலை துருக்கி கட்டுப்படுத்துகிறது. ஐரோப்பா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையே ஒரு உத்தி சார்ந்த பாலமாகவும் துருக்கி கருதப்படுகிறது.

டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் மேற்கு ஆசிய ஆய்வு மையத்தின் பேராசிரியர் அஸ்வினி மகாபத்ரா கூறுகையில், “துருக்கியின் நிலைப்பாட்டை நேட்டோ புறக்கணிக்க முடியாது. அதனால் தான் எர்துவானின் தன்னிச்சையான போக்கை நேட்டோ பொறுத்துக்கொள்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை அப்படி இல்லை. இந்தியாவை கோபப்படுத்துவது அமெரிக்க நலனுக்கு எதிரானது என்று டிரம்ப் உணர்ந்திருந்தால், அவர் ஒருபோதும் 50 சதவிகித வரியை விதித்திருக்க மாட்டார்” என்கிறார்.

பேராசிரியர் மகாபத்ரா தொடர்ந்து கூறுகையில், “டிரம்பின் கூட்டாளிகள் யுக்ரேன் போரை மோதி போர் என்று அழைக்கின்றனர். துருக்கியும் சீனாவும் ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குகின்றன, ஆனால் அமெரிக்கா அவர்களைப் பற்றி ஒருபோதும் அப்படிச் சொல்லவில்லை.




துருக்கி யுக்ரேனுக்கு ட்ரோன்களை வழங்கி ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குகிறது, ஆனால் யுக்ரேனுக்கோ ரஷ்யாவுக்கோ எர்துவான் மீது எந்த கசப்பும் இல்லை. இந்தச் சூழலில், இது எர்துவானுக்கான ஒரு வெற்றி" என்று குறிப்பிடுகிறார்.

துருக்கியின் முக்கியத்துவம்

ரஷ்யா கூறியபடி எரிசக்தி இறக்குமதியை நிறுத்துவது துருக்கிக்கு சாத்தியமில்லை.

ஏற்கெனவே துருக்கியில் பணவீக்கம் வேகமாக உயர்ந்துள்ளது. இதற்குமேல் எரிசக்தி விலை அதிகரித்தால், மக்களிடையே அதிருப்தி அதிகரிக்கும். அதேசமயம், எர்துவான் இப்போதே அதிகாரத்தை விட்டு விலக விரும்பவில்லை.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மேற்கு ஆசிய ஆய்வு மையத்தின் முன்னாள் பேராசிரியர் ஏ. கே. பாஷா கூறுகையில், துருக்கி தனது இருப்பிடத்தால் மட்டுமல்ல, அதன் பெரிய ராணுவத்தாலும் நேட்டோவில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக ஒன்றாகச் செயல்பட்டால், துருக்கி நேட்டோவில் முக்கிய பங்கு வகிக்கும் எனக் கூறுகிறார்.

"ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் ஒரே நேரத்தில் எர்துவானுக்கு அழுத்தம் கொடுத்தன. இருந்தாலும் அவர் எவருக்கும் சரணடையவில்லை. துருக்கியின் நலனுக்காக சாதகமான முடிவுகளை எடுத்தார். பைடன் அவரைச் சந்திக்கவே இல்லை. ஆனால் டிரம்ப் வந்ததும் நிலைமை எர்துவானுக்கு சாதகமாக மாறியது. டிரம்ப் குடும்பத்திற்கு இஸ்தான்புல்லில் வணிகம் உள்ளது. இந்தியாவும் டிரம்ப் வந்தால் நமக்கு ஆபத்து இல்லை என்று நினைத்தது. ஆனால் அது தவறான கணிப்பு."




"துருக்கி அஜர்பைஜானின் குழாய் வழியாக இஸ்ரேலுக்கு எண்ணெய் அனுப்புகிறது. அதேசமயம், இஸ்ரேலை விமர்சிக்கிறது. எர்துவான் யாருடைய கட்டுப்பாட்டையும் ஏற்கவில்லை. சமீபத்திய ஆண்டுகளில் எல்லா சிக்கல்களையும் திறமையாக சமாளித்துள்ளார். சிரியாவில் பஷர் அல்—அசத் அரசாங்கம் அவருக்கு ஒரு பிரச்னையாக இருந்தது. ஆனால் இப்போது அதுவும் இல்லை. இந்தியாவுக்கு பல சிக்கல்கள் இருக்கின்றன. அதில் பெரிய பிரச்னை பாகிஸ்தான். இந்தியா தன்னிச்சையாக முடிவெடுக்கிறது என்று அமெரிக்கா நினைத்தவுடனே, அது பாகிஸ்தானைப் பயன்படுத்தத் தொடங்குகிறது. டிரம்ப் இப்போது அதைத்தான் செய்கிறார்"என்று பேராசிரியர் பாஷா கூறுகிறார்.

அதிபர் எர்துவான் மீதான டிரம்பின் தாராளவாத அணுகுமுறை குறித்து பேராசிரியர் மகாபத்ரா பெரிதாக ஆச்சரியப்படவில்லை.

மேற்கத்திய நாடுகளிடமிருந்து எர்துவானுக்கு அதிக கவனம் கிடைக்காத போதெல்லாம், அவர் ரஷ்யா மற்றும் இஸ்லாமிய நாடுகளை நோக்கித் திரும்புவார் என்று அவர் கருதுகிறார்.

எர்துவான் கொள்கையின் வெற்றி

“டிரம்ப் கொடுக்கும் கவனத்தை துருக்கி உடனே ஏற்றுக்கொள்கிறது. ஐரோப்பிய ஒன்றியம்




துருக்கியைச் சேர்க்கவில்லை. பைடனுக்கும் எர்துவானைப் பிடிக்கவில்லை. அதனால் எர்துவான் ரஷ்யாவுடனான உறவை அதிகரித்தது இயல்பானது”என்கிறார் பேராசிரியர் மகாபத்ரா.

“அமெரிக்காவுடன் புதிய எரிசக்தி ஒப்பந்தம் கையெழுத்திட துருக்கி தயாராகி வருகிறது. பொருட்கள் மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மூலம் அமெரிக்காவுடன் உறவை வலுப்படுத்த விரும்புகிறது. புதிய ஒப்பந்தத்தின் கீழ், துருக்கி அமெரிக்காவிடமிருந்து கூடுதலாக எல்என்ஜி வாங்க வாக்குறுதி அளிக்கலாம்“என்று ப்ளூம்பெர்க் தெரிவித்துள்ளது.

வாஷிங்டன் இன்ஸ்டிட்யூட்டின் துருக்கிய ஆய்வு திட்ட இயக்குநர் சோனர் காகப்டே, “ஒட்டோமானில் ஒரு சுல்தான்” என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.




அதில் அவர்,

“அதிகாரத்தில் இருந்த காலத்தில், எர்துவான் எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்ட வகையில் தன்னை வலுப்படுத்திக் கொண்டார். இராக், சிரியா மற்றும் லிபியாவில் அவர் பயனுள்ள ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, துருக்கியின் அரசியல் சக்தியை வெளிப்படுத்தினார். துருக்கி ஒரு ராஜீய சக்தியாக மாறத் தவறிய இடத்தில், அதன் ராணுவ வலிமை அதற்கு ஈடுசெய்தது”என்று எழுதியுள்ளார்.

2021 செப்டம்பரில், எர்துவான் ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்ற நியூயார்க் சென்றார். அப்போது அமெரிக்க அதிபர் பைடனைச் சந்திக்க விரும்பினார். ஆனால் சந்திப்பு ஏற்பாடு செய்யப்படவில்லை. இதனால் எர்துவான் கோபமடைந்து, ரஷ்ய அதிபர் புதினைச் சந்திக்கச் சென்றார்.

நிக்கி ஆசியாவிடம் பேசிய முன்னாள் அமெரிக்க ராணுவ அதிகாரி ரிச் ஓட்சன், எர்துவானின் வெளியுறவுக் கொள்கை பற்றி கூறுகையில், “துருக்கி நான்கு திசை சமநிலையைப் பேணும் கொள்கையைக் கொண்டுள்ளது. மேற்கில் ஐரோப்பா, தெற்கில் இஸ்லாமிய உலகம், கிழக்கில் யூரேசியா, வடக்கில் ரஷ்யா. எங்கு அச்சுறுத்தல் இருந்தாலும், எர்துவான் மறுபுறம் திரும்பி சமநிலைப்படுத்துகிறார்”என்றார்.

ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான ஆட்டத்தில் துருக்கி பெரும்பாலும் சிக்கிக் கொள்கிறது என்று பலர் நம்புகிறார்கள். துருக்கி


VARSHA™
GOOD WISHES FOR PROSPERITY AND HAPPINESS THIS DIWALI
HAPPY DIWALI
தீபாவளி வாழ்த்துக்கள்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு




நீண்ட காலமாக இந்த வகையான விளையாட்டை விளையாடி வருவதாகக் கூறப்படுகிறது. பெரும்பாலும், துருக்கி இந்த விளையாட்டில் ரஷ்யாவுடன் சமரசம் செய்ய வேண்டியிருக்கும்.

புதினுடன் எர்துவானின் நட்பு

2016 ஜூலை 15 அன்று, துருக்கிய ராணுவத்தின் ஒரு பிரிவு எர்துவானைப் பதவியிலிருந்து அகற்ற முயன்றது.




2016 ஆம் ஆண்டு துருக்கியில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு தோல்வியடைந்தபோது, அமெரிக்காவில் தஞ்சம் புகுந்திருந்த இஸ்லாமிய அறிஞரான ஃபெத்துல்லா குலன் தான் இதற்குப் பின்னால் இருப்பதாக எர்துவான் உறுதியாக நம்பினார். குலெனை ஒப்படைக்கவேண்டும்என்று துருக்கி நீண்ட நாட்களாக அமெரிக்காவிடம் கோரிக்கை வைத்திருந்தாலும், அது ஒருபோதும் நிறைவேறவில்லை. இதனால் எர்துவானுக்கு அமெரிக்கா மீதான சந்தேகம் அதிகரித்தது. ஆனால், குலென் கடந்த ஆண்டு அக்டோபரில் இறந்துவிட்டார்.

இந்த சூழ்நிலையை ரஷ்யா முழுமையாக பயன்படுத்திக் கொண்டது என்று கூறப்படுகிறது.

“குலன் அமெரிக்காவில் வசித்து வந்தார் என்பதை புதின் நன்கு அறிந்திருந்தார். துருக்கியில் பலர் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்குப் பின்னால் அமெரிக்கா இருப்பதாக விரைவாக நம்பினர்”என்று “எ சுல்தான் இன் ஒட்டோமான்” புத்தகத்தில் சோனர் காகப்டே புத்தகத்தில் எழுதியுள்ளார்.

“அந்த அரசியல் குழப்பத்தில் 250—க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அவர்களில் எர்துவானின் நெருங்கிய கூட்டாளிகள் சிலரும் இருந்தனர். அப்போது எர்துவானை தொடர்புகொண்ட முதல் உலகத் தலைவர் புதின் தான். அவர் எர்துவானை தனது சொந்த ஊரான செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கு வர அழைத்தார்”. “அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா உடனடியாக அழைக்கவில்லை. நான்கு நாட்களுக்குப் பிறகு தான் வாஷிங்டனில் இருந்து அழைப்பு வந்தது. அப்போதைய ஜான் கெர்ரிதான் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு மூன்று வாரங்கள் கழித்து எர்துவான் புதினைச் சந்திக்கச் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்குக்கு சென்றார்.

பின்பு, “புதினுடனான நெருங்கிய நட்பை விட்டுப் பிரிவது எர்துவானுக்கு எளிதாக இல்லை. இரு நாடுகளின் உறவுகளிலும் அதிகார ஏற்றத்தாழ்வு தெளிவாகத் தெரிந்தது. துருக்கி S—400 ஒப்பந்தத்திலிருந்து விலகினால், புதின் வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை தடுக்கலாம். இது துருக்கியின்









பொருளாதாரத்திற்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். எர்துவானின் சர்வதேச புகழையும் புதின் சேதப்படுத்தக்கூடும். ஆனால், அந்த புகழ் எர்துவானுக்கு துருக்கியில் நல்ல ஆதரவை ஏற்படுத்தியுள்ளது"என்று சோனர் ககாப்டே எழுதுகிறார்.ஆனால், பல ஆய்வாளர்கள், எர்துவான் சிக்கலான அரசியல் மற்றும் சர்வதேச பிரச்சனைகளை சமாளிப்பதில் திறமையானவர் என்று நம்புகின்றனர். கடந்த இருபது ஆண்டுகளில் அவர் பல கடினமான சூழ்நிலைகளை சந்தித்து, இன்னும் வலிமையுடன் முன்னேறியுள்ளார். 2003 க்கு முன்பு, துருக்கி பெரும்பாலும் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. நவீன துருக்கியின் நிறுவனர் முஸ்தபா கெமால் அட்டாடுர்கே ராணுவத்தில் இருந்து வந்தவர். ராணுவம் துருக்கிய பொருளாதாரத்திலும் பெரும் செல்வாக்கு கொண்டிருந்தது. ஆட்சிக் கவிழ்ப்பு நிகழ்வதும் சாதாரணமாக இருந்தது. ஆனால், இந்த நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தது எர்துவான் தான்.




## சங்கத்தமிழர் வாழ்வியலில் சந்தனம் !

பண்டைத் தமிழகத்தில் சந்தனமரக் காடுகள் நிறையவே இருந்திருக்கின்றன. பண்டைத் தமிழர்கள் சந்தனத்தின் மணத்தையும், அதன் மருத்துவக் குணத்தையும் அறிந்து வைத்திருக்கின்றனர். அதன் காரணமாக, தங்களது அன்றாட வாழ்வில் சந்தனத்தைப் பல வழிகளில் பயன்படுத்தியும் இருக்கின்றனர்.

சந்தன மரம்

ஒரு சந்தன மரம் 10 மீட்டர் (33 அடி) வரையிலும் வளரக் கூடியது மட்டுமல்ல, மிகமிக மெதுவாகவே வளரக் கூடியது. ஒரு சந்தன மரம் பயனுள்ள மரமாக மாறுவதற்கு 30 ஆண்டுகள் வரையிலும் தேவைப்படும். மண்ணிற்கு மேல் வளர்ந்திருக்கும் மரமும், மண்ணுக்குக் கீழ் பரவியிருக்கும் வேர்களும் மஞ்சள் நிறத்தில் நறுமணம் கமழும் எண்ணெயைக் கொண்டுள்ளன.

பல ஆண்டுகள் நீடித்திருக்கும் அந்த நறுமணம் காரணமாகவே, வீட்டிற்குப் பயன்படும் மரத்திலான பொருள்கள், நகைப்பெட்டிகள் போன்றவை வெள்ளைச் சந்தனக் கட்டைகளால் செய்யப்படுகின்றன. பொடியாக்கப்படும் சந்தனம் ஆடைகளின் நறுமணத்திற்கும், மேனியில் பூசுவதற்கும், வழிபாட்டிற்கும் பயன்படுகின்றது. ஈமச்சடங்குகளிலும் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்துவதுண்டு.




சந்தன எண்ணெய், நறுமணக் குப்பிகளிலும், குளிப்பதற்கான மணம் கமழும் சோப்புக் கட்டிகளிலும், வாசனைப் பத்திகளிலும், மெழுகு திரிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. சந்தன எண்ணெயின் பயன்பாடு மருத்துவத்திலும் நீள்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சீனர்கள் சந்தன எண்ணெயை மருந்தாகப் பயன்படுத்தும் மருத்துவ முறைகளை அறிந்து வைத்திருந்தனர். தமிழ்நாட்டில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஆலைகள் உதகமண்டலம், கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளில் இன்றும் இயங்கி வருகின்றன.


செஞ்சந்தன மரம்

விளைந்த சந்தன மரத்தின் உட்புறம் செறிவான சிவப்பு நிறத்தில் இருக்குமானால் அதுவே செஞ் சந்தன மரம். வெள்ளைச் சந்தன மரத்தை விடவும் செஞ்சந்தன மரம் மிகவும் மெதுவாக வளரக் கூடியது. மிகவும் அரிதாகக் காணப்படுவதும் ஆகும். பெரும்பாலும் செம்மண் நிலப்பரப்பிலேயே வளர்கின்றது. வெட்டப்பட்ட செஞ்சந்தன மரத்துண்டின் சிவப்பு நிறம் நாள் ஆக ஆக மேலும் மேலும் கடும் செவ்வண்ணம் பெற்று அழகுடன் மிளிர்கின்றது.

அதன் காரணமாகக் கட்டடங்களின் உட்புற வேலைப்பாடுகளில் அழகு செய்வதற்கு இம்மரங்களைப் பெரிதும் விரும்புகின்றனர். அதன் காரணமாகவும் இவற்றின் தேவை அதிகரிக்கின்றது. மிகவும் அரிதாகக் காணப்படுவதாலும், பல்வேறு வழிகளில் பயன்படுவதாலும், செஞ்சந்தன மரங்கள் உலகளவில் மிகப் பெரிய சந்தை மதிப்பைக் கொண்டுள்ளன.

செஞ்சந்தன மரங்கள் இந்தியாவில், ஆந்திர மாநிலத்தின் சேஷாசலம், வெல்லிகொண்டா, லங்கமாலா, பலகொண்டா ஆகிய கிழக்கு மலைத்தொடர் பகுதிகளில் மட்டுமே வளர்கின்றன. செஞ்சந்தனம் ஓர் உள்நாட்டுத் தாவரம். வேறு எங்கும் இதனைக் காண முடியாது. தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களின் கிழக்கு மலைத் தொடர்களிலும் ஒரு சிறிது நிலப்பரப்பில் வளர்க்கப்படுகின்றன.

செம்மரம் வெட்டியதற்காக இருபது தமிழர்கள் ஆந்திர காவல்துறையால் சுட்டுக்கொல்லப்பட்டது



நினைவிருக்கலாம். செம்மரம் என்பது செஞ்சந்தன மரத்தையே குறிப்பதாகும். இது தங்கத்தை விடவும் மதிப்பு மிகுந்ததும் ஆகும்.

சு.இராமசுப்பிரமணியன்

சந்தன மரம் ஓர் ஒட்டுண்ணி மரம்

மண்ணிற்கு மேல் வளர்ந்திருக்கும் பெரிய மரங்களின் கிளைகளில் பற்றிப் படர்ந்திருக்கும் பிற தாவர வகையினை நம்மில் பலரும் பார்த்திருப்போம். அத்தாவரங்கள் தாங்களாகவே, தங்களுக்குத் தேவையான உணவு தயாரிப்பதில்லை. அவை எந்த மரத்தின் மீது அல்லது பிற செடிகொடிகளின் மீது படர்ந்திருக்கின்றனவோ, அவை தயாரிக்கும் உணவைத் திருடி உயிர் வாழ்பவை. அப்படிப்பட்ட தாவரங்கள் ஒட்டுண்ணித் தாவரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இரண்டு வகையான ஒட்டுண்ணித் தாவரங்கள் உள்ளன. ஒருவகை ஒட்டுண்ணித் தாவரங்கள் தங்களுக்குத் தேவையான உணவு முழுவதையும், அவை சார்ந்திருக்கும் பிற தாவரங்களிலிருந்து பெறுகின்றன. மற்றொரு வகை, பகுதி உணவைப் பிற தாவரங்களிலிருந்து பெறுகின்றன. இந்த இரண்டாம் வகை ஒட்டுண்ணித் தாவரம் மண்ணுக்குக் கீழ் படர்ந்திருக்கும் வேர்களால் அருகில் உள்ள மரங்களின் வேர்களில் உள்ள உணவைத் திருடுகின்றன.






அதற்காக, இந்த வகையான ஒட்டுண்ணித் தாவரங்களின் வேர்கள், அருகில் உள்ள பிற மரங்களின் வேர்களுடன் பின்னிப் பிணைந்திருக்கும்.

இந்த இரண்டாம் வகை ஒட்டுண்ணி மரங்களின் விதைகள் முளைத்து வளர்வதே கூட மற்ற தாவரங்களிலிருந்து முற்றிலும் மாறுபடுவதாகும். மண்ணில் கிடக்கும் விதைகள் முளைப்பதற்குச் சரியான ‘கொடை — மரத்தை எதிர்நோக்கிப் பல ஆண்டுகள்கூடக் காத்துக் கிடக்கும். கொடை — மரங்கள் வளர்வதற்கேற்ற சூழல் நிலவும் நிலப்பரப்பில்தான் ஒட்டுண்ணித் தாவரங்களின் விதைகள் காத்துக்கிடக்கின்றன.

அருகில் கொடை—மரம் வளர்ந்திருக்கிறது என்பதை அம்மரத்தின் வேர் தங்களுக்கு அருகில் நீண்டு, அவை வெளிப்படுத்தும் ஒருவித ஆவியாகும் வேதிப்பொருளையும், நிறத்தையும் ஒரு சைகை அமைப்பு வழியாக ஒட்டுண்ணித் தாவரத்தின் விதைகள் அறிந்துகொள்கின்றன. அதன் பிறகு முளைத்து வளர ஆரம்பிக்கின்றன. அப்படி வளரும்போதே, அவற்றின் வேர்கள் உணவளிக்கும் மரங்களின் வேர்களுடன் பின்னிப் பிணைந்து விடுகின்றன.

சந்தன மரம் இந்த இரண்டாம் வகை ஒட்டுண்ணி மரம் ஆகும். பொதுவாக ஒட்டுண்ணித் தாவரங்கள் தரைக்கு மேல் காணப்படுவதால் அவற்றை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் சந்தன மரம் மண்ணுக்கு அடியில், தனது வேர்களால் அருகில் இருக்கும் மரங்கள் அவற்றின் வேர்களில் சேமித்து வைத்திருக்கும் உணவையும் தண்ணீரையும் களவாடி உயிர் வாழ்கிறது என்னும் உண்மை நமக்குத் தெரிந்திருப்பதில்லை.

ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில், ஒரு சந்தன மரத்தை நடுவில் வைத்து, சுற்றியும் நான்கு அகத்தி மரங்களை நட்டு விடுவார்களாம். சந்தன மரத்தின் வேர்கள், சுற்றியுள்ள அகத்தி மரங்களின் வேர்களிலிருந்து ஊட்டச்சத்தை உறிஞ்சி எடுத்துக்கொண்டு நன்றாக வளரும் என்னும் அரிய தாவரவியல் தகவலும் உள்ளது.

சந்தனத்தின் நறுமணத்திற்குப் பின்னால் இப்படி ஓர் அறிவியலும் உள்ளது. தங்களைக் கொடைவள்ளல்களாக, பெரிய மனிதர்களாக வெளி உலகுக்குக் காட்டிக் கொள்பவர்கள் அவர்களது அகவாழ்க்கையில், சந்தனம் போல மற்றவர்களைச் சுரண்டிப் பொருள் சேர்க்கும் குணம் மறைந்திருக்கலாம்.

சங்ககாலத் தமிழரின் வாழ்வியலில் சந்தனத்தின் பயன்பாடு

பண்டைத் தமிழ் மக்கள் சந்தனத்தைத் தங்கள் அன்றாட வாழ்வில் பல வகைகளில் பயன்படுத்தியிருக்கின்றனர். சந்தனக் கட்டையை நீர் விட்டு உரசிச் சந்தனக் குழம்பாக்கி மார்புகளில் பூசியிருக்கின்றனர். சந்தனக் கட்டைகளை சிறுசிறு துண்டுகளாக்கி, இழைத்து, துளையிட்டுக் கோர்த்துச் சந்தன மாலையாகக் கழுத்தில் அணிந்திருக்கின்றனர்.

அந்தக் காலத்தில் உணவு சமைப்பதற்கு விறகுகளைத்தானே பயன்படுத்தினர். பண்டைத் தமிழர் சந்தனக்கட்டைகளை விறகாகவும் பயன்படுத்தியிருக்கின்றனர். சந்தனம் நறுமணம் வீசுவது மட்டும் அல்ல, உடல் சூட்டைக் குறைப்பதும் ஆகும்.

சங்கப்பாடல்களில் சந்தன மரம் ‘சிறியிலை சாந்தம்’, சந்தனம், சந்தம், ஆரம்’ என்னும் சொற்களால் குறிப்பிடப்படுகின்றது. சந்தனத்தின் பயன்பாடு பற்றியும், சந்தன மரம் பற்றியும் பல பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கே காணலாம்.








சந்தன மரமும், அதன் நறுமணமும்

சந்தன மரத்தின் ஒரு சிறப்புச்செய்தியை நற்றிணை 5—வது பாடல் தருகிறது.

“நிலம்நீர் ஆரக் குன்றம் குழைப்ப
அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர்கால் பரப்பக்
குறவர் கொன்ற குறைக்கொடி நறைப்பவர்
நறுங்காழ் ஆரம் சுற்றுவன அகைப்பப்
பெரும்பெயல் பொழிந்து தொழில எழிலி
தெற்குஏர்பு இறங்கும் அம்சிரக் காலையும்
அரிதே காதலர் பிரிதல் இன்றுசெல்
இருளையர் தரூஉம் வாடை யொடு
மயங்கிதழ் மழைக்கண் பயந்த தூதே”
( நற்றிணை, பாடல் 5)

தலைவன், தலைவியைப் பிரிந்துசெல்வதை அவளுக்கு இலைமறை காய்மறையாகத் தெரிவிக்கிறான். அதனை அறிந்த உடன் தலைவியின் உடல் மாற்றமடைகிறது. கண்களில் நீர் பெருகி வழிகிறது. அக்கண்ணீரே தூதாகச் சென்று தலைவன் தலைவியைப் பிரியாதிருக்கச் செய்யும் என்று தோழி உரைக்கும் பாடல். அது வாடைக்காலம். வாடைக்காலத்தில் பிரிந்துசெல்வது அறம் அன்று என்றும் உணர்த்தும் பாடல்.

நீரின்றி வறண்டு கிடந்த நிலம், மழை பெய்ததால் குளிர்ந்தது. மலைக்குன்றம் குழை, தழைகளால் பசுமை நிறைந்தது. சுனைகள் நிறைந்து மழைநீர் வாய்க்கால்கள் வழியாக ஓடி குறவர்களின் வயல்களில் பாய்ந்ததால் பயிர்கள் செழித்து வளர்ந்தன. நிலமும், குன்றமும் மழை நீரை ஆர உண்டதால், கானம் குழைந்து கவின்மிகு வனப்பினை எய்தியது. அப்படிப் பசுமைபெற்ற கானகம் விண்ணில் நகரும் மழை முகிலைத் தன்கண் ஈர்த்துப் படிவித்து பெருமழையைத் தோற்றுவிக்கும். மழை முகில் தெற்கு நோக்கி நகர்கிறது என்பது அது வாடைக்காலம் என்பதை உணர்த்துகிறது. இயற்கையின் இந்தச் சங்கிலித்தொடர் இயல்பைப் புரிந்துகொண்டிருந்த பழந்தமிழர் கானகத்தைப் பாதுகாத்தனர்.

அதனைப் புரிந்திருந்தாலும் இன்றைய மனிதர் தமது சுயநலம் ஒன்றையே கருத்திற்கொண்டு காட்டை அழித்து, பருவமழையைத் தடுத்து, நாட்டின் சீர்கேட்டிற்கும் வழிவகுத்து விட்டனர்.

‘நறை’ என்பது நறுமணம் கமழும் ஒரு கொடி. குன்றக்குறவர் வெட்டி எறிந்திருந்த அந்த நறைக்கொடி (குறைக்கொடி), மழை பெய்ததில் வேர் விட்டுத் துளிர்த்து அருகில் இருந்த சந்தன மரத்தைச் சுற்றிப் படர்ந்தன. தனியாக நிற்கும் சந்தன மரத்தைவிடவும், நறுமணம் கமழும் நறைக்கொடி சுற்றிய சந்தன மரத்தின் மணம் அதிகம் என்று இப்பாடல் கூறுகிறது. மண்ணில் வீழ்ந்த நறைக் கொடியின் வேரும் சந்தன மர வேர்களைச் சுற்றியிருக்கும் என்பதாகவும் பொருள் கொள்ளலாம்.

நறைக்கொடி சந்தன மரத்தைச் சுற்றி சந்தன மரத்திற்குக் கூடுதல் மணம் சேர்ப்பதுபோல, தலைவி தலைவனைச் சார்ந்து ஒழுகி அவனது குடும்பத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று பொருள் கொள்ளலாம். நறைக்கொடி வேர்களும், சந்தன மர வேர்களும் பின்னிப் பிணைந்துள்ளன என்னும் உவமை, தலைவி தலைவனுடன் சேர்ந்தால் மட்டுமே அவளது வாழ்வு வளம்பெறும் என்றும் ஆகிறது.

இந்த உவமையில், சந்தன மரம் ஓர் ஒட்டுண்ணி மரம் என்னும் தாவரவியல் உண்மையும் பொதிந்துள்ளது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் சந்தன மரத்தின் வேர்கள் மற்ற மரங்களின் வேர்களுடன் பிணைந்திருக்கும் அறிவியலை அறிந்திருக்கிறார்கள் என்பது சிறப்பு.




ஆனால் அது பிற மரங்களின் வேர்களில் உள்ள சத்துகளை உறிஞ்சி எடுப்பதற்கு என்னும் அறிவியல் அவர்களுக்குப் புரியாமல் இருந்திருக்கலாம். ஒருவேளை அப்படிப் புரிந்திருந்தாலும் அந்த உவமை சரிதான். அருகில் உள்ள மரங்களின் வேர்களோடு பின்னிப் பிணைந்திருப்பதால்தான் சந்தன மரம் உயிர்வாழ முடிகிறது. அதுபோல தலைவனுடன் இணைந்தால் மட்டுமே தலைவியின் வாழ்வு வளம்பெறும், நலமும் பெறும் என்று ஆகிறது.

சந்தன விறகு

“ஓங்குமலை நாட ஒழிகநின் வாய்மை
அறுகால் பறவை அளவில பறத்தலின்
சாந்த ஞெகிழி காட்டி
ஈங்கா யினவால் என்றிசின் யானே”
(நற்றிணை, பாடல் 55)

களவு வாழ்க்கையில் தலைவன் தலைவியுடன்கூடி இன்பம் துய்க்கிறான். அதற்காக ஆபத்துகளையும் பொருட்படுத்தாமல் நீண்ட காட்டுவழியில் பயணித்து வருகிறான். தலைவியின் களவு வாழ்க்கையை அவளது தாய் சந்தேகம் கொள்கிறாள். எப்படி என்றால், காட்டில் தலைவன் தலைவியைத் தழுவிக் கூடியதால் அவளது கூந்தல் கூடுதல் மணம் பெற்றது. அதனால் அவளது கூந்தலைச் சுற்றி நிறைய வண்டுகள் பறந்தன. அதனைக் கண்ட தாய் சந்தேகம்கொண்டு கேள்வி எழுப்புகிறாள்.

தலைவி, தோழியைப் பார்க்கிறாள். தோழி, அடுப்பில் எரிந்துகொண்டிருந்த சந்தனக் கொள்ளியை எடுத்துக்காட்டி அதன் நறுமணம் காரணமாகவே வண்டுகள் (அறுகால் பறவை) பறக்கின்றன என்று பொய்சொல்லித் தலைவியைக் காப்பாற்றுகிறாள். இப்படி எத்தனை நாளைக்குப் பொய் சொல்ல முடியும் என்று சொல்லும் தோழி, தலைவியை விரைந்துவந்து மணம் செய்துகொள்ளவேண்டும் என்று தலைவனுக்கு அறிவுறுத்துகிறாள்.

இந்தப்பாடலில் இரண்டு சிறப்புச்செய்திகள் உள்ளன. ஒன்று மெய்யுறுபுணர்ச்சி காரணமாக பெண்ணுடல் மணம் வீசும் என்பது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் கண்டுணர்ந்த இம்மெய்யறிவு, இப்போது நம்காலத்து அறிவியலால் கண்டறியப்பட்டுள்ளது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சந்திக்கும்போது அவர்களது முதல் பார்வையால் மட்டுமல்ல, முதல் மெய்ம்மணத்தாலும் காதல் உருவாகும் என்று நவீன அறிவியல் கண்டுபிடித்துள்ளது. இரண்டாவதாக சந்தனக்கட்டை அடுப்பெரிக்க விறகாகப் பயன்பட்டிருக்கிறது என்பதாகும்.

சந்தனமரத்தின் மலர்களுக்கும் மணம் உண்டு
“சாந்த மரத்த பூழில் எழும்புகை
கூட்டுவிரை கமழும் நாடன்
அறவற்கு எவனோ நாம்அகல்வு அன்னாய்”
(ஐங்குறுநூறு, பாடல் 212)

தலைவியின் பெற்றோரிடம் தலைவன் பெண் கேட்கிறான். பெற்றோர் பெண் கொடுக்க மறுக்கின்றனர். அந்தவேளையில் தோழி குறுக்கிட்டுத் தலைவியின் களவு வாழ்க்கையை வெளிப்படுத்துகிறாள். தலைவனின் மலைவளம் பற்றி எடுத்துரைக்கிறாள். சந்தன மரங்களுக்கு இடைப்பட்ட நிலத்தில் அகில் மரங்கள் உள்ளன. அகில் மரங்களை நெருப்பு வைத்துச் சுடுவதால் அகில்புகை எழும். அதன் மணமும் சந்தன மரத்தில் பூத்திருக்கும் பூக்களின் மணமும் சேர்ந்து கூட்டுமணம் கமழும் வளமான காட்டுக்கு உரியவன் தலைவன் என்று தோழி தலைவனின் பெருமையை எடுத்துரைக்கிறாள். அகில், சந்தன மரங்கள் அருகருகே வளர்ந்திருந்த காடுகள் நம் தமிழ் மண்ணில் முன்பு இருந்திருக்கின்றன என்னும் செய்தியும் நமக்குத் தெரிய வருகிறது.

செஞ்சந்தனம்
“மலைசெஞ் சாந்தின் ஆர மார்பினன்
மறைத்தற் காலையே அன்றே
திறப்பல் வாழி வேண்டு அன்னைநம் கதவே “
(குறுந்தொகை, பாடல் 321)

தலைவன், அவனது மலையில் உள்ள செந்நிறச் சந்தனத்தின் சாந்தினைக் குழைத்து மார்பில் பூசியவன், ஆரம் அணிந்தவன். புலிகள் வாழும் மலைப்பாதையில் தலைவன் வந்துபோகிறான். இதற்கு மேலும் இக்களவு வாழ்க்கையை நீட்டிக்க இயலாது. அதனால் அதனை அன்னைக்கு வெளிப்படுத்தப் போவதாகத் தோழி தலைவியிடம் உரைக்கிறாள். இங்கு தோழி அறத்துடன் நின்றாள் என்றும் ஆகிறது. இப்பாடலில் ‘செஞ் சாந்து’ என்று வருவதால், அது செஞ்சந்தன மரக்குழம்பு என்று பொருள் கொள்ளலாம். எனில் பண்டைத்தமிழகத்தில், செஞ்சன மரங்களும் இருந்திருக்கின்றன என்னும் செய்தியும், அவற்றின் பயன்பாடு தமிழ் மக்களிடம் இருந்திருக்கிறது என்பதும் இப்பாடலின் வழியே தெரிய வருகிறது. இப்போது செஞ்சந்தன மரங்கள் வளரும் மலைப்பகுதி முன்பு தமிழகத்தின் பகுதியாகவும் இருந்திருக்கலாம்.

சந்தனச்சாந்தும், சந்தனம் உரைக்கும் வடநாட்டு






வெண்ணிற வட்டக் கல்லும்
“பல்நாள் எவ்வம் தீர பகல்வந்து
பசுமீன் தொடுத்த வெண்ணெல் மாத்தயிர்மிதி
மிதவை நினக்கே, மாஆர் குனவே
வடவர் தந்த வான்கேழ் வட்டம்
குடபுல உறுப்பின் கூட்டுபு நிகழ்த்திய
வண்டு இமிர் நறுஞ்சாந்து அணிகுவம்
தெண்கடல் பரப்பின் எம்உறைவுஇன் ஊர்க்கே “
(அகநானூறு, பாடல் 340)

தலைவன் நெய்தல் நிலத்துத் தலைவியைப் பகற்குறியில் சந்தித்துவிட்டு ஊர் திரும்ப முனைகிறான். அப்போது அவன் இரவில் தலைவியின் ஊரில் தங்கிச்செல்ல வேண்டும் என்று தோழி, தலைவிக்காக வேண்டுகிறாள். அப்படித் தங்கினால் தலைவனை அவர்கள் எப்படிச் சிறப்புடன் அன்பு செய்வார்கள் என்பதையும் தோழி உரைக்கிறாள்.

“பச்சைமீனை விற்றுப்பெற்ற வெண்ணெல்லின் மாவில் தயிர்விட்டுப் பிசைந்த கூழினைக் குதிரைகளுக்குக் கொடுப்போம். வட நாட்டவர் கொண்டுவந்து தந்த வட்டக்கல்லில் மேற்கு மலையான பொதிய மலையில் விளைந்த சந்தனக்கட்டையை உரைத்து, அதனுடன் மற்ற நறுமணம் வீசும் பொருட்களையும் சேர்த்து அரைத்துக் கிடைக்கும் சாந்தினை உன் மார்பில் பூசுவோம்” என்று சொல்கிறாள் தோழி.

பொதியை மலையில் விளையும் சந்தனம் மணம் மிகுந்தது என்பதும், வடநாட்டிலிருந்து வெள்ளைநிறமுடைய வட்டக்கற்கள் சந்தனம் உரைப்பதற்குத் தமிழகத்திற்கு வந்திருக்கின்றன என்னும் செய்தியும் இப்பாடலில் இருந்து நமக்குக் கிடைக்கிறது. ‘மேற்கு மலை’ என்று பொதிய மலையைக் குறிப்பிடுவதால், தலைவியின் ஊர் கிழக்குக் கடற்கரையில் இருந்திருக்கிறது என்றும் நாம் புரிந்துகொள்ளலாம்.

பாண்டிய மன்னன் அணிந்திருந்த சந்தனமாலை:
“தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும்
முனைதிறை கொடுக்கும் துப்பின், தன்மலை
தெறல்அரு மரபின் கடவுட் பேணி
குறவர் தந்த சந்தின் ஆரமும்
இருபேர் ஆரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்.. “
(அகநானூறு, பாடல் 13)

இன்றைய தமிழ்நாட்டின் வடமேற்கு சேரநாடு, வடகிழக்கு சோழநாடு. அதனால் தெற்கில் இருந்த நாடு பாண்டிய நாடு (இது பாவாணர் கூற்று). எனவே பாண்டிய மன்னன் தென்னவன் என்றும் அழைக்கப்பட்டான். முத்துக்குளிக்கும் துறையான கொற்கையும் (தன்கடல்), பொதியமலையும் (தன்மலை) பாண்டிய நாட்டுக்குரியவை. கொற்கை முத்துகளைக் கோத்த முத்துமாலையையும், பொதியை மலைக்குறவர்கள் முருகனை வேண்டிக் கொண்டுவந்து கொடுத்த சந்தன மாலையையும் (ஆரத்தாலான ஆரம்) சேர்த்துப் பாண்டிய மன்னன் தனது மார்பில் அணிந்திருக்கிறான். சந்தனமரத்தை இழைத்து, சிறுசிறு மணிகளாக்கிக் கோத்ததுதான் சந்தன மாலை.

சந்தனம் இன்று

பண்டைத் தமிழர்கள் அகில், சந்தனம் போன்ற நறுமணப் பொருள்களைப் பெரியளவில் தங்கள் வாழ்வில் பயன்படுத்தியிருக்கின்றனர். எனக்குத் தெரிந்து தாழம்பூ நறுமணத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. அந்தக்காலங்களில் பட்டுச்சேலைக்குள் தாழம்பூவின் மெல்லிய இதழ்களையும் மகரந்தத்தையும் இட்டு வைத்திருப்பார்கள். நீண்ட காலத்திற்குப் பிறகும் பட்டுச்சேலை நறுமணத்துடன் இருக்கும். பூச்சிகளிடம் இருந்து பாதுகாப்பாகவும் இருக்கும்.

இன்று நாம் இயற்கையிலிருந்து வெகுதூரம் விலகிவந்துவிட்டோம். அரசுகளின் துணையுடன் பெரும் கார்ப்பரேட் முதலாளிகள் காடுகளையும், வனங்களையும் அழித்துவருவதால், மலையில் சந்தன மரங்கள் அருகிவிட்டன. சந்தன மரங்களை வெட்டி, அவற்றைத் துண்டுகளாக்கி விற்றுப் பிழைக்கும் கூட்டமும் பெருகிவிட்டது. அதனால் இன்று சந்தன மரங்களைக் காண்பது அரிதாகிவிட்டது. மக்களிடம் சந்தனத்தின் பயன்பாடும் குறைந்துவிட்டது.




நான் பள்ளியில் படிக்கும் சிறுவனாக இருந்த காலகட்டத்தில், கோடையில் சந்தனத்தைக் குழைத்து மார்பிலும், முதுகிலும், கைகளிலும் பூசும் வழக்கம் இருந்தது. உடற்சூட்டைக் குறைத்துக் குளிர்ச்சி பெறவே அப்படிச் செய்தோம். அதோடு கோடையில் வரும் வேர்க்குரு வராமலும் அது பார்த்துக்கொண்டது. இன்றும் சந்தனம் வழிபாட்டுப் பொருள்களில் இடம் பெற்றுள்ளது. தவிரவும் அப்போதெல்லாம் ஆண்களும், பெண்களும் நெற்றியில் சந்தனத்தைப் பொட்டாக வைத்துக்கொள்வதும், கீற்றாகத் தீட்டிக்கொள்வதும் வழமையாக இருந்தது. இன்று அப்பழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களிடம் இருந்துவந்த வாழ்வியல் பண்பாடு சார்ந்த ஒரு பயன்பாட்டு அறிவியல் பிற்காலத்தில் குறிப்பிட்ட மத அடையாளமாக மாற்றப்பட்டுவிட்டதற்குத் தமிழர்கள் அனைவருமே காரணம் ஆவர்.



# காலத்தை வெல்லும் சிரிப்பு

கண்ணாடி வளையல்களின்
கலகலப்பையும் மீறி
சில சத்தங்கள்!
ஒன்றுமில்லை என்று
சொல்வதற்கில்லை
காரணம்...
கன்னியின் சிரிப்பாயிருக்கிறது!

சிரிப்பின் காரணம்
எதுவாயிருக்கும்?
அது சம்பந்தப்பட்ட
இதயத்திற்கே வெளிச்சம்!
இருந்தும்... இருந்து...
கன்னியின் சிரிப்பு
சில இளைஞர்களை
தினமும் குளிக்க வைத்து
மெருகேற்றும்...

இன்னும் சிலரை
அனுதினமும்
ஆலயம் தொழ வைக்கும்...
சில நோஞ்சான்களையும்
புஜபல பராக்கிரம பலசாலியாக
மாற்ற பாடாய் படுத்தும்...
சின்சியராய்
சிலரை கம்ப்யூட்டர் கிளாஸ்
சேரச் செய்யும்!
சில பவர் கட் சமயங்களில்
புழுக்கம் குறைக்கப் பயன்படும்
‘கலி’ காலத்தில்
சில கன்னி சாமிகளின்
விரதத்தைத் கலைக்கும்!
சில அலுவலகத்து
ஆடவர்களுக்கு
கிரியா ஊக்கியாகவுமிருக்கும்!

நகராத சில கோப்புகளை
நகர்த்தி காரியம் சாதிக்கும்!...
குமரிலிருந்து காஷ்மீருக்கான
பயணத்தைக் கூட
சிகரெட் செலவின்றி இனிதாக்கும்!
சில நேரம் காரணமின்றித்
திரும்பிப் பார்க்க வைக்கும்!...
‘ஐம்பதிலும் ஆசை வரும்’
என்கிற பழமொழியை
மெய்ப்பிக்க பார்க்கும்!...

இப்படிப்பட்ட
கன்னியின் சிரிப்பை
பொதுநலனுக்குப்
பயன்படுத்த தெரிந்து விட்டால்...
நாடாளுமன்றமும்
சட்டமன்றமும்
சண்டை சச்சரவின்றி
நடந்து முடியும்!...
இந்திய நதிகள் அனைத்தையும்
இணைத்து
தேசியமயமாக்கிவிடலாம்!...
உலகுக்குத் தேவையான
ஒட்டுமொத்த மின்சாரமும்
உள்நாட்டிலேயே
தயாரித்து விட முடியும்!...

**புவனகிரி கல்யாண்**




தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS
VARSHA™




# பூ நாகம்

விமலா ரமணி

நந்திவர்மனின் அந்தரங்க மந்திர ஆலோசனைக்கூடத்தில், அரசின் முக்கியப் பதவியிலிருக்கும் அனைத்து அமைச்சர்களும் ஒன்று சேர்ந்து அமர்ந்திருந்தனர்.

நடுவில் இருந்த ரத்தின சிம்மாசனத்தில், அரசன் நந்திவர்மன் அமர்ந்திருந்தான். அப்போது வாயில் காப்போன் வந்து, திருமுனைப்பாடி சிற்றரசர் நரசிங்கமுனையார் வந்திருப்பதாகக் கூற, வரச்சொல்லி ஆணையிட்டபின் திருமுனைப்பாடியார் வந்தார்.

“வாருங்கள் திருமுனைப்பாடியாரே என்ன சேதி?”

“மன்னா! கடம்பர் குல மகளின் குலக்கொழுந்து நீங்கள். தங்கள் வீரத்தில் எமக்கு ஐயமில்லை. ஆனால், தங்களைச் சூழ்ந்திருக்கும் ஆபத்துக்களை அலட்சியப்படுத்தாதீர்கள் மன்னா!”




முக்கிய அமைச்சர் எழுந்து மெல்லப் பேசினார்.

“அறிவோம் முனைப்பாடியாரே. அதற்காகத்தான் இந்த அவசரக் கூட்டம். வடக்கே ராஷ்டிரகூட அரசன் அமோகவர்ஷன், பல்லவ நாட்டின் மீது பாய நேரம் பார்த்திருக்கிறான். அரசர்க்குத் திறைச்செலுத்தும் சோனாட்டின் சில பகுதிகளைப் பிடிக்க ரகசியத் திட்டம் தீட்டி வருகிறான். அதுமட்டுமில்லை, அவனுக்குத் தூண்டுதலாக அரசரின் தாயாதி தம்பியான விக்கிரமன் முதலானோர் பகைவனுக்கு உதவக் காத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் முனைப்பாடியார் என்ன புதுச்செய்தி கொண்டு வந்திருக்கிறீர்கள்? அறியலாமா?”

“செய்தி அல்ல... அரசரைக் காக்கும் ரக்ஷயை ஜீவரக்ஷயை கொண்டு வந்துள்ளேன் அமைச்சரே!”

நந்திவர்மன் திகைத்தான்.

“ஜீவரக்ஷயா! என்ன அது?” மன்னன் அனுமதி வழங்க, அந்த அவைக்கு ஒரு பளிங்குச் சிலை மெல்லிய துணியால் மூடப்பட்டு எடுத்து வரப்பட்டது.

காவலர்கள் அந்த மெல்லிய துணியை விலக்க, ஒரு அழகான பெண்ணின் முழு உருவம். சலவைக்கல்லில் செய்தது. அபயஹஸ்த முத்திரையுடன் நின்றது. அது சிலையா? இல்லை

மெய்யாகவே ஒருபெண்ணா என்று மயங்கும் அளவிற்குச் சிலையின் அமைப்பு இருந்தது. நந்திவர்மன் திகைத்தான்.

“நய பரதனே!இது சாதாரணச் சிலை அல்ல.. ஜீவராக சிலை. சில மூலிகைகளின் ரசாயனச் சேர்க்கை கொண்டு தயாரித்தது. இதனருகில் விஷமுள்ள எந்தப் பதார்த்தத்தைக் கொண்டு சென்றாலும் சிலை நீலநிறமாக மாறிவிடும். மன்னரை ஆபத்து சூழ்ந்திருக்கும் வேளையில், இந்தச் சிலை பாதுகாப்பாக ஜீவரக்ஷயாக இருக்கும் மன்னா”

நந்திவர்மன் வியந்தான். இப்படி ஒரு அற்புதமா?

அரசன் கட்டளைப்படி பொற்கிண்ணத்தில் பால் கொண்டு வரப்பட்டு அதில் கொடிய நாகத்தின் விஷம் சேர்க்கப்பட்டது. அந்தப் பொற்கிண்ணம் சிலையின் மிக அருகில் கொண்டு செல்லப்பட்டவுடன்

ஆச்சரியம்! அற்புதம்! சிலை உடல் முழுவதும் நீலநிறமாக மாறியது.

தான் வடக்கே போயிருந்தபோது ஓர் அற்புதமான சிற்பியைச் சந்தித்ததாகவும், அவன் மூலம் இந்தச் சிலையை வடித்து எடுத்து வந்ததாகவும் அதை நந்திவர்மனுக்குக் கொடுக்க வந்ததாகவும் திருமுனைப் பாடியார் கூறினார்.


நந்திவர்மன் திறை செலுத்தவேண்டும் என்று அமோகவர்ஷனிடமிருந்து வந்த அந்த ஓலையை, நந்திவர்மன் திருப்பி அனுப்பினான். அத்துடன் போர்க்களத்தில் சந்திக்கவும் என்றும் தகவல் கொடுக்க!

போரால் நடுநடுங்கிப் போன அமோகவர்ஷன், சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு, தன் மகள் சங்கையையும் நந்திவர்மனுக்கு மணமுடித்துக் கொடுத்தான்.

அது முதலிரவு அறை! திருமணம் கோலாகலமாக நடந்து முடிந்து! மங்கல வாழ்த்துப் பாடல்களுடன் பொன்னும், பொருளும் சீதனமாகத் தரப்பட்டு புஷ்பப் பல்லாக்கில் சங்கை அற்புதமாக அலங்கரிக்கப்பட்டு, மாமன்னரின் அரண்மனைக்கு அழைத்து வரப்பட, அந்த அரண்மனைக்குள் நுழைந்த சங்கை, நந்திவர்மனின் புகழ் கண்டு, பெருமை கண்டு, வீரம் கண்டு வியந்தாள்.

‘சர்வன்’ என்று சிறப்புப் பெயர் பெற்ற இவள் தந்தையால் நந்திவர்மனை வெல்ல முடியவில்லை. வலிமை மிகுந்தவன்! வீரம் மிகுந்தவன்.. யானைப் படைத் துணையுடன் குருக்கோட்டிலே போர் நிகழ்த்தி வென்ற கோமான்! தோற்ற அரசன்! இவள் தந்தையால் தரப்பட்ட பரிசுதான் இவள்.!










“தேவி என்ன யோசனை?” நந்திவர்மன் சங்கையின் மென்தோள்களைத் தொட, சங்கை வெட்கித் தலைகுனிந்தாள். அங்கு வைக்கப்பட்டிருந்த அந்தப் பளிங்குச் சிலை, ஜீவரக்ஷ சிலை அவர்களைப் பாசத்துடன் பார்க்கிறது.

சங்கை யோசனையில் ஆழ்ந்திருந்தாள். ஐம்பெருங்குழுவும், எண் பேராயமும் அமைத்து திறம்பட அரசு செலுத்தும் நந்திவர்மனுக்கு எதிரிகள் அதிகம்தான். வானம் பொய்யாது, வளம்பிழைப்பு அறியாது நாடு செழிக்கிறது சந்தேகமில்லை.

“உரைசால் பத்தினியை உயர்ந்தோரும் வணங்குவர்” என்று நந்திவர்மன் அடிக்கடி கூறுவான். இந்த உரைசால் பத்தினி? சங்கை யோசித்தாள். மெல்லிய துணியால் மூடப்பட்ட அந்த ஜீவரக்ஷக சிலையின் அருகே போய்ப் பார்த்தாள். துணியை விலக்கினாள். சிற்பம் அற்புதமாக இருந்தது. நந்திவர்மன் தற்சமயம் நாட்டில் இல்லை. பாண்டியன் ஸ்ரீமாறனையும், அவனுக்கு உயிர்த்துணையாகச் செயல்படும் தன் தம்பி விக்கிரமனையும் எதிர்த்துப் போராட தொள்ளாற்றுக்குப் போயிருக்கிறான் நந்திவர்மன்.

(தெள்ளாற்று) சங்கத் தமிழ் வளர்த்து மங்காப் புகழ் உடை கூடல் மாநகராம் மதுரையிலிருந்து பல்லவனுக்கு உட்பட்டிருந்த சோழவள நாட்டின் சில பகுதிகளைக் கவர்ந்துவிட்டான் பாண்டியன் ஸ்ரீமாறன். பெண்ணை ஆறுவரை அவன் கையில்தான் இருந்தது. பறிக்கப்பட்ட பகுதிகளை மீட்கப் புறப்பட்டு விட்டான் மன்னன்.

பாண்டியனுக்கும், விக்கிரமனுக்கும் புத்தி புகட்டத்தான் நந்திவர்மன் தெள்ளாற்றுப் போர் புரியப் புறப்பட்டிருக்கிறான். சங்கை ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள்.

தெள்ளாற்றுப் போர்! மிகக் கொடூரமான போர். பிற்காலத்தில் சிவபக்தனாக மாறப்போகும்

நந்திவர்மன் நிகழ்த்திய கொடுமையான போர். ‘குவலய மார்த்தாண்டன்’ என்று போற்றப்பட்ட பேரரசன், போரில் தன்னிடம் தோற்று ஓடிவிட்ட பாண்டியனின் மகள் மாறன் பாவையை வேறு வழியின்றி மனைவியாக ஏற்றுக்கொண்டு அரசவைக்கு வெற்றியுடன், அத்துடன் வீரத் திருமகளுடன் அடி எடுத்து வைத்த அந்த நேரம் சங்கை நொறுங்கிப் போனாள்.

பகையின்றி பார் காக்கும் வேந்தன் கடைசியில் தன்னை வ!சித்துவிட்டானே என்று மனம்பொருமினாள். வீரத்தில் சிறந்த மன்னன் பெண் மனத்தைப் புரிந்துகொள்ளாத கயவனாகி விட்டதை எண்ணி வருந்தினாள். போருக்குப் போனால் வெற்றித் திருமகளுடன் பகைவரின் மகளையும்துணைசேர்க்கவேண்டுமா?பாண்டியன் மகள் மாறன் பாவையை அந்தப்புரத்துக்கு அழைத்து வந்த அரசன், சங்கையைப் பார்த்தான்.

“சங்கை! என்னை மன்னித்துவிடு! இது காலத்தின் கட்டாயம். ஆனால் என்றும் என் பட்ட மகிஷி நீதான். இவள்! இவள் பாண்டியன் மகள் மாறன் பாவை. இவள் என் மனைவி மட்டுமல்ல! உன் சகோதரி! அன்புடன் ஏற்றுக் கொள்!”


சங்கை கண்ணீர் துடைத்து பாவையின் கைப்பற்றி தன்னிருப்பிடம் கூட்டிச் சென்றாள். அந்தப் பளிங்குச் சிலை! ஜீவரக்ஷசி பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன் ஒற்றன் கூறியதைக் கேட்ட நந்திவர்மன் திகைப்புடன். சங்கையின் அந்தப்புரம் தேடிப் போனான். அங்கே மாறன் பாவை இருந்தாள், சங்கையின் அரண்மனையில் மாறன் பாவை?



“சங்கை எங்கே?”

‘‘அக்காவைத் தேடித்தான் நானும் இங்கே வந்தேன் பிரபு.”




“நீ சொல்வது பொய்! உனக்கு பட்டத்தரசியாக ஆசை.. ஒற்றர்கள் வந்து தகவல் சொன்னார்கள். இந்தத் திருமணத்தில் உனக்கு விருப்பமில்லையாமே பட்டமகிஷியாக இல்லாமல், என் இரண்டாவது மனைவியாக வாழ உனக்கு விருப்பமில்லையாமே. அதனால் என் சங்கையைக் கொல்லத் துணிந்துவிட்டாயாமே.”

“சர்வேஸ்வரா! இதென்ன கொடுமை.” மாறன் பாவை அழுதாள்.

“ஆம் தேவி! நான் சங்கையைச் சந்திக்க இந்த வசந்தமாளிகை தேடி வரும்போது, வரும் வழியில் இருக்கும் இந்த நந்தவனத்தில் பூத்திருக்கும் காஷ்மீர

ரோஜாக்களைப் பறித்து சங்கைக்குத் தருவது வழக்கம். இதை அறிந்த நீ, இங்கு மலர்ந்திருக்கும் அந்தப் பூக்களில் எல்லாம் பூ நாகங்களை படரச் செய்திருக்கிறாயாமே! நான் கொடுத்த மலர்களை முகர்ந்து பார்க்கும் சங்கை அந்தப் பூ நாகங்களால் முகர்ந்து பார்க்கிறேன். யார்பட்ட மகிக்ஷ என்கிற போட்டி உங்களுக்குள் வேண்டாம்."

பேசியபடி நந்திவர்மன் நந்தவனத்தில் நுழைந்து மலர் ஒன்றினைப் பறிக்க முற்பட்டபோது! "அரசே அரசே நில்லுங்கள்.." என்று கதறியபடி






தாக்கப்பட்டு, மூச்சு முட்டி மூக்கில் ரத்தம் வழிய இறக்கவேண்டும் என்பதுதானே உன் திட்டம்? வேண்டாம் தேவி! இந்தப் பூக்களை சங்கை முகரவேண்டாம். நானே

ஓடி வந்தாள் சங்கை!

"அவளின் பின்னே காவலர்களால் பிடித்து இழுத்து வரப்படும் விக்கிரமன் நந்திவர்மனின் தாயாதித் தம்பி."

"சங்கை! உனக்கு ஒன்றும் ஆகவில்லையே! ஒற்றர்கள் தெரிவித்தது?"

“தவறான செய்தி மன்னா! உண்மையில் குற்றவாளி விக்ரமன்தான். உங்களைக் கொன்று அந்தப்பழியை எங்கள் இருவர் மீதும் சுமத்தி நாடு குழப்பமடைந்திருக்கும் நேரத்தில் ஆட்சியைப் பிடிக்க நினைத்த நயவ!சகன். என் அந்தரங்கச் சேடி ஒருத்தி, விக்கிரமனின் பழைய காதலி. அவள் மூலம் விவரமறிந்து விக்கிரமனை நம் மெய்காப்பாளர்களுடன் சென்று சிறைப்பிடித்து வந்தேன் பிரபு.” நந்திவர்மன் மெய்சிலிர்த்தான்.

நந்தவனத்தின் நடுவில் அலங்காரமாக வீற்றிருந்த ஜீவரக்ஷகச் சிற்பம் இந்தக் காட்சியைக் கண்டவாறு நிற்கிறது.

விக்கிரமன் தன் உடைவாளை எடுத்தான்.

“மன்னர் மன்னா நான் அரசன் என்ற பதத்திற்கு அருகதை அற்றவன். இந்த உடைவாள் எனக்கெதற்கு?” கூறியபடி விக்கிரமன் தன் உடைவாளை உருவ! அது தற்செயலாக அங்கு அலங்காரச் சிற்பமாய் நின்றிருந்த ஜீவரக்ஷகச் சிலையின் மீதுபட! அடுத்த நொடிப் பொழுதில் அந்தச் சிலை நீலநிறமாக மாறிவிட விஷம் தடவிய உடைவாள்!





மாமன்னரின் உயிர் குடிக்க நினைத்த உடைவாள். ஒரு நொடிக்குள் உண்மையை உணர்ந்து கொண்ட அரசரின் மெய்க்காப்பாளர்கள் விக்கிரமனை அந்த இடத்திலேயே அவனது விஷஉடைவாளால் ‘களப்பலி’ தர! மாறன் பாவை கண்களை மூடிக்கொள்கிறாள்.

“தம்பி விக்கிரமா! இதோ இவள் சங்கை. இராக்ஷ்டிரகூட அரசரின் மகள்! இவள் மாறன்பாவை. என் விரோதி பாண்டியனின் மகள். இவர்கள் இருவரும் என் உயிரைக் காக்கத் தங்கள் உயிரைத் தரத்தயாராக இருக்கிறார்கள். ஆனால் உறவு என்ற பந்தமுள்ள நீயோ என்னைக் கொல்ல நினைக்கிறாய். உனக்கு என் உயிர்தானே வேண்டும் எடுத்துக்கொள்!”

விக்கிரமன் தலைகுனிந்தான். ஒருவழியாக அரண்மனையிலிருந்து அகற்றப்பட்டு அந்த

சங்கை நந்திவர்மனின் தோளில் சாய்கிறாள்.

நந்திவர்மன் அந்தச் சிலையைப் பார்க்கிறான். உண்மையில் ஜீவரக்ஷசி இந்தச் சிலையா? இல்லை! இந்தப் பெண்களா? இவர்கள் பூ நாகங்கள் அல்ல பூவின் சுகந்தங்கள்!

# கல்லும் கலையும்

காலம் முழுதும் பார்த்து ரசிக்கும்படி
கல்லிலே உன்னை செதுக்கி வைத்தான்
கலையழகில் மனம் கரையும் விதமாக
கற்பனை யாலே உனை வடிவமைத்தான்!

ஆண்டுகள் எத்தனை கடந்து போனதென்று
அறிந்தவர் தான் இங்கே யாருமில்லை!
ஆயினும் இளமை சிறிதும் மாறாமல்
இருக்கும் கலை இது மாற்றமில்லை!

கண்ணைத் திறந்து நமைப் பார்த்ததில்லை!
கனிவாய் திறந்தும் பேச வில்லை!
எண்ணம் முழுதும் உன் வசமானது
எப்படி அதுதான் புரிய வில்லை


மதுக்குடம் சுமக்கும் மங்கையுன் எழிலில்
மயங்கும் உலகிது; பொய் இல்லை!
செதுக்கிய கலைஞன் மறைந்து போனாலும்
சிலையாய் அவன் புகழ் அழியவில்லை!

காகிதத்தில் ஒரு கோடு இழுத்தாலும்
கச்சித மாய் அது வருவதில்லை!
கல்லில் உளியால் கலைஞன் அமைத்ததை
சொல்லில் வடிக்க முடிய வில்லை!

புயலாய் மழையாய் வெயிலாய் இயற்கையின்
தாக்குதல் அழகைச் சிதைக்க வில்லை!
உயிராய் நமது கலையை நினைக்காமல்
இருந்தால் அதன் பெயர் உள்ளமல்ல!

இராதை. பிரபாகரன்





VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
1Kg
Traditional taste that Lingers

# காசாவின் குழந்தைகளுக்காக

அம்மாவும் அப்பாவும்
பொய் சொல்லிவிட்டார்கள்.
அவர்கள் என்னுடன் இல்லை.
நான்மட்டும் மணிக்கணக்கில்
தனியே நடந்தேன்.
அவர்கள் பொய் சொல்லிவிட்டார்கள்.

அவர்கள் சொன்னதுபோல்
யாருமே தேவதைகள் இல்லை,
நடந்து போய்க் கொண்டிருப்பவர்களில்
பலரும் குழந்தைகள்.
ஆசிரியரும் பொய் சொல்லிவிட்டார்.
பள்ளியில் நாங்கள் வாசித்த
கவிதையில் இருப்பதுபோல
என் காயங்கள் சிறு பூக்களாக மாறவில்லை.

சித்து பொய் சொல்லவில்லை.
அவன் அங்கேயே இருந்தான்.
செத்துப்போவதற்கு முன் செய்துகொடுத்த
சத்தியத்தின்படி
அவன் அங்கேயே இருக்கிறான்.
ஜாஃபாவை நினைத்துக்கொண்டே
தன்னுடைய ஊன்றுகோலின்மீது
சாய்ந்துகிடந்தவனைக்
கண்டுபிடித்துவிட்டேன்.

என்னைப் பார்த்ததும் கழுகைப்போல்
தன் கைகளை அகல விரித்தான்.
ஊன்றுகோலோடு களைத்துப்போயிருந்த
ஒரு கழுகைப் போல!.
நாங்கள் அணைத்துக்கொண்டோம்.
அவன் என் கண்களை முத்தமிட்டான்.

## சினான் ஆண்டுன்

**தமிழில்: எஸ். கயல்**

கவிஞர், நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முகத்தன்மைகொண்ட ஈராக்கைச் சேர்ந்த சினான் ஆண்டூன் நியூ யார்க் பல்கலைக்கழகத்தின் ‘கலாட்டின் ஸ்கூல் ஆஃப் இண்டிவிஜுவலைஸ்ட் சொசைட்டி’யில் இணைப் பேராசிரியராகப் பணிபுரிகிறார்.



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
துன்பங்கள் கரைந்து
ஒளிமயமான
எதிர்காலம் பிறக்க
எங்கள் அன்பு
தீபாவளி வாழ்த்துகள்
VARSHA™

# பணம் பத்தும்

*வணிகம் சரி...சமூக நலன்...?*

நாம் குழந்தைகளை வளர்க்கவில்லை. நிறைய வருமானம் ஈட்டக்கூடிய மனித இயந்திரங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்தக் கூட்டம் எந்தச் சட்டத்துக்குள்ளும் அடங்க மறுக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

ஒரு திரைப்படத்தைப் பார்த்துவிட்டு, வெளியே வந்தபோது என் உடல் முழுவதும் ரத்தத் திவலைகள், தெறித்திருப்பதைப்போல் உணர்ந்தேன். காசு கொடுத்து உயிர் வதையையும், ரத்தத்தையும், வன்முறையையும் பார்த்துவிட்டு வந்தது குறித்து வேதனையாக இருந்தது.

ஒரு திரைப்படத்துக்குப் போகிறோம் என்றால் 3 மணி நேரம் நம் கவலையையும், கழுத்தை நெரிக்கும் வேலைகளையும் மறந்து, மனதை லேசாக்கிக் கொள்ளத்தானே தவிர, ஈவு இரக்கம் இல்லாமல் தலையைச் சீவுவதையும், சுட்டுத் தள்ளுவதையும் பார்க்கவா? தற்போது வெளிவரும் பெரும்பாலான திரைப்படங்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகின்றன.

இரண்டரை மணிநேரம், கொலைகளைப் பார்க்கும் இளைஞர்களுக்கு ரத்தமும், வன்முறையும் பிடித்துப்போகிறது. தன் அபிமான கதாநாயகன் கொலை செய்வதை ஆரவாரத்துடன் அங்கீகரிக்கிறார்கள். இதன் காரணமாக நடுத் தெருவில் ஒருவரை வெட்டுவதும், ஓட ஓட விரட்டிக் கொள்வதும், பள்ளிகளில் கொலை நடப்பதும் சாதாரண நிகழ்வுகளாகி வருகின்றன.

உலகத்தில் நடப்பதைத் தானே காட்டுகிறோம் என்பார்கள் இயக்குநர்கள். நடப்பதையெல்லாம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. சமூகத்தில் இவை ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகள் குறித்து அவர்கள் யோசிக்க வேண்டும். நாயகர்கள்







# செய்யயும்

வெ. இன்சுவை

வன்முறையைத் தங்கள் பிரச்னைகளுக்குத் தீர்வாகப் பயன்படுத்துவதைப் பார்த்து இளைஞர்கள் இதை ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொள்கிறார்கள். அதிகப்படியான வன்முறைக் காட்சிகள் மக்கள் மனதில் சுரக்கும் ஈரத்தை வற்றிப் போக வைக்கிறது.

சமூகப் பண்பாடுகள் மற்றும் விழுமியங்கள் பாதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு படைப்பாளியும் சமூகப் பொறுப்புடன் செயல்பட வேண்டியது முக்கியம். சினிமா வெறும் பொழுதுபோக்கு சாதனம் மட்டுமல்ல; அது சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு வலிமையான கருவி என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

அக்காலத் திரைப்படங்கள் சமூக சீர்திருத்தக் கருத்துகளையும், நாட்டுப்பற்றையும், குடும்ப உறவுகள் மற்றும் காதலையும் கருவாகக் கொண்டிருந்தன. கொலை நடக்கும்; ஆனால், கொத்துக் கொத்தாக அல்ல; சுத்தியலைக் கொண்டு ஒருவரின் மண்டையை உடைப்பதை அப்படியே காட்ட மாட்டார்கள். இப்போதோ திரையரங்கம் முழுக்க ரத்த வாடை






வீசுவதுபோல் உள்ளது. நம் சமூக ஊடகங்கள் இந்தத் தலைமுறைக்கு வன்முறையையும், ஆபாசத்தையும் கற்றுக் கொடுக்கின்றன.

ஒரு தலைமுறையைச் சிதைத்து வருகிறோம். நள்ளிரவுக் காட்சிக்கு, தூக்கத்தைத் துறந்து,




முட்டி மோதி, கூட்டநெரிசலில் சிக்கி, அடித்துப் பிடித்துப் போகிறார்கள். அதிகாலை காட்சிக்கும் இதே கதைதான். இங்கே அதிகாலை காட்சி ரத்து செய்யப்பட்டதால் அண்டை மாநிலங்களுக்குச் சென்று படம் பார்க்கிறார்கள். முதல் காட்சி கொண்டாட்டங்கள் ஒரு கலாசார நிகழ்வாகவே மாறிவிட்டன.

வளரும் குழந்தைகளையாவது கொஞ்சம் நன்முறையில் வளர்க்க முனைவோம். கோட்டை விட்டதை சரி செய்வோம். ஒரு நாட்டின் வளர்ச்சி, அந்நாட்டின் இளைய சமுதாயத்தின் கைகளில்தான் உள்ளது. சமூக ஒழுங்கையும், தனிமனித ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். எங்கு எங்கு நாம் எல்லை மீறிப் போகிறோமோ, அங்கெல்லாம் அதற்கு நாமே தடை போட வேண்டும். நம்மிடமிருந்துதான் குழந்தைகள்






கற்றுக்கொள்கின்றன. நாமே அவர்களுக்கு ஒரு மோசமான முன்னுதாரணமாக ஆகிவிடக்கூடாது.


நள்ளிரவில் பிரியாணி சாப்பிடும் கலாசாரம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. நள்ளிரவு 12 மணிக்கு மேல், பிரியாணி சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் ஒரு புதிய போக்கு தலைதூக்க ஆரம்பித்துள்ளது. ஒரு காலத்தில் சில தேநீர்க் கடைகள் மட்டுமே இருந்தன. தற்போது 12 மணிக்கு குடும்பத்துடன் சென்று பிரியாணி சாப்பிடுகிறார்கள். தகவல் தொழில்நுட்பம் மற்றும் இரவு நேரப் பணியாளர்களுக்கு நள்ளிரவில் பசி எடுக்கும். அவர்கள் சாப்பிட்டால் அதில் ஒரு நியாயம் உள்ளது.

நள்ளிரவில் நண்பர்களுடன் சுற்றிவிட்டு பிரியாணி சாப்பிடுகிறார்கள். 'மிட்நைட் மன்சீஸ்' என்ற பெயரில் சமூக ஊடகங்களில் பகிரப்படும் பதிவுகள் இத்தகைய கலாசாரத்தை ஊக்குவிக்கின்றன. இது பல ஆரோக்கிய சவால்களையும் ஏற்படுத்துகின்றன. இரவு நேரத்தில் அதிக எண்ணெய் மற்றும் மசாலா சேர்ந்த உணவுகளைச் சாப்பிடுவதால் செரிமான பிரச்னைகள், உடல் பருமன், இளம் வயதிலேயே சர்க்கரை நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம்.

நம் தலைமுறையை மலடாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. நாம் குழந்தைகளை வளர்க்கவில்லை. நிறைய







வருமானம் ஈட்டக்கூடிய மனித இயந்திரங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்தக் கூட்டம் எந்தச் சட்டத்துக்குள்ளும் அடங்க மறுக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

அடுத்து உறவினர்களிடம் ஒட்ட மறுக்கிறார்கள். நெடிய விடுமுறையின் போது பாட்டி வீடு, மாமா வீடு, அத்தை வீடு என்று ஆசையாய் போவார்கள். நகர வாழ்க்கையில் இருந்து கிடைக்கும் விடுதலையாகக் கருதி மகிழ்வார்கள். உறவுக்கார இல்லத் திருமணங்களில் இளசுகளின் குறும்பும், கலகலப்பும், அந்நிகழ்வுக்கு உயிரோட்டத்தைத் தரும். அங்குள்ள அசௌகரியங்களைப் பொருட்படுத்த மாட்டார்கள்; குறைகளைப் பூதக் கண்ணாடி கொண்டு பார்க்க மாட்டார்கள்.

தற்போது பலருக்கும் அத்தை, மாமா, சித்தப்பா என்ற உறவுமுறை இல்லாமல் போய்விட்டது. இருக்கும் உறவுகளுடன் ஒட்டாமல் ஒதுங்கிப் போகிறார்கள்; நண்பர்களிடம் பழகுகிறார்கள்; ஆனால், அத்தை பிள்ளை, சித்தப்பா பெண் போன்ற நெருங்கிய சொந்தத்துடன் ஒட்டுவதில்லை; வீட்டு நிகழ்வுகள் எதிலும் பட்டுக் கொள்வதில்லை. வீடு என்பது அவர்களின் தேவையை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ள இடம். அவர்கள் அங்கு வசிக்கிறார்கள் அவ்வளவே. எப்படி மாற்றப் போகிறோம் அவர்களை?

பிள்ளைகளின் மனம் கோணாமல் பெற்றோர்கள் நடந்து கொள்ள வேண்டிய காலமாக இருக்கிறது. அவர்களைத் திட்டக் கூடாது, எதற்கும் கேள்வி கேட்கக் கூடாது. அவர்களுக்குப் பயந்து நடந்துகொள்கிறார்கள். எங்கே தவறு? அதிக செல்லம் கொடுத்து வளர்க்கிறார்கள். அவர்களின் குறிப்பறிந்து நடந்து கொள்கிறார்கள். முன்பெல்லாம் விநாடிக்கு நூறு தடவை சிறுவர், சிறுமிகளை மளிகைக் கடைக்கும், காய்கறிக் கடைக்கும், அரைவை ஆலைக்கும் அனுப்பினார்கள். வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொடுத்து செய்யச் சொன்னார்கள்.


வீட்டு வேலைக்குப் பணியாள் வைக்கும் கலாசாரம் அக்காலத்தில் குறைவு. அன்பால் கட்டப்பட்ட இல்லமாக இருந்தது. கண்டிப்பும், கனிவும் கலந்து இருந்தது. பல வீடுகளில் ‘அப்பா’ என்றால் பயப்படுவார்கள். அவரின் கட்டளைக்கு பிள்ளைகள் கீழ்ப்படிந்தனர். தற்போது தந்தை—மகன் பேசிக் கொள்வதுகூட அரிதாகி விட்டது. அவரவர்க்கு ஒரு வட்டம், அவரவர் பிரச்னைகள் அவரவருக்கு என்று தீவுகளைப்போல் வாழ்கிறார்கள். ஏன் இப்படி? ஒரு ஐ—போன் விலை என்ன என்று தெரிந்து வைத்துள்ளவர்களுக்கு ஒரு கிலோ அரிசியின் விலை என்ன? தங்கள் வீட்டுக்கு ஆகும் மாதச் செலவு என்ன? தந்தை எப்படி சமாளிக்கிறார் என எதுவுமே தெரியாது. அவர்கள்

கேட்கும்போது, உடனே பணம் கொடுத்துவிட வேண்டும்.

குடும்பச் சூழலைப் பிள்ளைகள் தெரிந்து கொள்வது அவசியம். அவர்களை வைத்துக்கொண்டு மாதச் செலவு குறித்துப் பேச வேண்டும். வருமானம் எவ்வளவு, செலவு எவ்வளவு ஆகிறது என்பது தெரிந்தால், பிள்ளைகள் ஆடம்பரச் செலவைக் குறைத்துக் கொள்ள வாய்ப்புண்டு. இவ்வாறு குடும்பம் அமர்ந்து பேசும் அளவுக்கு அவர்களிடம் நெருக்கம் இருக்க வேண்டும். அது இல்லாததுதான் தற்போதைய நிலை.

ஏன் இந்த இடைவெளி ஏற்படுகிறது? பொதுவாகவே ஆண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படையாகப் பேசுவதே கிடையாது. மகனிடம் எதையும் பகிர்ந்து கொள்வதில் தயக்கம் உண்டாகிறது. பெண்கள் பாசத்தை வெளிக் காட்டுவார்கள்; ஆனால், ஆண்கள் உள்ளுக்குள்ளேயே வைத்திருப்பார்கள். போலியான இறுக்கத்தைக் காண்பிப்பார்கள். சில மகன்கள் தங்கள் தனிப்பட்ட அடையாளத்தைக் கண்டறிய முயற்சிக்கும் போது, தந்தையர்கள் அவர்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயல்கிறார்கள்.

இங்கே மோதல் உருவாகிறது; அதுவே பெண் பிள்ளைகள் தந்தையிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்கிறார்கள். இப்படிச் சொல்லிச் சொல்லியே சமுதாயம் அப்படி ஒரு பிம்பத்தை உருவாக்கி விட்டது. ஓர் வியப்பான செயல் என்னவென்றால், தன் பிள்ளைகளுக்காக ஓடாய் உழைத்து, தேய்ந்து போய் அவர்களை உயர்த்திய பெற்றவர்களைப் பிள்ளைகள் உயர்த்திப் பேசுவதில்லை. பெற்றவர்களின் தியாகத்தை அவர்கள் மதிப்பதில்லை. பிள்ளைக்கு ஒழுங்காய் சோறு போடாத, படிக்க வைக்காத தந்தையை, உயர்ந்த நிலைக்கு வந்தபின் அப்பிள்ளைகள் புகழ்கின்றார்கள்; கொண்டாடுகிறார்கள். எவ்வளவு பெரிய முரண் இது?







இம்மாதிரி பிரச்னைகளை திரைப்படம் கையாண்டால், இளைஞர்களிடம் ஒரு சிறு மனமாற்றமாவது ஏற்படும்.இரு கைகளும் சேர்ந்து தட்டினால் மட்டுமே ஓசை வரும். எனவே, பெற்றோர் மற்றும் சமுதாயம் இரண்டுமே சேர்ந்து அதற்கு ஆவன செய்யவேண்டும். இளைய சமுதாயத்தை நல்வழியில் இட்டுச் செல்ல வேண்டியது நம் அனைவரின் பொறுப்பும் கடமையும் ஆகும்.


அண்மையில் தமிழ் சினிமாவின் இரண்டு முன்னணி நடிகர்களின் 50ஆவது திரைப் படங்கள் வெளியாகி, மிகப் பெரிய வணிக வெற்றியையும் ரசிகர்கள்—விமர்சகர்களின் பாராட்டையும் பெற்றுள்ளன.


நித்திலன் சாமிநாதன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நாயகனாக நடித்திருந்த ‘மகாராஜா’, தனுஷ் எழுதி, இயக்கி, நாயகனாக நடித்திருந்த ‘ராயன்’ ஆகிய இந்த இரண்டு திரைப்படங்களுமே வன்முறை நிரம்பிய திரைப்படங்களாக இருந்தன. அண்மை ஆண்டுகளில் தமிழ் சினிமாவில் பெரிய அளவில் வெற்றி பெறும் படங்கள் வன்முறை நிறைந்தவையாக இருப்பது எழுதப்படாத விதியாகிவிட்டதாகத் தோன்றுகிறது.

வன்முறையின் இடம்: ஒரு காலத்தில் வெகுஜனத் திரைப்படங்களில் காதல் காட்சிகளும், நகைச் சுவைக் காட்சிகளும் கட்டாயமாக இடம்பெற வேண்டிய உள்ளடக்கங்களாகக் கருதப்பட்டன. அவை இல்லாத படம் ஓடாது என்று நம்பப் பட்டது. ‘மகாராஜா’, ‘ராயன்’ இரண்டிலும் காதலுக்கோ நகைச்சுவைக்கோ பெரிதாக இடம் இல்லை.

தனியாகப் படமாக்கப்பட்டு, மையக் கதையுடன் ஒட்டப்படும் ‘காமெடி—டிராக்’ நகைச்சுவைக் காட்சிகள் தமிழ் சினிமாவில் வழக்கொழிந்து








விட்டன. நாயகனும் நாயகியும் திடீரென்று வெளிநாட்டுக் குளிர்ப்பிரதேசங்களுக்குச் சென்று ஆடிப்பாடும் பாடல்களும் கிட்டத்தட்ட இல்லாமல் ஆகிவிட்டன.

உண்மைக்கு நெருக்கமாகவும், கச்சாத்தன்மையுடனும் மேம்பட்ட திரைப்பட ஆக்க உத்திகளுடனும் உருவாக்கப்படுவதாக முன்வைக்கப்படும் இன்றைய சினிமாக்களில் காதல், நகைச்சுவை ஆகியவற்றின் இடத்தை வன்முறை வலிந்து பறித்துக்கொண்டுவிட்டதாகத் தோன்றுகிறது.

'விக்ரம்', 'ஜெயிலர்', 'லியோ', 'துணிவு', 'பொன்னியின் செல்வன் 1&2', எனக் கடந்த சில ஆண்டுகளில் மிகப் பெரிய வணிக வெற்றியைப் பெற்ற முன்னணி நட்சத்திரங்கள்/ இயக்குநர்களின் திரைப்படங்களில் வன்முறை கடுமையான வகையில் இருந்தது. 'விக்ரம்', 'ஜெயிலர்' போன்ற சில படங்களில் கொலை, உடல் உறுப்புகள் துண்டிக்கப்படுதல் ஆகிய காட்சிகள் அப்பட்டமாகத் திரையில் காண்பிக்கப்பட்டன.

'பொன்னியின் செல்வன்' கல்கி எழுதிய வரலாற்றுப் புனைவு நாவலின் அடிப்படையில் எடுக்கப்பட்ட திரைப்படம். அதில் கத்தி, வாள் ஆகிய ஆயுதங்களுடன் கூடிய சண்டைக் காட்சிகள் தவிர்க்க முடியாதவை. ஆனாலும் வயிற்றில் செருகப்படும் வாளின் கூர்மையான நுனிப் பகுதி முதுகின் வழியாக வெளியேறுவதைப் போன்ற அப்பட்டமான வன்முறைச் சித்தரிப்பை, நாவலை எழுதிய கல்கி நிச்சயம் விரும்பியிருக்க மாட்டார்.


ஏமாற்றும் சான்றிதழ்: லோகேஷ் கனகராஜ், நெல்சன், அருண் மாதேஸ்வரன் போன்ற இளம் இயக்குநர்கள் வன்முறையை இயல்பானதாகவோ ரசிக்கத்தகுந்ததாகவோ முன்னிறுத்துவதைத் தமது ஒவ்வொரு படங்களிலும் முந்தைய படத்தைவிட அதிகமாகச் செய்துவருகிறார்கள். இன்னும் சில இளம் இயக்குநர்களும் இந்தப் போக்கையே பின்பற்றுகிறார்கள்.



பெரிய பொருள் செலவில் திரைப்படங்களைத் தயாரிக்கும் கார்ப்பரேட் நிறுவனங்கள் சில நூறு கோடிகளை முதலீடு செய்து, ஆயிரம் கோடிகளை வசூலிப்பதில் மட்டுமே கவனம் செலுத்துகின்றன. திரைப்படங்கள் உண்மையிலேயே அனைத்து வயதினருக்கும் உகந்தவையாக இருக்க வேண்டும் என்பதில் ஒருகாலத்தில் அக்கறை செலுத்திய தயாரிப்பு நிறுவனங்கள், இப்போது திரைப்படம் எடுப்பதை நிறுத்திவிட்டன அல்லது குறைத்துக்கொண்டுவிட்டன.

மிகப் பெரிய பொருள்செலவில் எடுக்கப்படும் திரைப்படங்கள் 18 வயதைக் கடந்தவர்களுக்கானவை என்பதற்கான 'ஏ' சான்றிதழைப் பெற்றால் போட்ட முதலீட்டைத் திரும்பப் பெற முடியாது. எனவே, இந்தப் படங்களின் தயாரிப்பாளர்கள் தணிக்கை வாரியத்திடம் எப்படியாவது 'யு/ஏ' சான்றிதழைப் பெற்றுவிடுகிறார்கள்.

'யு/ஏ' படங்களை 18 வயதை நிறைவு செய்யாதவர்கள் பெற்றோருடன் பார்க்கலாம். 'யு/ஏ' சான்றிதழுக்காகத் தணிக்கை வாரியத்தின் நிர்ப்பந்தத்தின் பெயரில் சில வெட்டுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக, 'மகாராஜா' படத்தில் 26 நொடிகள் வெட்டப்பட்டுள்ளன. ஆனால், அதற்குப் பிறகும் இந்தப் படங்களில் இருக்கும் வன்முறைச் சித்தரிப்புகள் பெரியவர்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையிலேயே உள்ளன.



சிலநேரம், இத்தகைய படங்களுக்கு வழங்கப்பட்ட 'யு/ஏ' சான்றிதழை நம்பிக் குழந்தைகளை அரங்குக்கு அழைத்துச்செல்லும் பெற்றோர் படத்தைப் பார்த்து அதிர்ச்சியும், அவை தமது குழந்தை களிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துமோ என்கிற கவலையும் அடைவது உண்டு. ஆனால், இத்தகைய படங்களைக் காணத் திரையரங்கு களுக்குக் குடும்பம் குடும்பமாகப் படையெடுப்பது குறைவதில்லை. பெரும்பாலான பெற்றோருக்கு இந்த வன்முறை குறித்துக் குறைந்தபட்சப் புரிதலும் இருப்பதில்லை.

கொண்டாடப்படும் கொலைகள்: இத்தகைய பித்தலாட்டங்கள் இல்லாமல் 'ராயன்' திரைப்படம் 'ஏ' சான்றிதழுடனே வெளியானது, சற்று ஆறுதலுக் குரியது. பல 'யு/ஏ' படங்களில் இருந்த அளவு அப்பட்டமான வன்முறைச் சித்தரிப்பு இந்தப் படத்தில் இல்லை. ஆனாலும் இந்தப் படம் தன்னையும் தன்னைச் சேர்ந் தோரையும் ஆபத்திலிருந்து காப்ப தற்காக மிக எளிதாக யாரை வேண்டு மானாலும், எத்தனை பேரை வேண்டுமானாலும் கொலைகளைச் செய்பவனை நாயகனாக முன்னிறுத்து கிறது.

வெளித் தோற்றத்துக்கு மிக அமைதி யானவனாக இருக்கும் நாயகன், கொலைகாரனாக மாறும் காட்சிகள் அரங்கை அதிரவைக்கும் பின்னணி இசையுடன் மிகப் பிரம்மாண்டமான நாயகத் தருணமாக முன்வைக்கப்படு கின்றன. நாயகன் கொலை செய்ய வருகிறான் என்பதை உணரும் தருணத் திலேயே பார்வையாளர்கள் பெருங் கூச்சல் எழுப்பி ஆர்ப்பரிக்கிறார்கள்.

பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லாமல் சுற்றி இருக்கும் அனைவரையும் நாயகனும் அவனது தம்பிகளும் வெட்டி வீழ்த்துவதை ரசிகர்கள் கூச்சலிட்டுக்கொண்டே ரசிக்கிறார்கள். 'அசுரன்' உள்ளிட்ட முந்தைய படங்களின் மூலம் தனுஷுக்குக் கிடைத்திருக்கும் நாயகப் பிம்பமும் இந்தக் காட்சிகளுக்கான ஆராவாரத்தை அதிகரிக்கிறது.

இந்தப் படத்தில் நாயகனின் தங்கையும் ஒரு கட்டத்துக்கு மேல் பழிவாங்கல் கொலைகளை நிகழ்த்துகிறார். இதன் மூலம் இந்தக் கதாபாத் திரம் பெண் கதாபாத்திரங்களின் வழக்கமான சித்தரிப்புக்கு மாறாக அமைந்துள்ளதாகச் சில











பக்குவம் அனைவருக்கும் எப்படி இருக்கும்? குறிப்பாக, பதின்பருவத்தினர் கண்மூடித்தனமான வன்முறையை வீரமாகவும் நாயகத் தன்மைக்குரிய அம்சமாகவும் கருதும் மனநிலையில் இருப்பார்கள். அப்படிப்பட்டோர் இத்தகைய படங்களைப் பார்ப்பதன் மூலம் வன்முறை சார்ந்து கூடுதலாக ஈர்க்கப்படுவார்கள்.

'ராயன்' படத்தில் இருந்த வன்முறையைத் தொழில்முறை திரைப்பட விமர்சகர்கள் கூடப் பெரிதாகக் கண்டிக்கவில்லை. அந்தப் படத்துக்கு 'ஏ' சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததால் வன்முறையைக் குற்றமாகக் கருத முடியாது என்று பலர் நினைத்திருக்கலாம். ஆனால், 'ஏ' சான்றிதழ்



விமர்சகர்கள் பாராட்டியிருந்தனர். ஆனால், ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் பச்சைப் படுகொலைகளைச் செய்பவர்களாக முன்னிறுத்தப்படுவது பாலின சமத்துவத்துக்கு எந்த வகையிலும் பங்களிக்கப்போவதில்லை. மாறாகப் பெண்களுக்குப் புதிய தீங்குகளையே ஏற்படுத்தக் கூடும்.

'மகாராஜா' திரைப்படத்தில் சிகைதிருத்துநராக இருக்கும் நாயகன் தன் மகளைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியவர்களைக் கொடூரமாகக் கொலை செய்கிறான். தலையைத் துண்டிப்பது போன்ற காட்சிகளும் உள்ளன. குழந்தைகளைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவது பொதுச் சமூகத்தினரால் மிகப் பெரிய குற்றமாகப் பார்க்கப்படுகிறது.

எனவே, அந்தக் குற்றவாளிகள் கொடூரமாகக் கொல்லப்படுவது அனைத்துத் தரப்பு பார்வையாளர்களாலும் ரசிக்கப்படுகிறது. சிறார் பாலியல் குற்றவாளிக்கான தண்டனை எவ்வளவு கொடூரமாகச் சித்தரிக்கப்படுகிறதோ பார்வையாளர் அவ்வளவு 'நிறைவு' அடைகிறார். பாலியல் வன்முறைக்கு — குறிப்பாக, சிறார் மீதான பாலியல் வன்முறைக்கு வன்முறைமிக்க தண்டனையைத் தீர்வாகக் கருதும் பொதுப்புத்திக்கு இத்தகைய சித்தரிப்புகள் வலுச்சேர்க்கின்றன.

சமூகத் தாக்கம்: நட்சத்திர நடிகர்கள் படத்தில் கொலை செய்யும்போது, கதையில் அதற்குச் சொல்லப்படும் காரணங்களைப் புரிந்துகொள்ளும்

பெற்றுவிட்டதாலேயே எவ்வளவு முடியுமோ அவ்வளவு அப்பட்டமாகவும் குரூரமாகவும் வன்முறையைச் சித்தரிக்கலாம் என்கிற போக்கைச் சாதாரணமாக எப்படிக் கடந்துவிட முடியும்? 18 வயதைக் கடந்துவிடுவதாலேயே ஒருவருக்கு வன்முறைக் காட்சிகளைச் சரியாக உள்வாங்குவதற்கான பக்குவம் வந்துவிடாது.

அரங்கை விட்டு வெளியேறும் இளைஞர்கள், படத்தில் நாயகன் எப்படி எல்லாம் கொலை செய்கிறார் என்பதைச் சிலாகித்துப் பேசிக் கொண்டு செல்வதைப் பார்க்க மிகவும் அச்சமாக இருக்கிறது. தமிழ்த் திரைப்படங்களில் வன்முறை என்பது திரைப்படங்களின் தரத்தைச் சீரழிப்பதோடு, சமூகத்தில் பல மோசமான நீண்ட கால விளைவுகளையும் ஏற்படுத்திவிடுகிறது.

கதைக்களத்துக்குப் பொருந்தாத வெளிநாட்டில் பாடல்களைப் படம்பிடிப்பது, கதைக்குத் தொடர்பில்லாத நகைச்சுவைக் காட்சிகளை ஒட்டவைப்பது ஆகியவற்றைப் போல் இதுவும் தானாக மறையும் என்று காத்திருக்கவும் முடியாது. சம்பந்தப்பட்ட அனைவரும் சிந்தித்துச் செயல்பட்டு உடனடியாகத் தீர்க்க வேண்டிய தீவிரமான பிரச்சினை இது.



# நூல்

## வழித்துணையாகும் வாசிப்பு !

பயணம் என்பது வெறுமனே ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்வது அல்ல. அது நம் ஆன்மாவைத் தேடி, புதிய அனுபவங்களைத் தழுவி, புதுமைகளைக் கற்றுக்கொள்ளும் ஒரு கலை. ஒரு காலத்தில் பேருந்து, ரயில் பயணங்களில் புத்தகங்களுடன் பயணித்த காட்சியைக் காண முடிந்தது.

புத்தகத்தின் பக்கங்களுக்குள் ஒளிந்திருக்கும் கதை மாந்தர்களின் சிரிப்பும், அழுகையும் நம்முடன் பயணம் செய்யும். ஆனால், இன்று அந்தப் புத்தகத்துக்குப் பதிலாக கண்களை ஒளி வெள்ளமும், செவிகளை ஏதோ குரல்களும் இரைச்சல்களும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. பயணங்களில் வாசிப்பு மறந்து, மக்கள் தங்கள் அறிதிறன்பேசிகளில் மூழ்கியிருக்கும் காட்சி, ஒரு நவீன துயரத்தை நமக்கு உணர்த்துகிறது.


முன்பு வாசிப்பு என்பது பொழுதுபோக்கின், அறிவூட்டலின் முக்கிய வழியாக இருந்தது. ஒரு ரயில் பயணத்தில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் புத்தகங்களுடன் அமர்ந்து, ஒரு மௌன உலகத்தைப் படைப்பார்கள். புத்தகங்களுக்குள் நுழையும்போது, சுற்றியுள்ள ஓசைகள், மனிதர்கள், அசைவுகள் அனைத்தும் மறந்துபோகும். ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

ஒரே நேரத்தில் சமூக ஊடகங்கள், செய்தித் தளங்கள், யூடியூப் விடியோக்கள், இணையப் பக்கங்கள் என பல தளங்களில் தகவல்கள் குவிந்து கிடக்கின்றன. இந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கிய மனம், ஒரே ஒரு புத்தகத்துக்குள் அடைபட விரும்புவதில்லை.

அறிதிறன்பேசிகள் அளிக்கும் உடனடித் திருப்திக்கு ஈடாக எதுவும் இல்லை. ஒரு பக்கத்தைப் படித்து முடிப்பதற்குள், அறிதிறன்பேசி ஒரு புதிய விடியோவை காட்டி, நம் ஆர்வத்தைத் தூண்டுகிறது. அந்த ஈர்ப்பு, ஒரு புத்தகத்தில் மூழ்கிப் படிக்கும் நிதானத்தையும், பொறுமையையும் நம்மிடம் இருந்து பறித்துவிடுகிறது.

வாசிப்பு என்பது ஆழமான சிந்தனையைத் தூண்டும் ஒரு செயல். ஆனால், அறிதிறன்பேசியில் மூழ்குவது என்பது விரிவற்ற, விரைவான, தொடர்பில்லாத் தகவல்களை உள்வாங்குவதும் மட்டுமே. இதன் விளைவாக, நம் மனதின் ஆழ்ந்த சிந்தனைத் திறன் குறைந்துவிட்டது.

பயணத்தின்போது வாசிப்பது, நம்மை நாமே கண்டுகொள்ளும் ஒரு முயற்சி. புத்தகத்தின் பக்கங்கள், நம் மனம் இதுவரை கண்டிராத உலகங்களைக் காட்டும். புதிய சிந்தனைகளை உருவாக்கும். ஆனால், அறிதிறன்பேசியில் மூழ்கியிருக்கும்போது, நாம் உண்மையில் பயணமே










பழ.அசோக்குமார்

செய்வதில்லை. நம் உடல் மட்டுமே ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்கிறது. மனம், அதே சமூக ஊடகப் பெருவெளியில் சிக்கிக் கொண்டிருக்கிறது.

அருகில் அமர்ந்திருக்கும் சக பயணிகளுடன் பேசும் வாய்ப்பு, புதிய மனிதர்களைச் சந்திக்கும் அனுபவம், கண்ணுக்குப் புலப்படும் இயற்கையின் அழகை ரசிக்கும் தருணம் என எல்லாவற்றையும் இந்தச் சிறிய பெட்டி நம்மிடம் இருந்து பறித்துவிட்டது.

பயணத்தில் கிடைக்கும் ஓய்வு, மனதை அமைதிப்படுத்தும். வாசிப்பு, அந்த அமைதிக்கு ஒரு துணை. ஆனால், அறிதிறன்பேசியில் மூழ்கியிருப்பதால், நம் மூளை தொடர்ந்து உழைத்துக்கொண்டே இருக்கிறது. கண்கள், மூளை, விரல்கள் என அனைத்தும் ஓய்வின்றி இயங்கிக் கொண்டிருக்கின்றன. தொழில்நுட்பம் தவிர்க்க முடியாததுதான். ஆனால், அதை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது முக்கியம். பயணங்களில் வாசிப்புப் பழக்கத்தை மீண்டும் கொண்டுவருவது எளிதான காரியம் அல்ல. ஆனால், அது அவசியமானது. பயணத்தின் தொடக்கத்தில், அறிதிறன்பேசியை அணைத்துவிட்டு, ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கலாம்.








அரசுகள், பொது நூலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் இணைந்து வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ளலாம். பேருந்து, ரயில் நிலையங்களில் பயணிகளுக்கு இலவசமாகப் படிக்க புத்தகங்களை வைக்கலாம். தொழில்நுட்பத்தின் வளர்ச்சி நம்மை முன்னேற்ற வேண்டும். ஆனால், அது நம்

ஆன்மாவை அழித்துவிடக் கூடாது. இன்றைய இளம் தலைமுறையினருக்கு வாசிப்பின் அருமையை நாம் உணர்த்த வேண்டும். வாசிப்பு, நம்மை முழுமையான மனிதனாக்கும்.

பயணத்தின்போது சுமந்து செல்வதற்கு எளிதான புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கலாம். பெரிய மற்றும் கனமான புத்தகங்களுக்குப் பதிலாக, சிறிய நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், பயணக் கட்டுரைகள், கவிதைகள் அடங்கிய புத்தகங்கள் சிறந்தவை.

பயணத்தின் சுவாரஸ்யத்தை மேலும் அதிகரிக்க நகைச்சுவை, வீரதீர சாகசம் அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பற்றிய வரலாற்றுப் புத்தகங்கள் போன்றவற்றைத் தேர்வு செய்யலாம். அதேபோல், அதிக புத்தகங்களைச் சுமந்து செல்ல விரும்பவில்லையென்றால், இன்று நடைமுறையில் உள்ள வாசிப்பு உபகரணங்களைப் பயன்படுத்தலாம். இதில் நூற்றுக்கணக்கான புத்தகங்களைச் சேமித்து வைத்துக்கொள்ளலாம்.







விமானப் பயணம், ரயில் பயணம் போன்ற நீண்ட காத்திருப்பு நேரங்களில் இது மிகவும் உதவியாக இருக்கும்.


பயணத்தின்போது கிடைக்கும் ஒவ்வொரு நிமிஷத்தையும் வாசிப்புக்கு ஒதுக்கலாம். சில பயண விடுதிகளில் புத்தகப் பரிமாற்ற வசதிகள் இருக்கும். அங்கு உங்கள் புத்தகத்தைக் கொடுத்துவிட்டு, அங்கிருக்கும் வேறு ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கலாம். இது புதிய புத்தகங்களை அறிமுகப்படுத்திக்கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு.

பயணங்கள் நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடம், நாம் தனிப்பட்ட முறையில் யார் என்பதுதான். வாசிப்பு, அந்தத் தேடலுக்கு ஒரு வழிகாட்டி. அறிதிறன்பேசிகள் நம்மைச் சுற்றியுள்ள உலகத்திலிருந்து நம்மைத் துண்டிக்கின்றன. ஆனால், புத்தகங்கள், நம் அக உலகத்தைத் திறந்து காட்டுகின்றன. பயணங்களில் அறிதிறன்பேசிகளை ஒதுக்கிவிட்டு, ஒரு புத்தகத்தை எடுத்து வாசியுங்கள். அது உங்களுக்கு ஒரு புதிய உலகத்தைக் காண்பிக்கும்; நீங்களே ஒரு புத்தகமாக மாறுவீர்கள்!

அன்றாட இயக்கத்துக்கு உணவு எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது அன்றாட வாசிப்புக்குப் புத்தகமும்; வாழ்க்கையின் இயக்கத்தை இலகுவாக்குவதற்கு எத்தனை வசதியான பொருள்கள் பயன்படுகின்றனவோ, அதுபோல், மனத்தை இலகுவாக்குவதற்கு எத்தனையோ புத்தகங்கள் பயன்படுகின்றன. வாசிப்பு, படிப்பாகி, படிப்பு, கற்றலாக வளர்ச்சி அடைய வேண்டும். கொஞ்சம் அழுத்தமாகவே சொல்லியதும் அமைதியானார் நண்பர்." யார் ஒருவராலும் தனக்காகவே வாழ முடியாது. அதுபோல், யாராலும் தனக்குத்தானே பேசிக்கொள்ள முடியாது; எழுதிக் கொள்ள முடியாது; பேச முடியாத நாள்களில் பேச நபர்கள் கிடைக்காத நேரங்களில் பேச்சுத் துணைக்குப் புத்தகங்கள் கூடவரும்; பேசும்; பேச வைக்கும்; பேசாமல் யோசிக்கவும் வைக்கும்.

போக முடியாத இடங்களுக்கு மனதளவில் பயணிக்கவும், நேருற அனுபவிக்க முடியாத பல உணர்வுகளைத் துய்த்துப் பெற்றுக்கொள்ளவும் புத்தகங்கள் துணை செய்யும்; நாம் வெளியுலகில் நடந்தும், வாகனங்களில் பயணித்தும் கடக்கிற

தொலைவுகளுக்கு இணையாக மனதளவில் பயணிக்க உதவும் வாகனங்கள் புத்தகங்கள். அதில் ஊன்றுகோலாகும் புத்தகங்களும் உண்டு; விமானங்களாகும் புத்தகங்களும் உண்டு. மறதி நோய்க்கு மகத்தான மருந்து புத்தகம்தான்.




மறதியைப்போல் கொடிய நோய் பிறிது இல்லை. மறக்கக்கூடாததை மறந்துவிடுவதும், மறக்க வேண்டியதை மறக்காமல் வைத்திருப்பதும் மனத்தின் கெட்ட பழக்கம். அவற்றை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு அகற்றிவிடக்கூடியது புத்தக வாசிப்பு என்று சொன்னால் புரியாது; பழகினால்தான் தெரியவரும்.

உணவு விடுதியின் மேஜையில் வைக்கப்படும் மெனுகார்டு போல, கடைவிரிக்கப்பெற்ற புத்தக நிலையங்களின் பட்டியல்கள். அழகாய் அடுக்கப்பெற்ற உணவுப் பண்டங்களின் காட்சிக்கு இணையாக புத்தங்கள்.

விரும்பிய உணவை ஆர்டர் செய்து வாங்கிக் கொள்வதுபோல், வேண்டிய புத்தகங்களைத் தெரிவுசெய்து கொள்ளலாம்; விரும்பினால் வாங்கவும் செய்யலாம். எத்தனை வகையான உடைகள் வீட்டில் இருந்தாலும், பண்டிகைக் காலங்களில், விசேஷ நாள்களில் புத்தாடைகள் வாங்குவதில்லையா? அதுமாதிரி புத்தகம் வாங்குவதையும் ஒரு பழக்கமாக்கிக் கொள்ளலாம். வீட்டிற்கு வருகிற சுமங்கலிகளுக்கு ரவிக்கைத் துணி வைத்துக் கொடுப்பதுபோல், விருந்தினர்களுக்குத் திருக்குறளை, மகாகவி பாரதியார் கவிதைகளை வைத்துக்கொடுக்கிற நண்பர்களும் இருக்கிறார்கள்.

நமது ஊருக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் கூடவே புத்தகங்களும் பயணிக்கப் பார்த்திருக்கிறேன். தங்கும் விடுதிகளில் அவர்கள் உண்ணும் உறங்கும் நேரம் தவிர்த்துப் படிப்பதை இன்றியமையாப் பணியாக அவர்கள் கொண்டிருப்பார்கள். தேவை நேரம் போக, அவர்கள் மீதி நேரங்களில் கைப்பேசிகளைப் பயன்படுத்துவதில்லை; தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பதில்லை.

நமக்கு அருகில் இருக்கும் வரலாற்றுத் தலங்களைப் பற்றி நாம் அறிந்திருப்பதைவிட, அவர்கள் அறிந்திருப்பவை அதிகம் என்பதை அவர்களுடனான உரையாடல்கள்வழி தெரிந்துகொண்டபோது வியப்பாக இருந்தது. குறிப்பாக மதுரை, சிதம்பரம், மாமல்லபுரம் பற்றியெல்லாம் நாம் அறிந்திராத பல தகவல்களை அவர்களுக்கு அறிவிக்கும் இடத்தில் புத்தகங்கள் இருக்கின்றன.





வாங்கிய புத்தகங்களையே படிக்க முடியவில்லை. மேலும் வாங்க வேண்டுமா? — இந்தக் கேள்வி இப்போது அடிக்கடி எழுகிறது. தூங்கிய நேரங்களை நினைவுபடுத்தித் தூங்கச் செய்கிறது உடல்; பசி நேரம் சொல்லி உணவிடச் சொல்கிறது வயிறு; பொருட்படுத்தாதவர்களை மருத்துவர்களின் முன் கொண்டுபோய் நிறுத்திவிடுகிறது வாழ்க்கை. உடற்பயிற்சிக்குக் கொடுக்கத் தவறிய முக்கியத்துவத்தின் குறைபாட்டை நோய்கள் நினைவுபடுத்துவதுபோல், மனப்பயிற்சிக்குக் கொடுக்கத் தவறிய முக்கியத்துவத்தைச் சலிப்பும் களைப்பும் நினைவுபடுத்துகின்றன. உடல் எரிச்சல்போல் அல்லல்படுத்தக்கூடியது மன எரிச்சல்; நமைச்சலோ வேறு மாதிரியானது.

உடலைப் பராமரிக்கத் தெரிந்த நம்மில் பலருக்கு மனத்தைப் பராமரிக்கத் தெரியவில்லை. உடல் சோர்வுக்குப் பெரிதும் தூண்டுதலாய் இருப்பது மனச்சோர்வு என்பது உடன் புரிபடுவதில்லை.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்

கெடுநீரார் காமக் கலன்.’ —என்கிறார் திருவள்ளுவர். நெடுநீர்— தாமதம். மறவி— மறதி. மடி— சோம்பல். துயில்— தூக்கம். தனித்தனியே இருந்தாலும் இவை அடுத்தடுத்து வந்து அடுத்துக் கெடுப்பவை.இவை நான்கும் உழைப்பாளர்களுக்குக்




களைப்பால் வரலாம். களைப்பினைப் போக்குவது களிப்பு. கள்ளும் காமமும் களிப்பினை நல்கும். ஆனால், பின்விளைவுகள் மோசமானவை. இவைகடந்த நிலைகளில் ஒருமுகப்படுத்தவும், உற்சாகம் கொள்ளவும் ஆயிரமாயிரம் வழிகள் இருக்கின்றன; அவற்றின் வாசல்களாகப் புத்தகங்கள் இருக்கின்றன.

அரிதாய்க்கிட்டியது மனிதப் பிறவி. அதன் பயன் துய்க்கக் கிடைத்தவை அற்புதப் பொழுதுகள். அவற்றை, அற்பமாய்க் கருதிப் போக்கி, வறிதே இழக்கிற அவலத்தை நினைவுபடுத்துகின்றன அறிஞர்தம் அனுபவங்கள்.

'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்று பாடுகிறார் அப்பரடிகள். அவர் 81 ஆண்டுகள் வாழ்ந்தவர்; ஓய்வில்லாமல் தலங்களுக்கு யாத்திரை போனவர்; சோர்வில்லாமல் பலர் துயரங்களைப் போக்கியவர்; எண்ணிலாத் துன்பங்களையும் துயரங்களையும் சந்தித்தவர். ஆனாலும், "இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று பாடுகிறார்.


அவர் பாடிய தேவாரப் பதிகங்கள், வெற்றுச்சொற்களின் தொகுப்பு அல்ல. அவருக்கு முன் எழுந்த இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்த அனுபவத்தின் திரட்டு. அவர் புத்தகங்களுக்கு இணையாகத் தன் காலத்து மக்களைப் படித்த அனுபவத்தையும், இறையருளைத் துய்த்ததன் புலப்பாட்டையும் அவற்றில் இருந்து பெறமுடியும்.


இப்படி ஔவையாரைச் சொல்லலாம்; வள்ளலாரைக் கொள்ளலாம். ஆன்மிகவாதிகளைப் போன்றே அறிவியலாளர்களும், அரசியல் தலைவர்களும், இலக்கியவாதிகளும், தொழிலதிபர்களும் இருக்கிறார்கள். அவர்களின் வாழ்வியல் நிகழ்வுகளைச் சொல்லும் புத்தகங்களுக்கு இடையே ஏனைய உயிர்களின் இயக்கங்களை, அவற்றின் வெளிப்படும் அதிசய வாழ்வின் அனுபவங்களை, பிரபஞ்சத்தின் பேரியக்கத்தை, பரந்த நிலையில் திறந்துவைத்துக் கொடுக்கக் காத்திருக்கின்றன புத்தகங்கள்.


மூடிக்கிடக்கும் புத்தகங்களில் வாழ்ந்து மறைந்த, என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதர்களின் மூச்சுக்காற்று நிறைந்திருக்கிறது. தேடிக்கொள்பவர்களின் சுவாசங்களுக்கு அது சுகம் தரக்கூடியது.

தேடி அலைந்தும் கிடைக்காத பல முத்துக்களையும் இரத்தினங்களையும், கோடிக்கணக்கில் தனக்குள் புதைத்து வைத்துக் காத்திருக்கும் பூதங்கள் புத்தகங்கள். தானிய விதைகளைப் போல் பேணிய சிந்தனைகளைத் திரட்டிக் கெடாமல் பாதுகாத்து வைத்திருக்கும் குதிர்களை ஒத்த நூல்களும் உண்டு; தாவி விரையும் மனக்குதிரைக்கு முந்திப் பறக்கும்






மந்திரக் கம்பள நூல்களும் உண்டு. குப்பைகள் என்று ஒதுக்கிவிடக்கூடிய புத்தகக் குவியல்களுக்கு மத்தியில், பல அற்புதக்களஞ்சியங்களும் இருக்கின்றன என்பதை அறிய அறியத்தான் தெரியவரும்.

வாசிக்க முடியாவிட்டாலும் வாங்கி வைத்திருப்பதும், வருகை தரும் விருந்தினர்களுக்குப் பரிசளிப்பதும் நாம் செய்யக்கூடியவை. அன்னதானம் நிகர்த்த அறிவுதானம் செய்வதற்குப் புத்தகங்கள் உரிய பாத்திரங்கள்.

அடிக்கடி சொல்வதை மறுபடியும் நினைவூட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. இருக்கும் வீட்டில் பூஜையறை இருக்கிறதோ, இல்லையோ, வாசிப்பறை இருப்பது நல்லது. ஒற்றை அறையே வீடானபோதிலும், உணவு சமைக்கும்




அடுக்களையில் அஞ்சறைப் பெட்டி இருக்கும் அல்லவா, அதுபோல், தவறாது இருக்க வேண்டியது சிறிய புத்தக அலமாரி.

படிக்க முடியாதபோதும் பார்வைக்குப்படும் இடத்தில், புத்தகம் இருந்தால், அது உங்களை அறிவாளி என்று வருவோர்க்குச் சொல்லும். படிக்க முடியாவிட்டாலும், படிப்பது போல் நடிக்கவாவது செய்யலாம் அல்லவா? என்று சொல்லி, என்னிடம் இருந்த புத்தகம் ஒன்றை அந்த நண்பருக்குக் கொடுத்து அனுப்பியபோது, அஞ்சலில் வந்து சேர்கிறது புதிய புத்தகம். அலையில்லாது கடல் இல்லை; நூல் இல்லாது வாழ்வில்லை.

பிறவிப் பெருங்கடல் நீந்தத் துணைசெய்யும் புத்தகங்கள் அறிவுக் கலங்கள்.



சிறப்புச் சிறுகதை

# ஞானம் வந்த பின்பே...

என்.ஸ்ரீதரன்

பொழுது நன்றாக விடிந்து விட்டது. நாய் குரைப்பைத் தொடர்ந்து,“ பால் என்ற செல்வியின் குரல் கேட்டது. ‘டாணென்று ‘ ஆறு மணிக்கு அவள் ஆறு மணிக்கு அவள் பாலை போட்டு விடுவாள். அவள் சைக்கிளின் பின்னால் இரண்டு பக்கமும் பெரிய பையை மாட்டி அதில் பால் பாக்கெட்டுகளை வைத்துக் கொண்டு வருவாள் . அவள் பின்னாலே நாலு நாய்கள் ஓடி வருவது கண் கொள்ளாக் காட்சியாய் இருக்கும். பிஸ்கோத்தை அதற்கு வீசுவாள். நன்றிக் கடனாக நாய்கள் அவள் பால் பாக்கெட்டுகள் போட்டு முடிக்கும்வரை சைக்கிளின் பின்னாலேயே வந்து கொண்டிருக்கும் — காவலாய்!

எனக்கு அவள் வந்தது நிம்மதியை அளித்தது. காபி சீக்கிரம் கிடைத்து விடும். நித்யா, செல்வி வந்தவுடன்தான் காபியைக் கலப்பாள். சிறிது நேரம் ஆயிற்று. நித்யா ஒரு டம்பளரில் காபியைக் கொண்டு வந்து ” டங்” என்று என் அருகில் வைத்து ” காபியை எடுத்துக்கோங்கோ ” என்று கோபத்துடன் கூறினாள். அவள் வைத்த வேகத்தில் காபி சிறிது கீழே சிதறியது.




நித்யாவுக்கு வயது நாற்பது ஆகிறது. அவள் குழந்தையாய் இருக்கும் போது என் தோளில் போட்டு விளையாட்டு காட்டியிருக்கிறேன். இப்பொழுது அவள் ஒரு குழந்தைக்கு ஒரு தாய்!

அவளிடம்தான் நான் புகலிடம். அதனால் அவள் கோபத்தைப் பொறுத்துத்தானே ஆகவேண்டும். . ஆம், என் அக்கா பெண் நித்யா வீட்டில்தான் ஒண்டி இருக்கிறேன். அதுவுமில்லாமல் எனக்குக் கால் முட்டி அடிப்பட்டு செயலற்றுப் போய் விட்டதால் உட்கார்ந்துகொண்டு, நகர்ந்து நகர்ந்துதான் போகவேண்டும் அதுவும் மிகச் சிரமப்பட்டு.


”ஏம்மா காபியைப் பார்த்து வைக்கக் கூடாதா?” என்று மெதுவாகக் கேட்டேன்..

”உங்களை மாதிரி நான் சும்மா உட்காரவில்லை. எனக்கு எத்தனையோ வேலை சமையல் முடிக்கணும். சுலோக வகுப்புக்குப் போகணும்..”

நான் எதுவும் பேசவில்லை . பேசினால் சண்டையும் சச்சரவும்தான் உண்டாகும்..

என் நினைவலைகள் பின்னோக்கிச் சென்றன.

நான் அப்போது தஞ்சாவூரில் ஒரு அலுவலகத்தில் வேலையாயிருந்தேன். நான் திருமணமே செய்து கொள்ளாமல் ஓண்டிக் கட்டையாய் காலத்தைக் கடத்தி விட்டிருந்தேன். ஓய்வு பெற்றதும் ஏதாவது ஒரு முதியோர் இல்லத்தில் போய் சேர்ந்து கடைசிக் காலத்தை நிம்மதியாய்க் கழிக்கலாம் என்று நினைத்திருந்தேன். பத்து இலட்சம் வரை சேர்த்து வைத்திருந்தேன். ஓய்வு பெறும் வேளையும் வந்து விட்டது.



அந்தச் சமயத்தில்தான் நித்யா என்னைப் பார்க்க வந்திருந்தாள் . கண்ணில் மைதீட்டி நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு வைத்து பார்ப்பதற்கு வசீகரமாய் இருந்தாள்.. “மாமா நீங்க ஓய்வு பெற்றதும் என் வீட்டில் வந்து இருங்களேன். என் கணவர் அடிக்கடி வெளியூர் போய் விடுகிறார். உங்களை விட்டால் எனக்கு நெருங்கிய சொந்தம் யாருமில்லை. தாய்மாமாவான நீங்க மறுக்காமல் எங்க கூட வந்து இருக்கணும், நீங்கள் இருந்தால் எனக்கு நல்ல துணை. என் பையன் மாதவனுக்கு எட்டு வயசாகிறது. அவனுக்கு ஆட்டிசம்”.

”ஆட்டிசம்” என்றால் என்ன ? அது மூளை சம்பந்தபட்ட. வியாதியா ?”

“சே, சே! நீங்க நினைக்கிற மாதிரி அது வியாதியே இல்லை. அது வளர்நிலை குறைபாடு. எண்ணங்கள் புரிதல், கற்றுக் கொள்வது இவற்றில் ஏற்படும் குறைபாடு. பெயர் சொல்லிக் கூப்பிட்டால் குழந்தை திரும்பிப் பார்க்காது. கண்ணோடு கண் பார்க்காது. தேவையில்லாமல் அழும். காரணமில்லாமல் சிரிக்கும். விரும்பும் ஒரு விஷயத்தைத் திரும்ப திரும்பச் செய்ய விரும்பும். மாற்றம் இருந்தால் சிரமப்படும். சுருக்கமாகச் சொன்னால் சிறப்பு குழந்தை. நம்ம மாதவனால் பேச முடியாது“ என்றாள் மையிட்ட கண்களில் ஈரம் கசிய.

“நீயே சிரமப்பட்டுக் கொண்டிருக்கே. நான் வேறே எதுக்கு? எனக்கு என்ன பெண்டாட்டியா, சந்ததியா என்னாலே யாருக்கும் எந்தப் பிரச்சனையும் வேண்டியதில்லை. நான் முதியோர் இல்லத்தில் சேரலாம் என இருக்கிறேன்..”

“நல்லா இருக்கே நீங்க சொல்றது. உங்களாலே எனக்கு என்ன பிரச்சனை உங்களை என் அப்பா மாதிரி கவனிச்சுக்கிறேன். என் கணவராலேயும் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் வராது. மாசத்திலே பாதி அவர் வெளியூரில் இருப்பார். வாசலில் இருக்கிற அறையை உங்களுக்கு தந்து விடுகிறேன். அதனோடு பாத் ரூம் சேர்ந்திருக்கு. அதில் நீங்கள் சவுகரியமாய் இருந்துக்கலாம். எங்கள் கூடவே இருந்துடுங்களேன். கடன் வாங்கி வீட்டைக் கட்டி விட்டேன். என்னால் வட்டி கொடுக்க முடியவில்லை. பத்து லட்சம் எனக்குக் கொடுத்து உதவுங்களேன் மாமா” என்றாள்.




இவள் நான் பெறாத பெண் . உடம்பு சரியில்லை என்று படுத்துவிட்டால் முதியோர் இல்லத்தில் யார் கவனிக்கப் போகிறார்கள்.? அக்கா பெண் பாசத்தோடு பார்த்துக் கொள்வது போல் ஆகுமா? இருக்கிற பணத்தைக் கொடுத்து விட்டு வாழ்நாள் பூரா அங்கேயே ஒண்டிக் கிடப்பதுதான் புத்திசாலித்தனம் என்று எனக்குத் தோன்றியது. அதன்படியே என் பணத்தை அவளிடம் கொடுத்துவிட்டு அவள் வீட்டில் நான் வசித்துக் கொண்டிருக்கிறேன்.

ஒரு தருணத்தில் நாம் எடுக்கும் முடிவுகள் சரியானவை என்று நாம் நினைக்கிறோம். அந்தக் கணத்தில் அவை சரியானவை என்று நமக்குத் தோன்றுகின்றன. நாம் எடுத்த முடிவு சரி அல்லது தவறு என்பதைக் காலம்தான் பதில் சொல்லும் என்பதை அப்போது நான் அறியவில்லை.

“மாதவா, பாத்ரூம் போகணுமா? வாடா போகலாம் “ என்று அவனைக் கழிவறைக்கு

அழைத்துச் சென்றாள் நித்யா.

அவளால் எனக்குச் சகாயம் இருக்குமென நினைத்தேன்.

சாப்பிடுவேன், பேப்பர் படிப்பேன், நல்லா தூங்குவேன். பொழுது ஆனந்தமாய் கழிந்தது.

நித்யா பக்தியில் அதிக நேரம் செலவிட்டாள். அவள் பூஜை செய்யும் போது இடியே விழுந்தாலும் எழுந்திருக்க மாட்டாள். அவள் கணவர் பதினைந்து நாளுக்கு ஒரு நாள் வருவார். அடுத்த நாள் கிளம்பி விடுவார்.



இப்போதெல்லாம் நித்யா வெளியே போகும் போது மாதவனை என் அறையிலிருக்கும் நாற்காலியில் கட்டிப் போட்டு விட்டுப் போய் விடுவாள். .நான் அவனைப் பார்த்துக் கொள்ள வேண்டுமாம். அவனைப் பார்த்து என் மனம் பரிதவித்தது..

நானும் அவனிடம் ஏதாவது பேசுவேன். அவன் பதில் பேச மாட்டான். அவன் கண் என்னைப் பார்க்காது. சில சமயம் அவனிடமிருந்து உறுமல் மட்டும் வரும்.

“மாதவா, நான் கால் ஒடிஞ்சி போய் கிடக்கிறேன். தஞ்சாவூரில் நான் ஒரு வீட்டில் இருக்கும்போது எதிர் போர்ஷனில் குடியிருந்த தஞ்சாவூர் பட்சிராஜன் என்பவருக்கு உதவி செய்திருக்கிறேன். அவருக்கு இரண்டு காலும் கிடையாது. காலையில் இயற்கை உபாதையை போக்குவதற்கும், அவர் குளிப்பதற்கும் உதவி செய்வேன். அவருடைய மனைவி இறந்து விட்டார். ஒரே பையனும் சேரி பெண்ணை கல்யாணம் செய்துகொண்டு வீட்டை விட்டு ஓடி விட்டான். அவன் எங்கிருக்கிறான் என்று தெரியவில்லை. சில சமயம் இரவு கூட அவர் என்னை உதவிக்கு அழைப்பார். நான் போய் உதவி செய்துவிட்டு வருவேன். அந்த மாதிரி இரண்டு வருடம் அவருக்கு உதவி செய்தேன். மனுசன் மாரடைப்பில் போய் விட்டார்.”






மாதவனிடமிருந்து எந்தப் பதிலும் வராது. அவன் வேறெங்கோ பார்த்துக் கொண்டிருப்பான்.

“மாதவா நம்ம இரண்டு பேருக்கும் ஒரே நிலைமை வீட்டுக்குள் அடைபட்டு இருக்கிறோம் பார்த்தாயா ?”

“என்ன யாருகிட்டே பேசிண்டு இருக்கீங்க?” என்று கேட்டுக் கொண்டே வாட்ச்மேன் பார்த்தசாரதி வந்தான். பார்த்தசாரதிக்குக் காலை எட்டு மணியிலிருந்து இரவு எட்டு மணிவரை வேலை.

”மாதவனிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். நம் மனதிலுள்ள குறையை யாரிடமாவது சொல்லி விட வேண்டுமல்லவா? யாரும் இல்லையென்றால் சுவற்றிடமாவது சொல்லி அழ வேண்டும். அவனுக்கு எதுவும் புரியாவிட்டாலும் நான் அவனிடம் என்னுடைய குறையைச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தேன்”.

“அம்மா எங்கே? வெளியே போய் இருக்காங்களா ?”

”பகவத் கீதை வகுப்புக்குப் போய் இருக்காங்க. அதெல்லாம் உயர்ந்த விசயம். அவங்களுக்கு அதில் ஈடுபாடு அதிகம்.. எனக்கு அதைப் பத்தி தெரியாது. ”உங்களுக்கு அதிலெல்லாம் ஈடுபாடு இல்லையா ?”

நல்ல கேள்வி கேட்டாய். எனக்கும் பக்திக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது. ஆன்மீகத்தில் மனம் செல்லாததிற்குக் காரணம் இளம் பிராயத்தில் “ இப்பவே எதுக்கு” என்றும் யெளவன பருவத்தில் ‘ இப்போ போய் எதுக்கு” என்றும், முதிய பருவத்தில் இனிமேல் எதுக்கு’ என்றும் உற்றாரும் உறவினரும் திசை மாற்றி விட்டதால்தான்.” என்று கூறிச் சிரித்தேன்.

பார்த்தசாரதியும் சிரித்தான். சிறிது நேரத்தில் நித்யா வந்து விட்டாள் . வழக்கம் போல் ஸ்கைப்பில் சத் சங்கத்தில் ஈடுபட்டாள். அது முடியும் போது இரண்டு மணி ஆகி விட்டது. எனக்குப் பசிக்குமே

என்று அவள் கவலை பட்டதே கிடையாது.

எனக்கோ பசியோ பசி. நித்யா சுட சுட அரிசி சோற்றை என் முன் வைத்தாள். தெனாலி ராமன் பூனைக்குப் பால் வைத்த மாதிரி இருந்தது அவள் செய்தது. சூடாக வைத்த உணவை என்னால் கையால் பிசைய முடியவில்ல.



வலியால் துடித்துக் கொண்டு இருக்கும் போது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் கொதிக்கும் சாம்பாரைச் சோற்றின் மீது கொட்டினாள்.


"என்ன நித்யா இது ? சோறு கொதிக்கிறது ஆறட்டும். அதுக்குள்ளே சாம்பாருக்கு என்ன அவசரம் ? என்றேன் எரிச்சலுடன்..".

"என்ன, வர வரக் குற்றம் குறை கண்டுபிடிக்கறீங்க உங்களுக்கு இங்கே இருக்கப் பிடிக்கலேன்னா வெளியே போங்க." என்று கத்தினாள்.

நித்யாவின் இந்த வார்த்தைப் பிரயோகத்தைக் கண்டு நான் அதிர்ந்து போனேன். நான் அங்கு வந்தது முதல் படிப்படியாய் அவளுடைய உபசரிப்பில் விரிசல்கள் வளர்ந்து வந்தன. அன்று அமாவாசை. நித்யா அறையைத் தண்ணீர் போட்டு அலம்பியிருந்தாள். டைல்ஸ் போட்ட தரை. அப்போது பார்த்துத்தான் நான் குளித்து விட்டு வந்தேன். டைல்ஸ் தரையிலும் ஈரம்.. கால் வழுக்கி படாரென்று விழுந்து விட்டேன். கைத்தடி நழுவி ஒரு பக்கம் விழ அம்மா என்று கத்திவிட்டேன். அப்போது நித்யா பகவத் கீதை பற்றிக் குருவின் உபந்நியாசத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் எந்தச் சப்தம் வந்தாலும் வைரக்கியமாய் சத் சங்கத்தை விட்டு வரவே மாட்டாள். அது அவள் சுபாவம். நான் செய்வதறியாது தவித்தேன்., எழுந்திருக்க முடியவில்லை. துக்கத்தால் கண்கள் கலங்கின. நல்ல காலமாக அப்போது பால்காரி செல்வி வந்தாள்.

"அய்யோ! அய்யா! கீழே விழுந்துட்டீங்களே". கீழே விழுந்திருந்த கைத்தடியை எடுத்து என் கையில் கொடுத்து, "மெல்ல பிடிச்சுண்டு எழுந்திருங்க" என்றாள்..

அவளுடைய மனித நேயம் என்னைப் பிரமிக்க வைத்தது. 'பட்ட காலிலே படும்' என்று சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். அடிபட்ட இடத்திலேயே எனக்கு மீண்டும் அடிபட்டு விட்டது.. உயிர் போகிற மாதிரி வலித்தது. என்னால் எழுந்திருக்க முடியவில்லை.



மெதுவாக எழுந்து வந்த நித்யா, என்னைப் பார்த்து, "கர்மயோகத்தைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தேன். சே! எதையுமே கேட்க விட மாட்டீங்களே. பார்த்து நடந்திருக்கணும். இப்படி யாராவது விழுவார்களா? எழுந்திருங்க". என்று அதட்டினாள்.

என்னாலே எழுந்திருக்க முடியவில்லை. ஆனால் எனக்கு நடக்க முடியவில்லை. நகர்ந்து நகர்ந்துதான் போகவேண்டியிருக்கு. கஷ்டப்பட்டு எழுந்து நடந்தாலும் இரண்டடி நடப்பதற்கு பத்து நிமிடங்கள் கடந்து விடும்.




"என்ன யோசிச்சிட்டிருக்கீங்க.? இந்த கீரையை ஆய்ந்து கொடுங்க" என்று ஒரு கீரைக் கட்டை என் முன் நித்யா கொண்டு வந்து வைத்தாள்.

நான் அவளைப் பார்த்தேன்."என்ன பார்க்கறீங்க. கால்தான் முடமாயிடுச்சி. கை நல்லாத்தானே இருக்கு." நித்யா ஏன் இப்படி மாறி விட்டாள் ?" காரணம் தெரியவில்லை.

சோகம் என்னை வாட்டியது. ஓ மனமே ! இந்தத் துன்பங்களிலிருந்து விடுபட்டு கவலையில்லாத மனிதனாக ஆவது எப்போது? யோசிக்காமல் உறவோடு வந்து தங்கிவிட்டேனே எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும் என்று எண்ணிக்கொண்டே கீரையை ஆய்ந்து வைத்தேன். என்னவோ நினைத்தேன்; என்னவோ நடக்கிறதே ஆண்டவா!

நித்யா எதெற்கெடுத்தாலும் சிடுசிடுத்தாள். என்னிடம் கடின வார்த்தைகளை உபயோகித்தாள். என்னால் எதுவும் செய்ய முடியாத நிலை. நான் முதியோர் இல்லம் போகலாமென்றாலோ என்னிடம் பணம் இல்லை. நான் நித்யாவிடம் அடைக்கலமானது தவறான முடிவோ என்று மிகவும் வருத்தப் பட்டேன்.

எனக்கு நித்யா காலையில் டீ கொடுக்கும்போது இரண்டு பிஸ்கட்டைத் தட்டில் வைத்துக் கொடுப்பாள் . பத்திரமாக வைத்திருப்பேன். மாதவனிடம் சாப்பிடக் கொடுப்பேன். அல்லது காலையில் செல்வி பால் போட வரும்போது கூட ஓடி வருமே நான்கு நாய்கள்!. அவைகளுக்குப் போடுவேன். நாய்க்குப் பிடித்த வஸ்து பிஸ்கட்". அவள் அன்று ஸ்கைப்பில் சத் சங்கத்தில் ஈடுபட்டிருந்தாள். எனக்கு ஒண்ணாம் நெம்பர் அவசரமாய் வந்து விட்டது . நித்யா என்று பல முறை உரக்க அழைத்தேன்.. அவள் ஏனென்று கேட்கவில்லை. நான் தட்டுத் தடுமாறிப் போய் விட்டு வருவதற்குள் முட்டிக்கொண்டு வந்த இயற்கை உபாதை வேட்டியை மீறி தரையைத் தொட்டு விட்டது. சிறிது நேரம் கழித்து செவிகளில் ஜிமிக்கி அசைந்தாட கைகளில் அழகிய வளையல்கள் ஊஞ்சலாட வந்தாள் . என் நிலைமையைப் பார்த்ததும் சினத்துடன், "கிழமே, ஒழுங்கா இருந்தா இரு. இல்லாட்டா முதியோர் இல்லத்திலே சேர்த்திடுவேன்.." என்று கத்தினாள்.



என் இயலாமையை அவளுக்கு எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. நான் பேசாமல் இருந்தேன். அவள் முணுமுணுத்துக் கொண்டே அறையைத் துடைத்தாள். இதுபோல் பல முறை நடந்து விட்டது! இன்னொருவருடைய கையை எதிர்பார்த்தாலே துன்பம்தான். அதுவும் இயற்கை உபாதைக்கு மற்றொருவர் உதவியை எதிர்பார்க்கும் நிலமையில் நான் இருக்கிறேன். தெய்வமே, என்னை ஏன் உயிரோடு வைத்திருக்கிறாய். என்னை உன்னிடம் சீக்கிரம் அழைத்துக் கொண்டு விடு என்று பல முறை பிரார்த்தனை செய்தேன். ஒரு முறை நித்யாவின் கணவன் ஊரிலிருந்து வந்திருந்தார். அவள் கணவனுடன் தர்க்கம் செய்து கொண்டிருந்தது காதில் விழுந்தது. இந்த பாழாய்ப் போன இயற்கை உபாதை அந்த சமயத்திலேதானா வரவேண்டும் . கைத்தடி கைக்கு எட்டும் தூரத்தில்லை. .நித்யா என்று கூப்பிடுவதைத்தவிர வேறு வழியில்லை. "நி..த்..யா" என்று தயங்கித் தயங்கிக் கூப்பிட்டேன் சிவபூசையில் கரடி நுழைந்தது போல் என் குரலைக் கேட்டதும் கோபத்துடன் எழுந்து வந்தவள் "ஏன் கூப்பிட்டீங்க? " என்று எரிந்து விழுந்தாள்.சுண்டு விரலைக் காண்பித்தேன்.




"கர்மம், கர்மம், உங்களுக்கு எதுக்கும் நேரம் காலம் எதுவும் கிடையாதா? வேளை கெட்ட வேளையிலே ஒன் பாத்ரூம் போகணுமா? இழவு, எல்லாம் என் தலையெழுத்து. உன்னாலே என் பிராணன் போறது." என்று புலம்பிக்கொண்டே கைத்தடியை எடுத்துக் கொடுத்து நான் எழுந்திருக்க உதவி செய்தாள். "அந்தக் கிழக் கோட்டானுக்கு வேறே வேலையில்லை. அது செய்யும் லீலைகள் சொல்லி மாளாது. என் உயிரை வாங்றது, சனியன் என்று நித்யா அவள் கணவனிடம் சொல்லிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. "இன்னொருத்தரை அண்டி இருந்தால் எவ்வளவு பேச்சுக் கேட்க வேண்டியிருக்கிறது. நான் கேட்டது வெறும் வார்த்தைகளா, இல்லை விஷம் தோய்ந்த அம்புகளா? நாக்கை பிடுங்கிக் கொண்டு சாகலாம்" என்று தோன்றியது..


அன்று காலையில் நித்யா குளித்து பட்டுப்புடவை கட்டி வெளியே போக தயார் ஆகி விட்டாள். மாதவனை என்னுடைய அறையிலிருந்த நாற்காலியில் எப்போதும் போல் கயிற்றால் கட்டி விட்டுப் போய் விட்டாள். அவள் போய் ஒரு மணி நேரம் கழித்து அவன் வாயிலிருந்து வேதனையான சப்தம் வந்தது. அவன் முகம் வாடியிருந்தது. நேரம் ஆக ஆகச் சப்தம் அதிகரித்தது அவனுக்குப் ஃபிட்ஸ் வந்து விட்டது. அப்போது பார்த்தசாரதி வந்தான். "மாதவனைப் பார். அவனுக்கு உடம்பு சரியில்லை" போல் தெரிகிறது. என்றேன்.


"ஆமாம், நீங்கள் சொல்வது சரி".

உடனே செல்போனை எடுத்து நித்யாவைத் தொடர்பு கொள்ள முயன்றேன். பயனில்லை. அலைபேசியை அணைத்து விட்டால் எப்படித் தொடர்பு கொள்ள முடியும்? ஐயோ ! பையனை அம்போன்னு விட்டுவிட்டு வெளியே போக எப்படி ஒருத்திக்கு மனசு வரும். என் நெஞ்சு கொதித்தது.

"பக்கத்தில் டாக்டர் எங்கே இருக்கிறார் ?" என்று கேட்டேன். தெருக் கோடியில் ஒரு நர்சிங் ஹோம் இருக்கிறது என்றான் பார்த்தசாரதி. அவனே போய் ஒரு ஆட்டோவை அழைத்து வந்தான். மாதவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனோம். பார்த்தசாரதி ஆஸ்பத்திரியை அடைந்ததும் எனக்கு ஒரு சக்கர நாற்காலியை

ஏற்பாடு செய்தான். மாதவனை டாக்டரிடம் காண்பித்தோம். ”தக்க சமயத்தில் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தீங்க” என்று டாக்டர் சொன்னார் அவனை அங்கு அட்மிட் செய்து விட்டோம். இருபத்தி நான்கு மணி நேரம் போன பிறகுதான் எதுவும் சொல்ல முடியும் என்று பெரிய டாக்டர் சொல்லிவிட்டார்.





நித்யாவுக்கு விசயம் தெரிந்து அவள் ஆஸ்பத்திரிக்கு வரும் போது மணி மூன்று ”நாராயணீயம் யார் வீட்டிலோ வைத்திருந்தார்கள். அங்கே போய் விட்டேன்“ என்றாள். அவள் முகம் பேயறைந்தது போல் இருந்தது.அவள் மூன்று நாள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியதாயிற்று. அந்த மூன்று நாட்களிலும் பார்த்தசாரதி எனக்கு மிகவும் உதவி செய்தான். காபி டிபன் இத்யாதி ஓட்டலிருந்து வாங்கிக் கொடுத்தான். காலைக் கடன் கழிப்பதற்கு உதவி செய்தான்.

என் மனசில் ஒரு குமட்டல், குமைச்சல் ஒரே கோபம். ‘அவ நன்னாயிருக்க மாட்டாள்’என்று சபித்தேன். பால்காரி செல்விக்கும் வாச்மேன் பார்த்தசாரதிக்கும் இருக்கும் மனிதாபிமானம் கூட நித்யாவுக்கு இல்லை. தடிச்சிறுக்கி! நான் பார்த்து வளர்ந்தவ. எப்பவும் என்னைத் திட்டிக் கொண்டே இருக்கிறாள். மனுஷியா அவள் நடந்து கொள்ளவில்லையே என்று முணுமுணுத்தேன். இந்த மூன்று நாட்களில் ஒரு நாள் என் பால்ய சிநேகிதன் வாசுவிடமிருந்து அலைபேசி வந்தது. பெருங்களத்தூரிலுள்ள ஒரு முதியோர் இல்லத்தில் இருக்கும் அவன், என்னைக் கூட வந்து வசிக்கும்படி கேட்டுக் கொண்டான். நான் நன்றாகச் சிந்தித்தேன். நித்யாவோ பணம் வாங்குவதற்கு முன் ஒரு முகம், பணம் வாங்கிய பின் இன்னொரு முகத்தைக் காட்டுகிறாள். பணம் போனால் பரவாயில்லை. நான் சநதோஷமாக வாழ வேண்டும். அதனால் முதியோர் இல்லம் போய் விடலாம் என்று தீர்மானித்து விடடேன். அவ்ள் வீட்டுக்கு வந்ததும் சொல்லி விட்டுப் போக வேண்டும் என்று காத்திருந்தேன்.

மாதவன் ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்து விட்டான். .இதுதான் அவளிடம் சொல்லச் சரியான தருணம் . என்று நினைத்து, ” நித்யா உன்னிடம் ஒன்று.” என்று ஆரம்பித்தேன். அதற்குமுன் நித்யா முந்திக் கொண்டு,

“மாமா, மாதவன் பிழைத்ததே கடவுள் அனுக்கிரகம். நீங்க சரியான சமயத்திலே அவனை ஆஸ்பிட்டலிலே சேர்க்காமல் சேர்க்காமல் இருந்திருந்தால் அவன் பிழைத்திருக்க மாட்டான். குழந்தை புனர்ஜென்மம் எடுத்து வந்திருக்கான். நான் உங்களைத் திட்டியும் கொடுமைப் படுத்தியும்கூட எனக்கு நல்லது பண்ணியிருக்கீங்க.! நான் உங்களை மிகவும் தொந்தரவு படுத்தி விட்டேன் மாமா. எல்லாவற்றிக்கும் என் கண் மூடித்தனமான ஆன்மீக நாட்டம்தான் காரணம்.. என்னை மன்னித்து விடுங்க” என்று தழுதழுத்த குரலில் சொல்லி என்னை நமஸ்கரித்தாள்.



அவன் உடம்பு சரியில்லாமல் ஆஸ்பிட்டலில் இருந்தபோதுதான் பெரியவங்களையும் குழந்தையையும் முதலில் கவனிக்காம விட்டது தவறு என்பதை உணர்ந்தேன். தனக்கு மிஞ் சியதுதான் தானமும் தருமமும் என்பது போல் குழந்தைகளுக்கும் பெரியவங்களுக்கும் பின்னால்தான் தெய்வ வழிபாடு. கீதை கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே என்கிறது. ஆன்மிகத்தின் அடிப்படை நோக்கத்தை நான் புரிந்து கொள்ளத் தவறி விட்டேன். நான் என் கடமையைச் செய்ய தவறி விட்டேன்.. குழந்தை வளர்ப்பைப் புறக்கணித்தேன். பகவத்கீதையை விட பெரியது வேறொன்றில்லை என்று நினைத்தேன். அதனால் பெரியவங்களுக்கும் குழந்தைக்கும் முக்கியத்வம் கொடுக்காமல் பக்திக்கு முதலிடம் கொடுத்து எப்போதும் நேரத்தை அதில் செலவழித்தேன் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதை அநுபவத்தில் உணர்ந்து கொண்டேன். இனிமேல் பக்திக்குச் செலவழிக்கும் நேரத்தைப் பாசத்திற்கும் கடமைக்கும் செலவழிப்பேன். பாசத்துக்குப் பின்தான் பக்தி ! !மனித சேவையே மகத்தான

சேவை!

நான் நெகிழ்ந்துதான் போனேன். மன்னிப்போம், மறப்போம் என்பது மனிதப் பண்பு அல்லவா? மனசுக்குள் அவளை மன்னித்து விட்டேன். நான் சொல்ல நினைத்ததைச் சொல்லவில்லை. “பரவாயில்லை நித்யா. நீ குழந்தையைச் சரியாகப் பராமரிக்கவில்லை என்பதை இப்போதாவது உணர்ந்தாயே.அது போதும். மாதவனை இனி நன்கு கவனி. நான் உயிரோடு இருக்கும்வரை உன்னோடு துணையாய் இருப்பேன்.”நித்யா இப்போதெல்லாம் மாதவனிடம் அதிக நேரம் செலவிட்டாள். பன்னிரண்டு மணி அடித்தால் சத் சங்கம் என்று இருப்பவள் இப்போதெல்லாம் அதைப் பற்றி கண்டுகொள்வதில்லை. ”என்னிடம் அவள் கனிவுடன் பேசுகிறாள். அன்பே வடிவானவளாக மாறி விட்டது எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.



நித்யா வெளியே கிளம்புவதற்கு தயார் செய்து கொண்டிருந்தாள். சுலோக வகுப்புக்கோ அல்லது நாராயணீயம் வகுப்புக்கோ போகப் போகிறாள் என்று நினைத்தேன். நான் டாக்டரிடம் மாதவனை அழைச்சிண்டு போறேன். என்றவளை நான் திகைப்புடன் பார்த்தேன. “மாதவனுக்கு உடம்பு சரியாயிடுத்துன்னு பார்க்கறீங்களா? ”பார்த்தசாரதிதான், ஆட்டிசத்துக்கு அடையாறில் ஸ்பெஷல் டாக்டர் ஆளவந்தார் இருக்கார். அவரிடம் மாதவனைக் காண்பியுங்கள். பயிற்சிகளின் மூலம் அவனைப் பேச வைச்சிடுவார்” என்று அட்ரஸ் கொடுத்தான். ஒரு வாச்மேனுக்கு இருக்கிற மனித நேயம் கூட எனக்கு ல்லையே என்று நினைத்தால் எனக்கு ரொம்ப வெட்கமாயிருக்கு.




“நித்யா, நீ சொல்வது மிகவும் சரி. கடமையென்றால் என்ன? எதைச் செய்யணுமோ அதை செய்வதுதான் கடமை. ஆனால் நாம் எதுக்கு முக்யத்துவம் கொடுக்கிறோமோ அதைச் செய்வதை கடமையாய் நினைக்கிறோம். உன்னிடமிருந்து எனக்கும் தெளிவு பிறந்தது. நானும் என் கடமையைச் செய்யத் தவறி விட்டேன். பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்று இந்நாள்வரை நேரத்தை வீணடித்து விட்டேன் ; எதையும் கண்டிலேன் ;. புத்தகங்களையாவது படித்திருக்கலாம். அதுவும் செய்திலேன். எதுவும் தெரியாமல் மூடனாக இருந்து விட்டேன். நீ மனம் மாறி விட்டாய். நானும் மாறி விடுகிறேன். இறையடியை மனதில் பற்ற பகவானின் நாமத்தை இனி சொல்லப் போகிறேன்., மாதவன் இளங்குருத்து. அவனை நன்றாக வளர்ப்பது நம் கடமை. அவனுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பதில் தினந்தோறும் கொஞ்ச நேரத்தைச் செலவழிப்பேன். நித்யா, உன் கிட்டே இருக்கிற பகவத் கீதை புத்தகங்களையெல்லாம் எங்கிட்டே கொடு . நேரம் கிடைக்கும் போது கீதையின் மணத்தை நுகருகிறேன்..” அவள் கண்களில் அன்பு பளிச்சிட்டது. உடனே ஒரு புத்தகத்தை எடுத்து என்னிடம் கொடுத்தாள்.

“வா பட்டு வா, போகலாம்” என்று மாதவனைக் கொஞ்சி அழைத்தாள். அவன் கன்னத்தில் பாச மழையைப் பொழிந்தாள். ஞானம் வந்த பின்பே அவளிடம் பாசம் பொங்கியது.. அப்போது வாச்மேன் பார்த்தசாரதி,” நான் எதாவது உதவி செய்யணுமா ஐயா? ”என்று என்னை நோக்கிக் கேட்டுக் கொண்டே வந்தான். “நீ யாரப்பா? பெற்றப் பிள்ளையாட்டம் இவ்வளவு கரிசனத்துடன் கேட்கிறாய். கேட்காமலேயே உதவி செய்கிறாய்.” என்றேன். “என் அ.ப்பா தஞ்சாவூர் பட்சிராஜன்”. எனக்கு ஆச்சரியம் மேலிட்டது . ஆம் ! நான் அன்று உதவி செய்த அதே பட்சிராஜன்! நாராயணா! உன் கணக்கும் சரியாகத்தான் இருக்கிறது என்று வாய் முணுமுணுத்தது. கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் உதட்டின் வழியாக வாயில் விழுந்து இனித்தது!

# தும்பியும் மலரும்

மகரந்தப் பொடியைத் தென்றல் வாரிக்கொண் டோடி
அகம்நொந்த தும்பிஎதிர் அணியாகச் சிந்தும்!
வகைகண்ட தும்பிதன் வயிடூரி யக்கண்
மிகவே களிக்கும் அவள் விஷயந் தெரிந்தே!
‘பூப்பெய்தி விட்டாள்என் பொற்றாம ரைப்பெண்
மாப்பிள்ளை என்னை அங்கு வரவேண்டு கின்றாள்
நீர்ப்பொய்கை செல்வேன்’ என நெஞ்சில் நினைக்கும்:
ஆர்க்கின்ற தீம்பண் ஒன்றை அவளுக் கனுப்பும்!
அழகான பொய்கை மணி அலைமீது கமலம்
பொழியாத தேனைத் தன் புதுநாதன் உண்ண
வழிபார்த்திருந்தாள் உடல் மயலாற் சிவந்தாள்!
தழையும் பண்ணொன்று வரத் தன்மெய் சிலிர்த்தாள்.
கமழ்தாமரைப் பெண் இதழ்க் கலைசோரக் கைகள்
அமையாது தாழ ஆர்! ஆ!! என்றிருந்தாள்.
இமைப்போதில் தும்பி காதல் இசை பாடி வந்தான்.
கமழ்தாமரைப் பெண் இதழ்க் கையால் அணைத்தாள்.

பாவேந்தர் பாரதிதாசன்

# ‘இட்லி கடை’ திறந்தாச்சு… போனியாகுமா?



## தனுஷுக்கு இப்படமாவது கை கொடுக்குமா?

நடிகர் தனுஷ் இயக்கி, கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் ‘இட்லி கடை.’ அருண் விஜய், நடிகை நித்யா மேனன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள இப்படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். இது ஒரு குடும்ப பொழுதுபோக்கு திரைப்படமாக உருவாகியுள்ளது. படத்தை அக்டோபர் 1ஆம் தேதி திரையரங்குகளில் ரெட் ஜெயண்ட் வெளியிடுகிறது. இசை வெளியீட்டு விழா ஏற்கெனவே நடந்து முடிந்த நிலையில் படத்தின் டிரைலரை படக்குழு வெளியிட்டுள்ளது.

# சூர்யா வெளுத்துக் கட்டும் 'கருப்பு'



## திருப்பம் தருவாரா 'கருப்பு' சாமி?

ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பில், ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படம் 'கருப்பு'. இதில் த்ரிஷா, ஸ்வாசிகா, ஷிவாதா, யோகி பாபு, நட்டி உள்ளிட்டோர் நடிக்கின்றனர். இந்தப் படத்துக்கு சாய் அபயங்கர் இசை அமைக்கிறார். சூர்யாவின் 50—வது பிறந்தநாளை முன்னிட்டு 'கருப்பு' படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. ஆர்.ஜே. பாலாஜி இப்படத்தில் வில்லனாகவும் நடித்திருக்கும் இப்படத்தில், சூர்யா ஒரு வழக்கறிஞராக நடித்துள்ளார். மக்களின் வேண்டுதலை நிறைவேற்றும் கருப்பசாமி போல சூர்யா வருவதாக டீசர் வெளியாகியிருக்கிறது.

## முக்கோணக் காதலில் ‘ஹை ஜவானி!’



## ‘ஒருதலை ராகம்’ காலம் மாறிப் போச்சா?!

‘ஹை ஜவானி தோ இஷ்க் ஹோனா ஹை’ என்ற படத்தின் தயாரிப்பாளர்கள் தங்கள் திரைப்படத்தின் வெளியீட்டு தேதியை அறிவித்துள்ளனர். வாருண் அத்வான், பூஜா ஹெக்டே, மிருணாள் தாகூர் முக்கிய வேடங்களில் நடித்து வரும் இந்த காதல் காமெடிபடம், *2026* ஏப்ரலில் திரையரங்கிற்கு வரும். டேவிட் தன்வான் இயக்குகிறார். மனீஷ் பால், செங்கிச்சேதான் போன்ற நட்சத்திரங்கள் பங்குபெறுகிறார்கள். முக்கோணக் காதல் கதையுடன் வரும் காமெடி படம் என்பதால் எதிர்பார்ப்புக் கூடியுள்ளது.



## சிறப்பான அறிவுரைபடி வாழ்ந்தால் வாழ்க்கை சிறக்கும்!

# ஷாருக் சொன்னதைப் பின்பற்றும் தீபிகா

‘கல்கி 2’ படத்தில் நடிக்க விதித்த நிபந்தனைகளால் தீபிகா படுகோனே அப்படத்தில் இருந்து நீக்கப்பட்டார். இது குறித்து தீபிகா படுகோனே ஷாருக் கானின் கையை பிடித்தபடி புகைப்படத்தை பகிர்ந்துள்ள இன்ஸ்டாகிராம் பதிவில், ``18 ஆண்டுகளுக்கு முன்பு ‘ஓம் சாந்தி ஓம்’ படத்தில் நடித்தபோது ஷாருக் கான் கற்றுக்கொடுத்த முதல் பாடம், ‘படத்தின் வெற்றியை விட படத்தை தயாரிப்பது மற்றும் யாருடன் நடிக்கிறோம் என்பதுதான்.’ எனவே, நான் அதிகமான படங்களில் நடிப்பதை விட, ஷாருக் கற்றுக்கொடுத்த பாடத்தை 18 ஆண்டுகளாகப் பின்பற்றுகிறேன். அதனால்தான் நாங்கள் எங்கள் 6—வது படத்தில் மீண்டும் சேர்ந்திருக்கிறோம்’’ என்று குறிப்பிட்டுள்ளார். தீபிகா படுகோனே தொடர்ச்சியாக நடிகர் ஷாருக் கானுடன் நடித்த அனைத்து படங்கள் ஹிட்டாகியதும், ‘கிங்’ படத்தில் ஷாருக் கானின் மகள் சுஹானா கானும் அறிமுகமாவதும் குறிப்பிடத் தக்கது.



# இந்தியைத் தவிர்க்கும் மாளவிகா மோகனன்!

# அடேங்கப்பா... என்ன தெளிவு!

தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் நடித்து வரும் மாளவிகா மோகனன், இப்போது பிரபாஸுடன் ‘த ராஜா சாப்’, கார்த்தியின் ‘சர்தார் 2’ படங்களில் நடித்து வருகிறார். அவர் மோகன்லாலுடன் நடித்த ‘ஹிருதயபூர்வம்’ படம் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்நிலையில், இந்தியில் சில படங்களில் நடித்துள்ள அவர், இப்போது இந்தி வாய்ப்புகளைத் தவிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர், “தமிழ், தெலுங்கு மலையாளத்தில் எனக்கு சிறந்த கதைகள் கிடைக்கின்றன. அந்தப் படங்களை விரும்பி ஏற்பதால், இந்தி படங்களில் நடிப்பதைத் தீவிரமாகத் தவிர்த்து வருகிறேன். பல கதைகள் வந்தன. எதுவும் உற்சாகமான கதாபாத்திரமாக இல்லாததால், நிராகரித்து விட்டேன். ஒரு படத்துக்காக உழைக்கும் நமக்கு, அந்தக் கதையோ, கதாபாத்திரமோ முக்கியமானதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.



## உலக சினிமாவைக் கலக்க ஒரு திட்டம்!

### ஹாலிவுட்டைக் கலக்க பிரியங்காவே போதுமே...

டோலிவுட் சூப்பர் ஸ்டார் மகேஷ் பாபுவும், எஸ்.எஸ். ராஜமௌலியும் இணைந்துள்ள **‘SSMB** *29’* திரைப்படம், இந்தியாவிலேயே மிக அதிக பட்ஜெட்டில் தயாராகி வரும் இப்படம் குறித்து திரையுலக வட்டாரங்களில் சுவாரஸ்யமான செய்திகள் பரவி வருகின்றன. ‘பாகுபலி 1’, ‘பாகுபலி 2’ மூலம் இந்திய அளவில் தெலுங்கு சினிமாவை எடுத்துச் சென்ற ராஜமௌலி, ‘ஸிஸிஸி’ திரைப்படம் ஆஸ்கர் விருதைப் பெற்றதன் மூலம் ஹாலிவுட் வட்டாரங்களில் தெலுங்கு சினிமாவின் பலத்தை வெளிப்படுத்தினார். இம்முறை ‘ஷிஷிவிஙி 29’ திரைப்படத்தின் மூலம் உலக பாக்ஸ் ஆபிஸில் 10,000 கோடிகளை வசூலிக்கவும், 120 நாடுகளில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. ஹாலிவுட் படங்களுக்கு சற்றும் சளைக்காத வகையில் உருவாகும் இப்படத்தில் மகேஷ் பாபுவுக்கு ஜோடியாக சர்வதேச நடிகை பிரியங்கா சோப்ரா நடிக்கிறார் என்பதுதான் ஹாட் நியூஸ். மேலும், சில ஹாலிவுட் நட்சத்திரங்களும் இப்படத்தில் இணைந்துள்ளதாக கூறப்படுகிறது.



## புதிதாய் ஜோடி சேரும் அசத்தல் ஜோடி!

## டொவினோவுடன் இணையும் நஸ்ரியா

மலையாளத்தின் முன்னணி நடிகராக இருக்கும் டொவினோ தாமஸ் வித்தியாசமான படங்களுக்குப் புகழ் பெற்றவர். கடைசியாக இவரது நடிப்பில் நரிவேட்டை வெளியானது. இதற்காக அவர் சிறந்த ஆசிய நடிகர் என்ற விருதையும் வென்றார். இந்நிலையில், டொவினோ தாமஸ் உடன் இணைந்து புதிய படத்தில் நஸ்ரியா நடிக்கிறார். சூக்ஸமதர்ஷினி படத்தில் நஸ்ரியா கடைசியாக நடித்திருந்தார். இந்தப் படம் நல்ல வரவேற்பைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஜோடியின் படத்துக்கு இப்போதே எதிர்பார்ப்பு எகிறியுள்ளது.




## அப்பா – மகனை முன்வைத்து வன்முறையா?!

மோகன்லால் நடிக்கும் பான் இந்தியா படமான ‘விருஷபா’ படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. இதைக் கன்னட இயக்குநர் நந்தா கிஷோர் இயக்குகிறார். இதில் ரோஷன் மேகா, ஸ்ரீகாந்த் மேகா, ராகிணி திவேதி, நேகா சக்ஸேனா, சஹ்ரா எஸ் கான் உட்பட பலர் நடித்துள்ளனர். ஏ.வி.எஸ் ஸ்டுடியோ, பர்ஸ்ட் ஸ்டெப் மூவிஸ், பாலாஜி டெலிபிலிம்ஸ், கனெக்ட் மீடியா இணைந்து தயாரித்துள்ளன. காதல், பழிக்கு பழி வாங்கும் உணர்வு என இரண்டு நேர் எதிர் உணர்ச்சிகளுக்கு இடையேயான மோதலை மையமாகக் கொண்ட ‘விருஷபா’ திரைப்படம் அப்பா — மகன் இடையிலான உறவை மையப்படுத்தி தயாராகிற இப்படம், அக்டோபர் 16—ம் தேதி வெளியாகிறது. அப்பா — மகனை முன்வைத்து வன்முறையா?!



# குரல்கள்

**ஆலிஸ் ஆன் மன்ரோ**

**தமிழாக்கம் : கயல் எஸ்**

என் அம்மாவின் வளரிளம் பருவத்தில், அவளும் அவளுடைய மொத்தக் குடும்பமும் பள்ளிக்கூடத்திலோ, பெரிய முன்பக்க அறையுடைய பண்ணை வீடுகளிலோ நடந்த நடன நிகழ்ச்சிகளுக்குச் செல்வதுண்டு. சிறியவர்கள்முதல் பெரியவர்கள்வரை கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சிகளில் வீட்டிலோ பள்ளியிலோ இருந்த பியானோவை யாராவது வாசிப்பர். வயலினை யாராவது வீட்டில் இருந்து கொண்டு வந்திருப்பார்கள்.

அந்த நடனங்கள் சிக்கலான வடிவங்களும் நடன அசைவுகளையும் கொண்டிருந்தன. தனித்துவமான சிறப்புடையவராக அறியப்பட்ட ஒரு நபர் (எப்போதுமே அது ஆணாகவே இருக்கும்) உச்சஸ்தாயியில் அனைவரையும் கூப்பிடுவார். அந்தக் குறிப்பிட்ட நடனம் ஒருவருக்கு ஏற்கனவே தெரிந்திருந்தால் தவிர, விசித்திரமாகவும் அவ நம்பிக்கையுடனும் வாசிக்கப்படும் அதிவேகமான அந்தத் தாளகதியால் அவர்களுக்கு எந்தப் பயனும் இருக்காது.




அங்கிருந்த அனைவருமே, தம்முடைய பத்து அல்லது பன்னிரெண்டு வயதிற்குள் அவையனைத்தையும் கற்றுக் கொண்டார்கள். திருமணமாகி, மூன்று குழந்தைகளுக்குத் தாயாகியிருந்த என் அம்மா அந்த நடன நிகழ்ச்சிகள் நடைபெற்ற கிராமப்புறத்தில் இப்போது வசித்திருந்தால், அவற்றை அனுபவிக்கும் மன நிலையில் இன்னமும் இருந்திருப்பார். பழைய நடன பாணிகளை ஓரளவிற்கு மாற்றி அமைக்கப்பட்ட, தம்பதிகள் ஆடும் அந்த நடனத்தை அவளும் ரசித்திருக்கக்கூடும். ஆனால் அவள் இப்போது ஒரு மோசமான சூழ்நிலையில் இருந்தாள். அதாவது நாங்கள் இருந்தோம். எங்களுடைய குடும்பம் ஊருக்கு வெளியே இருந்தது.

என் அம்மாவைவிட அனைவராலும் அதிகம் விரும்பப்பட்ட என் அப்பா, தமக்கு விதிக்கப்பட்டவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நினைப்பவர். ஆனால் என் அம்மா அப்படியில்லை. ஒரு விவசாயப் பெண்ணின் வாழ்க்கையிலிருந்து பள்ளி ஆசிரியராக உயர்ந்தவருக்குத் தான் விரும்பிய பதவியையோ, நட்பாக இருக்க விரும்பிய நகரத்து நண்பர்களையோ பெற அந்த வளர்ச்சி போதுமானதாக இல்லை. அவளைப் பொருத்தவரை அவள் தனக்கேற்ற இடத்தில் வசிக்கவில்லை. அவளிடம் போதுமான அளவுக்குப் பணம் இல்லை. அதை ஈட்டுவதற்கு அவளுக்கு வேறெந்த



வழியும் இல்லை. ஒரு பெண் புகைபிடிப்பதைப் பார்த்த என் அம்மா அதுவொரு தரக் குறைவான செயல் என்று வருத்தமுற்றாள்.

அவள் மிகுந்த தன் முனைப்புடையவளாகவும், அதீத இலக்கண சுத்தமாகப் பேசுபவளாகவும் மற்றவர்களின் கண்களுக்குத் தெரிந்தாள் என்று நினைக்கிறேன். அவள் “எப்போதும் தயாராக”, “மறுதலிக்க முடியாதபடி” போன்ற சொற்களைப் பயன்படுத்தினாள். வழக்கமாக அப்படிப் பேசும் விசித்திரமான ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள்போல அவள் அதைப் பேசினாலும், உண்மையில் அவள் அவ்வாறு வளரவில்லை. பொதுவாக எல்லோரும் பேசுவதைப் போலத்தான் என் அத்தைகளும் மாமாக்களும் தங்கள் பண்ணைகளில் இருக்கும்போது பேசினார்கள். அவர்களுக்கும்கூட என் அம்மாவை அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

முன்பிருந்ததுபோல் இல்லாமல் அனைத்தும் மாறிவிட்டது என்று சிந்திப்பதிலேயே அவள் தன் முழு நேரத்தையும் செலவழித்தாள் என்று நான் கூறவில்லை. தண்ணீர் பிடித்துவைக்கும் பெரிய தொட்டிகளைக் கஷ்டப்பட்டு இழுத்துவந்து சமையலறைக்குள் வைக்கவேண்டி இருந்தது, தண்ணீர்ப் பற்றாக்குறை, கோடைக் காலத்தின் பெரும்பகுதியைக் குளிர்காலத்துக்குத் தேவைப்படும் உணவைத் தயாரிப்பதில் செலவழிக்கவேண்டிய நிர்ப்பந்தம்போன்ற காரணங்களால் மற்ற பெண்களைப் போலவே அவளும் ஓய்வின்றி வேலை செய்தாகவேண்டியிருந்தது.

என்னைப் பற்றி அவளுக்கிருந்த ஏமாற்றத்தை நினைத்துப் பார்க்க நிறைய நேரத்தைச் செலவிடுபவளால், நகரத்தில் இருந்த என் பள்ளியில் இருந்து நல்ல நண்பர்களை, ஏன், எந்த நண்பர்களையுமே ஏன் நான் வீட்டுக்கு அழைத்து வருவதில்லை என்று யோசிப்பதற்கு நேரம் ஒதுக்க முடியவில்லை.





அதுபோலவே ஞாயிறுகளில் என் பள்ளியில் நடைபெற்ற பாடல் ஒப்புவித்தல்களில் வழக்கமாகப் பாய்ந்து பங்கேற்கும் நான், அவற்றில் இருந்து ஏன் ஒதுங்கி நின்றேன் என்பதைச் சிந்திக்கவும் அவளுக்கு நேரமில்லை.

என்னுடைய தலைமுடியை அவள் ஒருவித வித்தியாசமான பாணியில் பின்னியிருந்தாள். என் பள்ளியில் படித்த வேறு யாருடைய தலைமுடியும் அவ்வாறு பின்னப்படவில்லை. நான் பள்ளிக்குச் செல்வதற்கு முன்பிருந்தே இந்தப் பிரச்சினை இருந்தாலும் அதை நான் ஒருவாறு சமாளித்து வந்தேன். அவள் என் தலைமுடியில் பின்னியிருந்த அந்த மோதிர வடிவங்கள், பள்ளியில் இருந்து நான் திரும்பி வரும்போது ஏன் கலைந்து அலங்கோலமாகி இருந்தது என்று நினைப்பதற்கும் அவள் வசம் நேரமில்லை. கவிதை வாசிப்பதில் எனக்கிருந்த அபரிமிதமான நினைவாற்றலை, அதைப் பற்றிப் பெருமையடித்துக்கொள்ளப் பயன்படுத்தாமல், நான் ஏன் வெறுமையாக இருந்தேன் என்பதை நினைத்துப் பார்க்கவும்கூட அவளுக்கு நேரமின்றிப்போனது.

ஆனால் என்னுடைய மனம் எப்பொழுதும்

குழப்பங்களாலும் சர்ச்சைகளாலும் நிறைந்த ஒன்று அல்ல. பத்து வயதான நான் என் அம்மாவுடன் ஒரு நடன நிகழ்ச்சிக்குச் செல்ல ஆர்வத்துடன் தயாராகி நிற்கிறேன்.

அந்த நடன நிகழ்ச்சி எங்கள் சாலையில் இருந்த முற்றிலும் கண்ணியமான ஆனால் அவ்வளவாகச் செழிப்பான தோற்றமில்லாத வீடுகள் ஒன்றில் நடைபெற்றது. உலோக வார்ப்பாலை ஒன்றில் பணியாற்றிய அந்தப் பெண்ணின் கணவனுக்கு என் தாத்தா வயதிருக்கும் என்ற விஷயத்தைத்தவிர அந்தப் பெரிய மர வீட்டில் வசித்த யாரையும் எனக்குத் தெரியாது.



ஒருவர் தனக்கு எவ்வளவு வயதானாலும் வார்ப்பாலை வேலையைவிடாமல், முடிந்தவரை உழைத்துத் தங்கள் உடல்நிலை பின்னாட்களில் ஒத்துழைக்க முடியாமல்போகும் காலத்திற்கான பணத்தை இப்போதே ஈட்டிச் சேமித்துவைக்க முயற்சிக்கவேண்டி இருக்கிறது. அது ஒரு மிகப் பெரும் பொருளாதார மந்தநிலையின் காலம் என்று நான் பின்னர் அறிந்துகொண்டபோதும்கூட, வேலை ஏதும் இன்றி முதியோர் ஒய்வூதியத்தை வைத்துமட்டுமே ஒருவர் சமாளிக்கவேண்டும் என்ற நிலையை நான் ஒரு அவமானமாகக் கருதினேன். ஒருவருக்கு வளர்ந்த பிள்ளைகள் இருந்து, அவர்களே நிறைய கஷ்டங்களை அனுபவித்துவந்தாலும், தம் பெற்றோரை இத்தகைய நிலையில் அவர்கள் விடுவதை நான் அவமானகரமான ஒன்றாகவே நினைத்தேன். அப்போது தோன்றாத சில கேள்விகள் இப்போது என் மனதில் எழுகின்றன.






அந்த வீட்டில் வசித்தவர்கள் ஒரு கொண்டாட்டமாக மட்டுமே இந்த நடன நிகழ்ச்சியை நடத்தினார்களா, அல்லது அதற்காகப் பணம் வசூலித்தார்களா? ஒருவேளை அந்த ஆண் வேலை செய்து சம்பாதித்திருந்தாலும்கூட அவர்கள் நெருக்கடியான சூழலில்தான் இருந்திருப்பார்கள். மருத்துவருக்குத் தரப்படவேண்டிய கட்டணம் இருக்கிறதே அது ஒரு குடும்பத்தின்மீது எவ்வளவு பயங்கரமான சுமையாக இருக்கும் என்று எனக்குத் தெரியும்.

அனைவரும் வழக்கமாகச் சொல்கிற ‘பட்டுப் போல் மிருதுவாக’ இருந்த என் தங்கையின் தொண்டையில் கூடுதலாக வளர்ந்திருந்த சதை அகற்றப்பட்டது. நானும் என் தம்பியும் ஒவ்வொரு குளிர்காலத்தின்போதும் மூச்சுக்குழாய் அழற்சியால் கடுமையாக அவதிப்பட்டதால் மருத்துவரை அழைக்க வேண்டியிருந்தது. மருத்துவர்கள் வருகை என்றாலே அதன் பொருள் நிறைய செலவு என்பதுதான்.

என்னுடைய அப்பா, என் அம்மாவுக்குத் துணையாகப் போகாமல் நான் ஏன் அவளுடன் போகவேண்டியிருந்தது என்பது பற்றி நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். ஆனால் அது உண்மையில் அப்படி ஒரு பெரிய புதிர் இல்லை. என் அம்மாவுக்குப் பிடித்திருந்த நடனம் என் அப்பாவுக்குப் பிடிக்காமல் இருந்திருக்கலாம். அத்துடன் வீட்டில் இருந்த இரண்டு சிறிய குழந்தைகளை யாராவது பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. அந்தளவுக்கு எனக்கும் வயதாகவில்லை. குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கென உள்ள குழந்தைப் பராமரிப்பாளர்கள் யாரையும் என்னுடைய

பெற்றோர் நியமித்ததாக எனக்கு நினைவில்லை. அக்காலத்தில் இந்தச் சொல் பொது வெளியில் அறியப்பட்ட ஒன்றா என்றுகூட எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் அதற்குப் பிறகு காலம் மாறி, என் பதின்வயதில் நானே பிறகு அத்தகைய வேலைகளைச் செய்தேன்.

நாங்கள் ஆடைகள் உடுத்தித் தயாரானோம். என் அம்மா நினைவுகூர்ந்த நடனம், நான்கு ஜோடிகள் ஒரு சதுரத்தில் ஒருவரையொருவர் எதிர்கொள்ளும் நிலையில் நடன அசைவுகள் தொடங்கும் அமெரிக்க வம்சாவளியைச் சேர்ந்த நாட்டுப்புற நடனம். அதில் அணியப்பட்ட நாகரீகமான நடன ஆடைகளை உங்களால் ஒருபோதும் தொலைக் காட்சியில் காணமுடியாது. எல்லோரும் தங்களால் இயன்றவரை சிறப்பான ஆடைகளை அணிந்திருந்தார்கள்.

நாட்டுப்புற மக்களின் உடையாகக் கருதப்படும் தொங்கலிழைகள், சுருளான கழுத்துப் பட்டைகள் போன்றவற்றை அணிந்து நடன நிகழ்ச்சியில் தோன்றுவது, நிகழ்ச்சி நடத்தியவர்கள் உட்பட அனைவருக்குமே அவமானமாக இருக்கும். மிருதுவான கம்பளி நூலைக்கொண்டு என் அம்மா எனக்காகத் தயாரித்திருந்த ஆடையை நான் அணிந்திருந்தேன். என் ஸ்கர்ட் இளஞ்சிவப்பிலும், ஆடையின் மேற்பகுதி மஞ்சள் நிறத்திலும் இருந்தது. பின்னொரு சமயம் என் இடப் பக்க மார்பகம் இருக்கப்போகும் இடத்தில் இப்போது ஒரு இளஞ்சிவப்பு இதயம் தைக்கப்பட்டிருந்தது. லேசாக ஈரமாக்கிப் பிறகு சீவிப் பின்னப்பட்ட என் தலைமுடியில், சூப்பில் மிதக்கும் கொழுத்த இறைச்சித் துண்டுகளின் தோற்றத்தோடு இருந்த மோதிர வடிவங்களை நான் தினமும் பள்ளிக்குச் செல்லும் வழியில் அகற்றினேன்.

நடன நிகழ்ச்சிக்குச் செல்லும்போது என் தலைமுடியில் அவை இருப்பதை விரும்பாத நான், வேறு யாருடைய தலை அலங்காரமும் அவ்வாறு இல்லை என்று கூறி மறுத்தேன். அவர்கள் யாருக்கும் அந்தளவுக்கு அதிர்ஷ்டம் இல்லை என்று என் அம்மா வேகமாக அதற்கு பதில் சொன்னாள். நான் அதற்குமேல் முறையிட்டுக் கொண்டிருக்காமல் நிகழ்ச்சிக்குக் கிளம்பினேன். நடன நிகழ்ச்சியைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலும், என் தலை அலங்காரத்திற்காக என்னை அவமானப்படுத்தக்கூடிய என்னுடைய பள்ளி மாணவர்கள் யாரும் அங்கு வரப்போவதில்லை என்பதால் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று நான் நினைத்ததும், அதற்கான காரணங்கள்.

என் அம்மா அணிந்திருந்த கருப்பு வெல்வெட்டால் ஆன, முழங்கைகள் வரை நீண்ட கைப் பகுதிகளும், கழுத்தைச் சுற்றி உயரமான விளிம்புகளும் கொண்ட, அதிகம் பயன்படுத்தியிராததும், அவளிடம் இருந்ததிலேயே மிக அழகானதுமான ஓர் உடை அதுதான். தேவாலயத்திற்கு அணிந்து செல்லமுடியாதபடி மிக நளினமாகவும், ஈமச் சடங்குகளுக்கு அணியப் பொருத்தமற்ற வகையில் மிகக் கொண்டாட்டமானதாகவும் அது இருந்தது. அதில் இருந்த அற்புதமான விஷயம் என்னவென்றால் ரவிக்கை முழுவதும் தைக்கப்பட்டிருந்த பற்பல வண்ணங்கள் கொண்ட தங்க, வெள்ளி மணிகள், அவள் நகர்ந்தாலோ இல்லை, அவளுடைய சுவாசத்திற்கேகூட ஒளிவீசியபடி நிறம் மாறிக்கொண்டிருந்ததுதான்.

அவள் பெரும்பாலும் கருப்பாக இருந்த தன் தலை முடியைப் பின்னி, தலைமீது இறுக்கமான சிறிய கிரீடம் ஒன்றைப் பொருத்தியிருந்தாள். என் அம்மாவைத்தவிர அவள் வேறு யாராக இருந்திருந்தாலும், அவளை ஒரு பேரழகி என்று நான் நினைத்திருப்பேன். நான் அவளை அப்படி இருப்பதாகத்தான் நினைத்தேன். அந்த விசித்திரமான வீட்டிற்குள் நாங்கள் நுழைந்தவுடன், அங்கிருந்த பெண்கள் தங்களிடம் இருப்பதிலேயே மிகச் சிறந்த ஆடையை அணிந்து வந்திருந்ததை நான் பார்த்தபோதும் என் அம்மாவுடைய மிக அழகிய உடையைப்போல வேறு எந்தப் பெண்ணின் ஆடையும் இல்லாததை நான் கவனித்தேன்.




நான் குறிப்பிட்ட அந்த மற்ற பெண்கள் சமையலறையில் இருந்தனர். நாங்கள் அங்கு நின்றபடி பெரிய மேசையில் வைக்கப்பட்டிருந்த பல்வேறுவகையான பொதியப்பங்கள், மாச் சில்லுகள், இனிப்புகள், கேக்குகள் ஆகியவற்றைப் பார்த்தோம். என் அம்மாவும் தான் தயாரித்த சில ஆடம்பரமான உணவுவகைகளை மேசையின்மீது வைத்து, அவை கவனம் பெறவேண்டும் என்பதற்காக அந்தப் பண்டங்கள் அனைத்துமே எப்படி வாயில் நீர் ஊறும்படி இருக்கின்றன என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளத் தொடங்கினாள்.

அவள் வாயில் நீர் ஊறவைக்கிறது என்றா சொன்னாள்? அவள் என்ன சொல்லியிருந்தாலும் அது சரி என்று எனக்குப் படவில்லை. இலக்கண சுத்தமாகப் பேசினாலும், எப்பொழுதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்பச் சரியாகத் தன் கருத்துகளைக் கூறும் என் அப்பா இப்போது இங்கிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால் ஒன்று, அவர்

எங்கள் வீட்டில்தான் அவ்வாறு இருந்தாரே தவிர, வெளியில் இருக்கும்போது அவ்வளவு எளிதாக அதைச் செய்துவிடமாட்டார். எவ்விதமான கருத்துப் பரிமாற்றம் நடந்தாலும் அதிலிருந்து நழுவி விடுபவர், கவனத்தைக் கவருமளவிற்குத் தனித்துவமாக எதுவுமே சொல்லக்கூடாது என்பதைப் புரிந்துவைத்திருந்தார். என் அம்மா அதற்கு நேர்மாறாக இருந்தார். அவளைப் பொருத்தவரை எல்லாமே தெளிவாகவும், எதையோ நினைவுபடுத்துவதாகவும் இருந்ததால் அது மற்றவர் கவனத்தை ஈர்க்க அவளுக்கு உதவுவதாக இருந்தது.

இப்போது இந்த நொடி, இங்கு அதுதான் நடக்கிறது. அவளுடன் யாரும் பேசாததற்கு ஈடுகட்டுவது போல் அவள் மகிழ்ச்சியாகச் சிரிப்பது எனக்குக் கேட்டது. எங்கள் மேற்சட்டைகளை எங்கு வைக்கலாம் என்று அவள் கேட்டுக் கொண்டிருந்தாள். அவற்றை எங்கு வேண்டுமானாலும் வைக்கலாம் என்றாலும், நாம் விரும்பினால், அவற்றை மாடியில் உள்ள படுக்கையில் கிடத்தலாம் என்று யாரோ பதில் சொன்னார்கள்.

இரண்டு பக்கமும், சுவர்களுக்கு இடையே இருந்த மாடிப் படிக்கட்டுகளின்மீது,மேல் அறையில் இருந்து கசிந்த சிறுவெளிச்சத்தைத் தவிர அது இருட்டாக இருந்தது. என்னை மொட்டைமாடிக்குப் போகச் சொன்ன என்னுடைய அம்மா, ஒரு நிமிடத்தில் தானும் அங்கு வந்து விடுவதாகக் கூறியதால் நான் படியேறிப் போனேன்.

அந்த நடன நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு உண்மையில் பணம் தர வேண்டியிருக்குமா என்று இங்கு ஒரு கேள்வி எழலாம். ஒருவேளை அதை ஏற்பாடு செய்வற்குத்தான் என் அம்மா மாடிக்கு வராமல் கீழ்த் தளத்தில் இருந்திருக்கலாம். இதிலுள்ள இன்னொரு விஷயம், அங்கிருந்த ஆட்கள் நிகழ்வில் கலந்துகொள்ளப் பணமும் தந்து, அந்த குளிர்பானங்களையும் உணவுப் பொருட்களையும் எடுத்துகொண்டும் வந்திருப்பார்களா என்ன? அத்துடன் அங்கிருந்த அத்தனைபேரும் ஏழைகள் எனும்போது, என் நினைவில் இருப்பதுபோல் அந்த உணவுவகைகள் உண்மையில் ஆடம்பரமாகவா இருந்தன? ஆனால் போர் தொடர்பான சில பணிகளைச் செய்து கிடைத்த பணத்தாலும், படைவீரர்கள் தங்கள் வீடுகளுக்கு அனுப்பிய பணத்தாலும், தாம் மிகவும் ஏழ்மை நிலையில் இல்லை என்பதாக அவர்கள் உணர்ந்திருக்கலாம். எனக்கு உண்மையில் பத்து வயதாக இருந்திருந்தால், பத்து வயது என்றுதான் நான் நினைக்கிறேன், இத்தகைய மாற்றங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்து கொண்டிருந்திருக்கவேண்டும்.






சமையலறையில் இருந்தும் முன்புற அறையில் இருந்தும் மாடிக்குச் செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகள், படுக்கையறையின் அருகே இருந்த படிக்கட்டுகளோடு இணைந்து ஒற்றைத் தொகுப்பாக மாறின. துப்புரவாக இருந்த முன்புறப் படுக்கையறையில் என் மேற்சட்டை, காலணிகள் ஆகியவற்றைக் கழற்றி வைத்தபோது, சமையலறையில் என் அம்மாவின் குரல் ஒலிப்பது அந்த அறையில் இருந்தே எனக்குக் கேட்டது. ஆனால் முன்னறையில் இருந்து இசை ஒலித்ததைக் கேட்டதுமே நான் அதை நோக்கி நடந்தேன்.

அந்த அறையில் இருந்து அத்தனை அறைக் கலன்களும் அகற்றப்பட்டு, ஒரு பியானோ மட்டுமே இருந்தது. சலிப்பூட்டுவதாக நான் நினைத்த அடர் பச்சை நிறத் திரைகள் கீழே இழுக்கப்பட்டு ஜன்னல்களை மூடியிருந்தன. ஆனால் அந்த அறையில் இருந்த சூழல் சலிப்பூட்டுவதாக இல்லை. பலர் நடனமாடியபடி, ஒருவரையொருவர் நாகரீகமாகப் பிடித்துக்கொண்டு, நெருக்கமான வட்ட வடிவங்களில் லேசான நடன அசைகளோடு ஆடிக்கொண்டிருந்தனர்.

பள்ளிக் கூடத்தில் படித்துக்கொண்டிருந்த இரண்டு மாணவிகள் அப்போது பிரபலமாக இருந்த ஒரு நடன பாணியில் நேருக்குநேர் நின்றபடி, சிறிது நேரம் ஒருவர் கையை மற்றொருவர் பிடித்தபடியும் பிறகு கைகளைவிட்டும் ஜோடியாக நடனமாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் என்னைப் பார்த்ததும் முகமன் கூறும் விதமாகச் சிரித்ததும், நான் மகிழ்ச்சியில் உருகிப்போனேன். என்னைவிட வயதில் பெரிய எந்தப் பெண்ணும் என்மீது தன் கவனத்தைச் செலுத்தும்போது நான் அப்படித்தான் எப்போதும் உணர்ந்தேன்.

அந்த அறையில் இருந்த, பார்க்கும் எவரையும் ஈர்க்கும்படியான ஒரு பெண் அணிந்திருந்த ஆடை நிச்சயமாக என் அம்மாவின் ஆடையை ஓரங்கட்டக்கூடியது. அவள் என் அம்மாவைவிட மிக வயதானவளாக இருக்கலாம். வெண்ணிறமாக இருந்த அவளுடைய தலைமுடி மார்செல்ட் அலைகள் என்று அழைக்கப்பட்ட ஒரு மென்மையான அதிநவீன அமைப்பில் உச்சந்தலைக்கு அருகில் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அவள் கம்பீரமான தோள்களுடனும் பரந்த இடுப்புப் பகுதியுடனும், பருமனாக இருந்தாள். அவள் அணிந்திருந்த பொன்னிறமும் ஆரஞ்சும் கலந்த மெல்லிய பட்டுடை, சதுரவடிவில் தாழ்வாக வெட்டப்பட்ட கழுத்துப் பகுதிகொண்ட,



முழங்கால்களை மட்டுமே மறைக்கும் ஸ்கர்ட் வகையிலானது. அந்த உடையின் குட்டையான கைப் பகுதி அவளுடைய கைகளை இறுக்கமாகப் பிடித்திருக்க, கைகளில் இருந்த உபரிச் சதை பன்றிக் கொழுப்புபோலக் கனமாகவும் மென்மையாகவும் வெண்மையாகவும் திரண்டு காட்சியளித்தது.

இது என்னைத் திடுக்கிடச் செய்தது. ஒருவர் வயது முதிர்ந்தவராகவும் அதே சமயம் பண்பட்டவராகவும், பருமனாக இருந்தாலும் அழகாகவும், பித்தளைபோல் எடுப்பாக இருந்தும் கண்ணியமாகவும் ஒரேசமயத்தில் இருக்க வாய்ப்புள்ளது என்பது நான் நினைத்தே பார்த்திராத ஒன்று. என் அம்மா அவளைப் பற்றி அதன் பிறகு குறிப்பிட்டதுபோல ஒருவேளை வேறு யாராவதுகூட அவளை வெட்கக் கேடானவள் என்று குறிப்பிட்டிருக்கலாம். என் அம்மாவின் வழக்கமான பேசுமொழி அதுதான். ஆனால் இணக்கமான சுபாவமுடைய வேறு யாராவதாக இருந்திருந்தால் அவளைக் கம்பீரமானவள் என்று சொல்லியிருக்கக்கூடும். பளீரென்ற நிறங்கொண்ட அந்த நவீன உடையை அணிந்திருந்ததைத் தவிர அவள் அப்படியொன்றும் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அவளும், அவளுடன் நடனமாடிய ஆணும் ஒருவருக்கொருவர் மிகுந்த மரியாதையுடன், தமக்குத் தோன்றிய ஏதோ ஒரு பாணியில், பெரிதாக அக்கறையின்றி நடனமாடியது அவர்களைக் கணவன் மனைவியாகக் காட்டியது.

அவளுடைய பெயர் எனக்குத் தெரியவில்லை. நான் அவளை இதற்கு முன் இங்கு பார்த்ததும் இல்லை. இழிவானவள் என்று அவள் எங்கள் ஊரில் பெயர் பெற்றிருந்தது எனக்குத் தெரியாது. வெளியூர்களில் அவளுடைய சங்கதி என்ன என்பதெல்லாம் எனக்கெப்படித் தெரியும்?

நடந்தவை அனைத்தையும் நினைவில் வைத்துக் கொள்வதற்குப் பதிலாக நான் புனைகதை எழுதுகிறவளாக இருந்தால், நான் எழுதும் கதையில் அந்த உடையை அவளுக்கு நான் ஒருக்காலும் தந்திருக்கமாட்டேன் என்று நினைக்கிறேன். அவளுக்குத் தேவையற்ற ஒரு விளம்பரத்தை அது அளித்தது. தினமும் பள்ளிக்குப் போகையிலும் வீடு திரும்புகையிலும்மட்டும் நகரத்தைக் கடக்காமல் ஒருவேளை நான் அங்கேயே வசித்திருந்தால் அவள் ஒரு புகழ்பெற்ற விபச்சாரி என்பதை நான் முன்பே அறிந்திருப்பேன். அந்த ஆரஞ்சு நிற உடையில் இல்லாவிட்டாலும் நிச்சயமாக அதற்கு முன்பே அவளை வேறெங்காவது பார்த்திருப்பேன். அத்துடன் விபச்சாரி என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமல், மோசமான பெண் என்று வேண்டுமானால் சொல்லியிருப்பேன். அருவருப்பான, ஆபத்தான, பரபரப்பான ஏதோ ஒன்று அவளோடு சம்பந்தப்பட்டிருப்பது, அது உண்மையில் என்ன என்று அறிந்துகொள்ளும் முன்னரே எனக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அப்படி யாராவது என்னிடம் சொல்ல முயற்சித்திருந்தால், நான் அவர்களை நம்பியிருக்கமாட்டேன் என்று நினைக்கிறேன்.




தம்முடைய உண்மையான இயல்புக்கு மாறானவர்களாக அந்த நகரத்தில் இருந்த பலரைப்போல, அவளும் ஒருத்தி என்று எனக்கு ஒருவேளை தோன்றியிருக்கலாம். தினம் டவுன் ஹாலின் கதவுகளைத் தேய்த்து மெருகேற்றும் கூன்முதுகுடைய ஆள் ஒருவன், எனக்குத் தெரிந்து அதைத்தவிர வேறு எதுவுமே செய்யவில்லை. உடலில் எந்தக் குறைபாடுமற்ற ஒரு பெண் தனக்குத் தானே உரத்த குரலில் தொடர்ந்து பேசியபடி கண்ணுக்குப் புலப்படாத ஆட்களைத்

திட்டுவாள்.

நாட்கள் செல்லச் செல்ல எனக்கு அவளுடைய பெயர் தெரிய வந்திருக்கும் என்பதோடு, நான் நம்ப முடியாத விஷயங்களை எல்லாம் அவள் செய்தது இறுதியில் எனக்கு எப்படியும் தெரியவந்திருக்கும். அவளுடன் நடனமாடிய பெயர் அறியாத அந்த நபர், பில்லியர்ட்ஸ் விளையாட்டு அரங்கின் உரிமையாளர் என்பது அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் பில்லியர்ட்ஸ் விளையாட்டு அரங்கைக் கடந்து சென்றபோது என்னுடன் வந்த இரண்டு பெண்கள் அதற்குள் போய்ப் பார்க்கத் தைரியமுள்ளதா என்று கேட்டு என்னைத் தூண்டினர். நான் அந்த அரங்கிற்குள் போனபோது அந்த ஆள் அங்கிருப்பதைப் பார்த்தேன்.

முன்பைவிட வழுக்கையும் பருமனும் அதிகமாகியிருந்தது போலவே அவனுடைய உடையும் மேலும் அலங்கோலமாகி இருந்தது. அவன் என்னிடம் எதுவும் பேசியதாக நினைவில்லை. அதற்கு அவசியமும் இல்லை. நான் என் நண்பர்களிடம் தெறித்து ஓடினேன். நண்பர்கள் என்று அவர்களைச் சொல்லமுடியாது. அங்கு நடந்ததைப் பற்றி அவர்களிடம் நான் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை.

பில்லியர்ட்ஸ் விளையாட்டு அரங்கின் உரிமையாளரை அங்கு பார்த்ததும், கேலிக்குரியது என்று நான் அழைத்திருக்க வாய்ப்பிருந்த அந்த ஆரஞ்சு நிற உடை, உரத்த ஒலியெழுப்பிய அந்தப் பியானோ, ஃபிடில் இசை, மேற்சட்டையுடன் திடீரென்று அங்கு தோன்றிய என் அம்மா, என அந்த நடன நிகழ்ச்சியின் முழுக் காட்சியும், மீண்டும் என் கண்முன்னே தோன்றியது.

அங்கு ஒலித்த இசையின் இடையே எனக்கு விருப்பமற்ற ஒரு தொனியில் அவள் என் பெயரைச் சொல்லி அழைத்தாள். அந்தத் தொனி, 'நீ இந்த பூமியில் ஜனிப்பதற்கு நான்தான் காரணம்' என்று அவள் எனக்கு நினைவூட்டுவதுபோல் தோன்றியது.

அவள், "உன் மேற்சட்டை எங்கே?" என்று கேட்டது, நான் அதை ஏதோ தவறான ஓரிடத்தில் வைத்துவிட்டது போலிருந்தது.




"மாடியில்"

"சரி. நீ போய் அதை எடுத்துக் கொண்டு வா"

அவள் என்னிடம் முதலில் சொன்னதுபோல் அவள் என்னைப் பின்தொடர்ந்து மாடிக்கு வந்திருந்தால் அவளே அதை அங்கு பார்த்திருப்பாள். தன் மேற் சட்டையைக் கழற்றாமல் அதன் பொத்தான்களை மட்டுமே கழற்றிவிட்டு, உணவைப் பற்றிப் பெருமை பேசியபடி நின்றவளின் பார்வை, நடன நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்த அறையின்மீது பட்டு, ஆரஞ்சு நிற உடையணிந்திருந்த அந்த நடனக் கலைஞர் யார் என்று அவளுக்குத் தெரியும்வரை, சமையலறையைக் கடந்து அவள் தன்னுடைய காலை வெளியே எடுத்து வைத்திருக்கவே மாட்டாள்.

"தாமதிக்காதே" என்றாள்.

எனக்கு அந்த எண்ணமே இல்லை. படிக்கட்டுகளுக்கான கதவைத் திறந்து படிகளில் ஏறி ஓடியபோது படிக்கட்டுகளின் வளைவில் அமர்ந்திருந்த சிலரால், என்னுடைய ஓட்டம் தடைபட்டது. நான் அப்போது அங்கு வருவேன் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் ஏதோ தீவிரமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அது வாக்குவாதம் இல்லை, ஆனால் அவசரமான ஏதோவொரு பேச்சுவார்த்தை.

அவர்களில் இருவர், விமானப்படைச் சீருடையில் இருந்த இளைஞர்கள். ஒருவன் மேல்படியில் அமர்ந்திருக்க, இன்னொருவன் தன் முழங்காலின் மீது கையைவைத்தபடி கீழ்ப் படியில் முன்னோக்கிச் சாய்ந்து அமர்ந்திருந்தான். அவர்கள் இருவருக்கும் மேல் இருந்த படியில் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அவளுக்கு அருகில் இருந்தவன் ஆறுதலாக அவளுடைய காலை மென்மையாக வருடிக் கொண்டிருந்தான். அவள் அழுது கொண்டிருந்ததைப் பார்த்து, அந்தக் குறுகிய படிக்கட்டுகளில் அவள் விழுந்திருக்கலாம். அந்தக் காயத்தின் வலி தாங்காமல் அழுகிறாள் என்று நினைத்தேன்.

அவளுடைய பெயர் பெக்கி. "பெக்கி, பெக்கி" என்று அந்த இளைஞர்கள் வேகமாகவும் மென்மையாகவும் அவளைக் கூப்பிட்டனர்.

அவள் குழந்தைத்தனமான குரலில் பதில் சொன்னது எனக்குப் புரியவில்லை. இது நியாயமே இல்லை எனும் ரீதியில் அவள் ஏதோ குறை கூறிக்கொண்டிருந்தாள். ஏதோவொன்று நியாயமில்லை என்று ஒருவர் திரும்பத் திரும்பச் சொல்கிறார். ஆனால் அந்த விஷயத்திற்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையற்ற ஒரு குரலில் அவர் அதைச் சொல்வதுபோல அது இருந்தது. அற்பத்தனமானது என்பதே இத்தகைய சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படவேண்டிய மற்றொரு சொல். அது மிக அற்பத்தனமானது. யாரோ ஒருவர் மிக அற்பத்தனமாக அந்த



இடத்தில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் வீட்டிற்கு வந்ததும் என் அம்மா, அப்பாவிடம் பேசியதை வைத்து என்ன நடந்தது என்பது எனக்குத் தெரிந்தாலும் என்னால் அதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

பில்லியர்ட்ஸ் அரங்க உரிமையாளரால் ஈர்க்கப்பட்டு திருமதி. ஹட்சிசன் அந்த நடனத்தில் கலந்துகொண்டிருக்கிறார். அந்த ஆள்தான் பில்லியர்ட்ஸ் அரங்க உரிமையாளர் என்று எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. என் அம்மா அவனை என்ன பெயரிட்டு அழைத்தாள் என்றும் தெரியவில்லை. ஆனால் அவனுடைய நடத்தையால் அவள் சோகமும் திகைப்பும் அடைந்திருந்தாள். நடனம் பற்றிய செய்திகள் பிறகு வெளியேவந்தன. ஆல்பர்ட் துறைமுகத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள், அதாவது விமானப்படைத் தளத்தில் இருந்த சிலர் நடனத்தில் பங்கேற்க முடிவு செய்திருந்தனர். நிச்சயமாக அது சரியான விஷயமாகத்தான் இருந்திருக்கும். விமானப்படை இளைஞர்களால் எந்தப் பிரச்சினையும் இல்லை. திருமதி ஹட்சிசன்தான் அவமானத்தை ஏற்படுத்தியது. அடுத்தது அந்தச் சிறுமி.

திருமதி ஹட்சிசன், பாலியல் தொழில் செய்துவந்த பெண்களில் ஒருத்தியைத் தன்னுடன் அந்த நடன நிகழ்ச்சிக்கு அழைத்து வந்திருக்கிறாள்.

என் அப்பா, “ஒருவேளை அவள் ஒரு உல்லாசப் பயணம் போவதாக நினைத்திருக்கலாம். அல்லது ஒருவேளை நடனமாட விரும்பியிருக்கலாம்” என்றார்.

இதை என் அம்மா கவனித்ததாகவே தெரியவில்லை. அது அவமானகரமானது என்றாள். உங்கள் சுற்றுப்புறத்தில் நடைபெற்ற ஒரு கண்ணியமான நடன நிகழ்ச்சியில் நீங்கள் உங்களுடைய நேரத்தைச் செலவழிக்க ஆர்வமாக இருந்தீர்கள். ஆனால் அது முழுதும் பாழாகிவிட்டது.

என்னைவிடப் பெரிய பெண்களின் தோற்றத்தை மதிப்பிடும் ஒரு பழக்கம் எனக்கு இருந்தது. பெக்கி அழகாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அவள் அழுததில் ஒருவேளை அவளுடைய ஒப்பனை கலைந்துபோயிருக்கலாம். சில பாபி பின்கள் வைத்துச் சுருட்டிக் கட்டப்பட்டிருந்த அவளுடைய தலைமுடி அவிழ்ந்திருந்தது. அவளுடைய விரல் நகங்கள் நிறப் பூச்சுடன் இருந்தாலும், அவளுக்கு நகம் கடிக்கும் பழக்கம் இருந்தது நன்கு தெரிந்தது. தேவையற்ற சிணுங்கலும், தந்திரமும், எப்போதும் எதாவது குற்றம் சொல்கிற குணமும் கொண்டிருந்த, எனக்கு அறிமுகமாகியிருந்த சில பெரிய பெண்களைவிட, அவள் அப்படியொன்றும் முதிர்ச்சி அடைந்தவளாகத் தெரியவில்லை.




ஆனாலும், அவள் கடினமான ஒரு தருணத்தை ஒருபோதும் சந்திக்கத் தகுதியற்ற ஒருத்திபோலவும், கொஞ்சப்படவும், மகிழ்ச்சியுடன் இருக்கவும் அனைத்து வகையிலும் உரிமையுடையவள் போலவும், அவள்முன் அனைவருடைய தலையும் வணங்கி நிற்கவேண்டும் என்பது போலவும் அந்த இளைஞர்கள் அவளை நடத்தினர்.

அவர்களில் ஒருவன் அவளுக்கு சிகரெட்டை எடுத்துத் தந்தான். என்னைப் பொருத்தவரை அதுவே ஒரு சிறிய பரிசுபோலத்தான். ஏனென்றால் என் அப்பா மட்டுமின்றி எனக்குத் தெரிந்த எல்லாருமே அதைப் புகைத்தனர். ஆனால் பெக்கி வேண்டாம் என்பதாக மறுத்தபடி தலையை அசைத்து, தான் புகைபிடிப்பதில்லை என்று வேதனை படர்ந்த குரலில் கூறினாள். வாயினுள் இட்டு அதக்கும் இனிப்புப் பொருளான ‘கம்’மை இன்னொருவன் அவளிடம் கொடுத்தபோது அவள் அதை வாங்கிக்கொண்டாள்.

அங்கு என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரிய வழியே இல்லை. ‘கம்’ மைக் கொடுத்த இளைஞன் தன் சட்டைப் பைக்குள் கைகளைவிட்டுத் துழாவியபோது அங்கு நின்ற என்னைக் கவனித்ததும், “பெக்கி, இங்கு ஒரு சிறுமி மாடிக்குப் போவதற்காக நிற்கிறாள் என்று நினைக்கிறேன்” என்றான்.



இதைக் கேட்டதும் எனக்குத் தன் முகத்தைக் காட்ட விரும்பாதவளாக பெக்கி தன் தலையைத் தாழ்த்திக்கொண்டாள். அந்த இடத்தைக் கடந்தபோது வாசனைத் திரவியத்தின் நறுமணம், சிகரெட் வாசம், ஆண்மை நிரம்பிய கம்பளிச் சீருடையிலிருந்த வாடை, கனத்த காலணிகள் வாசம் ஆகியவை கலந்து வீசின.

நான் என் மேற்சட்டையை அணிந்தபடி கீழே வந்தபோது அவர்கள் அப்போதும் அங்கேயே இருந்தார்கள். ஆனால் நான் இறங்கிவருவேன் என்று தெரிந்து அவர்கள் என்னை எதிர்பார்த்திருந்ததால் நான் அவர்களைக் கடந்து செல்லும்போது அவர்கள் அனைவரும் அமைதியாக இருந்தனர். அதே நேரத்தில் பெக்கி சத்தமாக மூக்கை உறுஞ்சியதும் அவளுக்கு அருகில் அமர்ந்திருந்த இளைஞன் அவளுடைய காலின் மேற்புறத்தை வருடிவிட்டான். அப்போது அவளுடைய ஸ்கர்ட்டும், கால்களின் மேற்பகுதியில் இருந்து பாதம்வரை நீண்ட காலுறைகளைப் பிணைத்திருந்த பட்டையும் என் கண்ணில்பட்டன.

நீண்ட காலத்திற்கு அந்தக் குரல்கள் என் நினைவில் இருந்தன. அவற்றைப் பற்றி நான் தீவிரமாக யோசித்தேன். பெக்கியின் குரல்களை அல்ல. அந்த இளைஞர்களின் குரல்களை. போரின் ஆரம்பக் கட்டத்தில் ஆல்பர்ட் துறைமுகத்தில் முகாமிட்டிருந்த விமானப்படை வீரர்கள் சிலர் இங்கிலாந்திலிருந்து வெளியேறி, ஜெர்மானியர்களோடு போரிடுவதற்காக அங்கு பயிற்சி மேற்கொண்டிருந்தது எனக்கு இப்போது தெரியவந்தது. பிரிட்டனின்




சில பகுதிகளில் இருந்த அந்த மென்மையான, கவர்ச்சியான உச்சரிப்புதான் ஒருவேளை என்னைக் கவர்ந்ததா என்று நான் யோசித்துப் பார்த்தேன். ஒரு பெண்ணை, அவள் மிக அருமையானவள் என்பதற்காகவும், ஆணோ பெண்ணோ யாராக இருந்தாலும்சரி ஒருவருக்கு இவ்வளவு மதிப்பளிக்கப்படுவதும், ஒரு பெண்ணிடம் ஒரு ஆண் இப்படிப் பேசுவதும், ஒரு பெண் இவ்வாறு நடத்தப்படுவதும் என் வாழ்நாளில் அதுவரை நான் கேட்டிராத, பார்த்திராத ஒன்று என்பதுமட்டும் நிச்சயம் உண்மை. அவளை வந்தடைந்திருக்கிற அந்த இரக்கமற்ற விஷயம் எதுவாக இருந்தாலும், அது ஏதோ ஒரு வகையில் சட்டத்துக்குப் புறம்பானது, ஒரு பாவச் செயல்.

பெக்கி அழுவதற்கான காரணமாக நான் அப்போது எதை நினைத்தேன்? அதைப் பற்றி எனக்கு அப்போது பெரிதாக ஆர்வமில்லை. நானொரு தைரியசாலி இல்லை. பள்ளியிலிருந்து முதல்நாள் வீட்டிற்கு வரும் வழியில் சக மாணவர்களால் கூழாங்கற்களை வீசித் துரத்தி அடிக்கப்பட்டபோது நான் அழுதேன். என் மேசை படுமோசமாக, அசுத்தமாக இருந்ததை அந்த நகரத்துப் பள்ளியின் ஆசிரியை வகுப்பில் அனைவர் முன்னும் என்னை நிற்க வைத்துச் சொல்லிக் காட்டியபோது நான் அழுதிருக்கிறேன். அந்தப் பிரச்சனை பற்றி ஆசிரியை என் அம்மாவிற்கு ஃபோன் செய்தபோது, என் அம்மா நான் அவளுக்கு நற்பெயர் பெற்றுத் தராததை நினைத்து

ஃபோனை வைத்த பிறகு, அழுது கொண்டிருந்தாள். சிலர் இயற்கையாகவே தைரியசாலிகளாகவும் மற்றவர்கள் கோழைகளாகவும் இருப்பதாக எனக்குத் தோன்றியது. பெக்கியிடம் யாரோ ஏதோ சொல்லியிருப்பார்கள். என்னைப் போல் எதற்கும் கவலைப்படாத சுபாவம் அவளுக்கு இல்லாததால் அவள் மூக்குறிஞ்சியபடி அழுது கொண்டிருந்திருக்கக்கூடும்.

பெக்கி அழுததன் பின்னணியில் அந்த ஆரஞ்சு நிற உடையணிந்த பெண்தான் இருந்திருக்கவேண்டும் என்று நான் நினைத்ததற்குக் குறிப்பிட்டுச் சொல்லும்படியான எந்தக் காரணமும் இல்லை. ஆனால் அது அவள் இல்லையென்றால் நிச்சயமாக வேறு ஏதாவது ஒரு பெண்ணாக இருந்திருக்கக்கூடும். ஏனென்றால் அது ஒரு ஆணாக இருந்திருந்தால், அங்கிருந்த விமானப்படை இளைஞர்களில் எவனாவது ஒருவன் அப்படிச் செய்தவனை வாயை மூடச் சொல்லியோ, வெளியே இழுத்துப் போட்டு அடித்தோ நிச்சயமாகத் தண்டித்திருப்பான்.

எனக்கு ஆர்வம் இருந்தது பெக்கியின் மீதல்ல, அவளது கண்ணீரின்மீதோ அவளது ஒழுங்கீனமான தோற்றத்தின்மீதுகூட இல்லை. அவள் எனக்கு என்னை அதிகமாக நினைவுபடுத்தினாள். அவளுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்தவர்களை நினைத்துத்தான் நான் ஆச்சரியப்பட்டேன். அவள் முன் மண்டியிட்டுத் தாங்கள் அவளுடைய அடிமைகள் என்பதாக அவர்கள் எப்படித் தங்களைப் பிரகடனப் படுத்திக்கொண்டனர் என்று தோன்றியது.

அவர்கள் அப்போது என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள்? குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் பெரிதாக எதுவும் இல்லை. "பரவாயில்லை" என்றுதான் சொன்னார்கள். "பரவாயில்லை, பெக்கி " என்றார்கள். "பெக்கி, பரவாயில்லை, பரவாயில்லை" என்று மட்டுமே சொன்னார்கள்.

அவர்களுடைய அந்தக் கருணை, யார் வேண்டுமானாலும் மற்றொருவரிடம் அப்படிக் கருணையுடன் இருக்கமுடியும் என்பதைக் காட்டும்வகையில் இருந்தது.

ஏராளமானோர் கொல்லப்பட வாய்ப்புடைய பணியான குண்டு வீசுவதில் பயிற்சிக்காக எங்களுடைய நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட இந்த இளைஞர்கள், கார்ன்வால் அல்லது கென்ட் அல்லது ஹல் அல்லது ஸ்காட்லாந்தின் இயல்பான உச்சரிப்புகளில் எதில் வேண்டுமானாலும் பேசியிருக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் ஒருவிதமான ஆசீர்வாதத்தை, அந்தக் கணத்துக்கான ஒரு ஆசீர்வாதத்தை உச்சரிக்காமல் அவர்களால் வாயைத் திறக்கமுடியாது என்று எனக்குத் தோன்றியது.

அவர்களுடைய மொத்த எதிர்காலமும் பேரழிவுடன் பிணைக்கப்பட்டிருந்ததாகவோ, அவர்களுடைய இயல்பான வாழ்க்கை ஜன்னலுக்கு வெளியே பறந்துபோய்த் தரையில் அடித்து நொறுக்கப் பட்டதாகவோ எனக்குத் தோன்றவில்லை. அவளுக்குக் கிடைத்த அந்த ஆசீர்வாதத்தைப் பற்றியே நான் யோசித்துக் கொண்டிருந்தேன். அத்தகைய ஒரு ஆசியைப் பெறுகின்ற இடத்தில் நாம் இருப்பது எவ்வளவு அற்புதமானது. அதைப் பெறச் சிறிதும் தகுதியற்றவளான இந்த பெக்கிக்கு அது கிடைக்க எப்படிப்பட்ட விசித்திரமான ஒரு அதிர்ஷ்டம் அவளுக்கு வாய்த்திருக்கிறது.

அதன் பிறகு எவ்வளவு நேரம் நான் அவர்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன் என்று எனக்குத் தெரியாது. குளிராகவும் இருளாகவும் இருந்த என் படுக்கையறையில், ஊஞ்சலை அசைத்துக் குழந்தையை உறங்கவைப்பதுபோல என்னை அவர்கள் தூங்கவைத்தனர். நான் நினைத்தபோது என்னால் அவர்களை வரவழைக்கமுடியும். அவர்களுடைய முகங்களையும் குரல்களையும்கூட வரவழைக்கமுடியும்.




அட முன்னைவிட இன்னும் அதிகமாக, அவர்களுடைய குரல்கள், தேவையற்ற மூன்றாம் நபரின் மீது இல்லாமல், இப்போது என்னை நோக்கித் திரும்பின. அவர்களுடைய கைகள் ஒல்லியான என் தொடைகளை ஆசீர்வதித்தன. அவர்களுடைய குரல்கள் நானும் அன்பிற்கு தகுதியானவள் என்று எனக்கு உறுதியளித்தன.

அதுவரை பெரிதும் எழுச்சியுறாதிருந்த என் அதீதக் காமக் கற்பனைகளுக்குள் புகுந்த அவர்கள், பிறகு அங்கிருந்து போய் விட்டிருந்தனர். அப்படிப்போன சிலர், பலர், மீண்டும் திரும்பி வரவேயில்லை.

* குறிப்பு:

ஆலிஸ் ஆன் மன்ரோ (1931) ஒரு கனடிய சிறுகதை எழுத்தாளர் ஆவார். இலக்கியத்திற்கான நோபல் பரிசு இவருக்கு 2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. மன்ரோவின் படைப்புகள் சிறுகதைகளின் கட்டமைப்பில் புரட்சியை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, காலத்தை முன்னோக்கியும் பின்னோக்கியும் நகரும்போக்கில் எழுதுவது இவருடைய எழுத்துவகை.



# தல வலம்

## மேலக்கடம்பூர் (அமிர்தகடேஸ்வரர் )

புவனகிரி செயபாலன்

தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் 274—ல், சோழநாட்டுக் காவிரி வடகரையில் அமைந்துள்ள 63 தலங்களில், இது 34 ஆவது தலமாகப் போற்றப்படுகிறது.

இறைவன் — அமிர்தகடேஸ்வரர்
இறைவி — சோதி மின்னம்மை
தீர்த்தம் — சிவ தீர்த்தம் (கோயில் வடபுறத்தில்), சக்தி தீர்த்தம் (கோயிலுக்கு மேற்கில் சற்று தூரத்தில்)
விருட்சம் — கடம்ப மரம்
கோயில் — கரக்கோயில்
மூலவர் — சுயம்பு
தொன்மம் — 1500 வருடங்களுக்கு முற்பட்டது.

‘நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன்னடி எனையுந் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே’
— அப்பர் பதிகம்.







தமிழர்கள் பொதுவாக ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்று பல நூற்றாண்டுகளாகச் சொல்லி வருகிறார்கள். இந்தப் புனித வரிகள் அப்பர் (திருநாவுக்கரசர்) திருக்கடம்பூர் பெருமானின் மீது பாடியதாக திருக்குறுந்தொகை பதிகத்தில் உள்ளது.

கரக்கோயில்

சிவாலயங்கள் என்பது ஒன்பது வகைப்படும். இதில் கடம்பூர் கோயில் கரக்கோயில் வகையினைச் சார்ந்தது. கடம்பப் பேரரசை ஆண்ட கடம்பர்களின் ‘முண்டா’ மொழியில் கரம் என்ற சொல்லுக்கு கடம்பு என்று பொருள். கரம் + கோயில் = கரக்கோயில். கடம்பினைத் தல விருட்சமாகக் கொண்ட கோயில், அது அரக்கோயில் என்றானது. தமிழகத்தில் கரக்கோயில் இருப்பது இத்தலத்தில் மட்டுமே.

கல்கியின் ‘பொன்னியின் செல்வன்’ வரலாற்றுப் புதினத்தில் தொடக்கம்




இக்கடம்பூரே. ஆதித்த கரிகாலன் விருந்தினராக வந்த போது கொல்லப்பட்ட சம்பவராயர் மாளிகை மற்றும் மாடமாளிகையுடன் இருந்த அரண்மனை நகரமான கடம்பூர், தற்போது விவசாயக் கிராமமாக உள்ளது.

தேர்

ஒவ்வொரு சக்கரத்திலும் 12 ஆரங்களைக் கொண்ட நான்கு சக்கரங்களுடன் குதிரைகள் பூட்டப் பெற்ற கிழக்கு நோக்கிய அழகியத் தேர்வு வடிவக் கோயில். விநாயகர் காலால் மிதித்தன் காரணமாக கோயிலின் இடது பக்கத்தில் பின் சக்கரம் தரையில் சற்றுப் பதிந்து காணப்படுவதைக் காணலாம்.

தல வரலாறு

பாற்கடலில் அமுதம் கடைந்த இந்திரன் உட்பட, தேவர்கள் விநாயகரை வணங்காமல் அமுதம் பருகச் சென்றனர். இதைக் கண்ட விநாயகர் பாடம் புகட்ட எண்ணி, அமுதக் கலசத்தை எடுத்துக் கொண்டு கடம்பவனமாக இருந்த இத்தலத்தின் வழியாகச் சென்றபோது, கலசத்தில் இருந்த அமிர்தத்தில் ஒரு துளி தரையில் விழுந்தது. அவ்விடத்தில் சிவன் சுயம்புலிங்கமாக எழுந்தருளினார்.

தன் தவறை உணர்ந்த இந்திரனும் தேவர்களும் இங்கு வந்து விநாயகரிடம் தங்களது செயலை மன்னித்து அமுதத்தைத் திரும்ப வேண்ட, அவர் ‘சிவனிடம் வேண்டுங்கள்’ என்றார். அதன்படி சிவனை வேண்ட, அவர் இந்திரனுக்கு அமுதக் கலசத்தைக் கொடுத்து அருள் பாலித்ததுடன், சிவன் இங்கேயே தங்கி, அமிர்தகடேஸ்வரர் என்று பெயரும் பெற்றார்.




தேவர்களின் தாயான அதிதி தன் மக்களுக்கு அமிர்தம் கொடுத்து அருள் செய்த அமிர்தகடேஸ்வரரைத் தினமும் தொடர்ந்து வந்து வணங்கினார். தேவலோகத்திலிருந்து அவர் தினமும் இங்கு வருவதை இந்திரன் விரும்பாமல், இங்கு உள்ள சிவனைக் கோயிலோடு இந்திரலோகத்திற்கு எடுத்துச் செல்ல எண்ணி கோவிலை தேர் வடிவில் மாற்றி இழுத்துச் செல்ல முயன்றான்.

அப்போது விநாயகர் தேர்ச் சக்கரத்தைத் தன் காலால் மிதித்துக் கொள்ள, இந்திரன் எவ்வளவோ முயன்றும் ஒரு அடி கூட நகத்த முடியவில்லை. விநாயகரின் செயலை அறிந்தவன், விநாயகரிடம் சென்று தான் தேரை எடுத்துச் செல்ல வழி விடும்படி வேண்டினான். ‘கோடி லிங்கங்களை பிரதிஷ்டை செய்தால் தேரைக் கொண்டு செல்லலாம்’ என்றார். இந்திரன் ஆணவத்துடன் லிங்கம் செய்ய, எல்லா லிங்கங்களும் பின்னப்பட்டன.

தன் தவறை உணர்ந்த இந்திரன், அமுதக்கடேஸ்வரரை வணங்கினான். அவர், ஆயிரம் முறை தன் நாமத்தைச் சொல்லி ஒரு லிங்கத்தைச் செய்யும்படி கூறினார். அதன்படி இந்திரன் ருத்ர கோடீஸ்வரர் லிங்கத்தை செய்ததும், அவனுக்குக் காட்சி தந்து தான் இங்கேயே இருக்க விரும்புவதாகச் சொல்லி, அதிதிக்குப் பதிலாக நீயே இங்கு வந்து என்னைத் தரிசிக்கலாம் என்றார்.

இந்திரனும் தன் தவறுக்கு மன்னிப்பு பெற்றான்.

தற்போதும் தினசரி இந்திரன் இங்கு வந்து பூஜை செய்வதாக ஐதீகம். ருத்ரகோடி ஜபம் செய்து பிரதிஷ்டை செய்த கோயில், இத்தலத்திற்குக் கிழக்கே ஒரு கி.மீ. தொலைவில் ருத்ர கோடீஸ்வரர் கோயில் உள்ளது.

கோயில்

உட்பிரகார மூன்று நிலை ராஜகோபுரம். கோயில் மூலஸ்தானத்தில் பின்பகுதி மேற்கு மூலையில், ஆரவார விநாயகர் சன்னதி உள்ளது, அடுத்து வள்ளி தெய்வானை சகிதமாய் மயில் மீது அமர்ந்த ஆறுமுகன் சன்னதி. அடுத்து, சமயக் குரவர் நால்வர், அதனை ஒட்டி இந்திரனின் சாபம் போக்கிய பாபஹரேஸ்வரர், மீனாட்சி சகிதராய் காட்சியளிக்கிறார். அதன் இருபுறமும் முறையே சரஸ்வதி, வனதுர்கை. தனிச் சன்னதியில் மகாலட்சுமி, மூத்த தேவி எனப்படும் ஜேஷ்டா தேவி. பல்லவர் கால சிற்பம்.

திரும !சன கிணற்றின் அருகே மேற்கு நோக்கிய மண்டபத்தில் யோக அமர்வில் பெரு !சாத்தன். நின்ற கோலத்தில் காலபைரவர். அடுத்து சூரியன், சந்திரன். பக்கத்தில் ரிஷபாரூடர். இந்திரன் இத்தல ஈசனைப் பெயர்த்து எடுக்கச் செய்யும் காட்சி சிலை வடிவில் உள்ளது. அதனை ஒட்டி மேற்கு நோக்கி சனி பகவான். இவருக்கு காக்கைக்குப் பதில் கழுகு வாகனம். அருகில் கரண்ட மகுடம் தரித்து ஈசனை வணங்கியபடி பைரவர் சிலை. மகா மண்டபத்தில் அதிகார நந்தியும் பலிபீடவும் உள்ளது.









வலது புறம் சோதி மின்னம்மை, இடது புறம் நடராஜர் சிவகாமி சுந்தரி கற்சிலை வடிவத்தில். அம்பாளின் எதிரில் நந்தி. இடதுபுறம் நவக்கிரகங்கள்.

அமிர்தகடேஸ்வரர்

உள்வாயிலில் தண்டி முண்டி காவலர்களைக் கடந்து சென்றால், உற்சவமூர்த்திகள் அதையடுத்து குபேர வாயிலைக் கடந்தால், அமிதர்கடேஸ்வரர் சிவலிங்கம், நவபாஷாணத்தால் செய்யப்பட்டதாம். சுயம்பு மூர்த்தியாக அருபாளிக்கிறார். பங்குனி மாதம் 3, 4, 5 தேதிகளில் லிங்கத்தின் மீது சூரிய ஒளி விழுவதும், ஐப்பசி மாத பௌர்ணமி அன்னாபிஷேகத்தின் போது இரவில் சந்திர ஒளி ஈசன் மீது படுவதும் சிறப்பு.

கோயில் கட்டிடம்

நாயன்மார்களால் பாடல் பெற்ற தலம் என்பதால் 1700 ஆண்டுகளுக்கு மேலானது. தற்போது காணும் தேர் வடிவ கோயில், முதலாம் குலோத்துங்க சோழனால் கி.பி 113 —ல் அவனது 43 ஆம் ஆட்சி ஆண்டில் கட்டப்பட்டது. அதற்கு முன் இக்கோயில் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தது. குலோத்துங்கனால் கட்டப்பட்ட கருவறை வெளிச் சுவரில் ஐந்து தேவகோட்டங்கள் உள்ளன.

தெற்கில் அர்த்தநாரீஸ்வரரும், தட்சிணாமூர்த்தியும். மேற்குக் கோட்டத்தில் பெருமாளும், வடக்கில் நான்முகன், ஆலிங்கன மூர்த்தி, துர்க்கை உள்ளனர்.

ஒவ்வொரு தேவகோட்டமும் இரண்டு சிம்மத் தூண்கள் தாங்கி முகப்பு மண்டபமாக உள்ளது. மண்டபத்தின் மேல் வரந்தையோடு கூடிய கொடுங்கையும், விமானத்தின் முதல் தளம் யாளிகள் தாங்கும் எண் கோண வடிவில் உள்ளது. இதைச் சுற்றி நான்கு சிகரங்கள். நடு சிகரத்தின் விமான பாகத்தில் எட்டுத்திக்குப் பாலகர்கள் வீற்றிருக்க, தேவகோட்டத்தில் மூர்த்திகள் உள்ளனர்.

தேவகோட்டத்தில் ஆலமர்செல்வன் காளை மீதமர்ந்து ஞானமூர்த்தியாகவும், முதல் தளத்தில் வீணாதரராகவும், திருமால் சிவலிங்க வழிபாடு





செய்பவராகவும், பாம்பணையில் சாய்ந்த கோலத்திலும், பிரம்மா சிவலிங்க வழிபாடு செய்வதாகவும், யோக நிலையில் காட்சி தருகிறார்.

கருவறை — கோஷ்டம்

கருவறை வெளிப்பக்கச் சுவற்றில் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு சிற்பமாக உள்ளது. நாட்டியக்கரங்களும், மகேஸ்வர வடிவங்கள், முக்கோடி தேவர்கள் வழிபடும் காட்சி, இராமாயண காட்சிகள், வலது பக்கச் சுவரில் அர்த்தநாரீஸ்வரர் நந்தியுடன் இருக்க, அவருக்குக் கீழே ரங்கநாதர் பள்ளி கொண்ட கோலம், வைகுண்ட ஏகாதசி அன்று இவருக்கு பூஜைகள் நடக்கின்றது.

பின் பக்கத்தில் மகாவிஷ்ணு கையில் லிங்கத்தைப் வைத்தபடி அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். அருகில் ஆண்டாள், கருடன், ஆ!சநேயர் என மூவரும் உள்ளனர். வள்ளி தெய்வானையுடன் முருகன். இவரை அருணகிரிநாதர் திருப்புகழில் பாடி இருக்கிறார்.

கோஷ்ட சுவரிலேயே கங்காதரர், ஆலிங்கன மூர்த்தி, நடராஜர், சிவகாமியுடன் சற்றே பின்புறமாகச் சாய்ந்த நிலையில் உள்ளார். விமானத்தில் தட்சிணாமூர்த்தி புல்லாங்குழல், வீணையுடன் இருக்கிறார். சுவரில் பிரம்மா சிவனைப் பூஜித்தபடி இருக்க, இருபுறமும் எமதர்மன், சித்திரகுப்தர், பத!சலி முனிவர். இவரது தலைமீது நடராஜர் நடனக் கோலம். பக்கத்தில் கட்டைவிரல் இல்லாமல் சிம்ம வாகனத்துடன் துர்க்கை. இவளுக்கு கீழே மேருமலை. ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த சக்கரம் உள்ளது.




தஜபுஜ ரிஷப தாண்டவ மூர்த்தி

இத்தலத்தில் ரிஷப தாண்டவ மூர்த்தி 10 கைகளுடன் நந்தி மீது நடனமாடிய கோலத்தில் உற்சவராக இருக்கிறார். முதலாம் குலோத்துங்கன் அவையில் ராஜகுரு உத்திராலாட (வங்காள) தேசத் ஸ்ரீகண்ட சிவன். இவர் சிதம்பரத்தில் நடராஜரைத் தரிசிக்க வந்தபோது, தான் வழிபடும் தெய்வமாக வைத்திருந்த ரிஷபத் தாண்டவரைக் கொண்டு வந்தார் என்றும், இக்கோயில் ஸ்ரீகண்டசிவன் மேற்பார்வையில் கட்டப்பட்டதால், பணி முடிந்து செல்லுங்கால், தனது மூர்த்தியினை இங்கு வைத்துச் சென்றார் என்றும், முதலாம் ராஜேந்திரன் தனது வடநாட்டு படையெடுப்பின் போது பாலர் தேசத்து மகிபாலனை வென்று அங்கிருந்த இம்மூர்த்தியினை வெற்றிச் சின்னமாகக் கொண்டு வந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பது கரங்களில் முறையே வீர வண்டயம், பிரம்ம கபாலம், கேடயம், சூலம், அரவம், கட்டங்கம், தண்டம், குத்தீட்டி ஏந்திட, வலக்கை கஜகஸ்த அமைப்பிலும், இடக்கை பிரப!சம் தாங்கியும், சிவன் நின்றாடுகிறார். அவர் காலடியில் திருமால் மத்தளம் கொட்ட, வீரபத்திரர் சூலமாட, வைரவர், கணங்கள், விநாயகர், பார்வதி, பிருங்கி, காரைக்கால் அம்மையார், மகாகாளர், நந்தி, நாட்டியப் பெண்கள், மயில்மேல் முருகன், கந்தவர்கள் என அற்புதக்கலை படைப்பு.

திருவாசியில் அக்கினிக்கு பதிலாக போதி



Logesh

இலைகள். தலை மணிமுடி வங்கதேச பாணியில் உள்ளது. கல்லில் வடிக்கப்பட்ட மூன்று சிற்பங்கள் வங்கதேசம் டாக்கா தேசிய அருங்காட்சியத்தில் உள்ளது. இவருக்கு பிரதோஷ காலங்களில் மட்டும் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன. அன்று ஒரு நாள் மட்டுமே இவரைத் தரிசிக்க முடியும்.

ஆரவார விநாயகர்

கோயிலின் கன்னி மூலையில் தனிச் சன்னதியில் வலம்புரி விநாயகர் இருக்கிறார். இந்திரன் அமிர்த கலசத்தைத் தூக்கிச் சென்றதும், தேர் சக்கரத்தை மிதித்து, ஆரவாரம் செய்ததால் இவருக்கு இந்தப் பெயர். இவர் தலையை இடதுபுறம் சாய்த்தபடி காட்சி தருகிறார். சோழர்கள் வாதாபி மீது படையெடுத்த போது வென்று அங்கிருந்து கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சிவன்

நவக்கிரகங்கள் ஒவ்வொரு நாளும் தங்களுக்கான நாளில் இங்குள்ள சிவனை வழிபடுவதாக ஐதீகம். இதன் அடிப்படையில் சிவன் ஒவ்வொரு நாளும் அந்தந்த கிரகங்களுக்கு உகந்த நிறங்களில் வஸ்திரம் அணிந்து தரிசனம் தருகிறார். எனவே இத்தலம் கிரகதோஷ பரிகாரத் தலமாகவும் இருக்கிறது. அம்பாள் சன்னதிக்கு இடது புறத்தில் நவக்கிரக சன்னதி உள்ளது.

அம்பாள்

அம்பாள் காலையில் வீணை ஏந்தி சரஸ்வதியாகவும், உச்சி காலத்தில் யானையுடன் லட்சுமியாகவும், மாலையில் சூலாயுதத்துடன் துர்க்கையாகவும் காட்சி தருகிறார். இதனால் இவர் வித்யஜோதி நாயகி என்று அழைக்கப்படுகிறார். இவளுக்கு சோதி மின்னமை என்ற பெயரும் உண்டு.



கழுகு — காகம்

சனீஸ்வரர் ஆரம்பக் காலத்தில் கழுகு தான் வாகனமாக இருந்தது. ராமரின் தந்தையான தசரதர் சனீஸ்வரருக்கு கழுகுக்குப் பதிலாக காகத்தைத் கொடுத்தார். இங்குள்ள சனி பகவான் கழுகு வாகனத்துடன் காட்சி தருகிறார். எனவே இவர் ராமாயண காலத்திற்கு முற்பட்டவர் என்கின்றார்கள். புரட்டாசி சனிக்கிழமைகளில் இவருக்கு விசேஷ பூஜைகள் நடக்கிறது.

செவ்வாய் — முருகன்

சூரனை அழிக்கச் செல்லும் முன் முருகன், இங்குள்ள அம்பாளை வணங்கி வில் வாங்கிச் சென்றார். எனவே இத்தலம் முருகன் கையில் வில்லுடன் காட்சி தருகிறார். செவ்வாய் கிரகம், தனக்கு அதிபதியான முருகனை இத்தலத்தில் வழிபட்டுள்ளார். இதனால் இங்கு உற்சவராக இருக்கிறார்.






வழிபட்டோர்

திரேதாயுகத்தில் சூரியன், சந்திரன் உரோமரிஷி மற்றும் இந்திரனும், துவாரகாயுகத்தில் அஷ்ட குல பருவதங்கள், பர்வத ராஜனும், கலியுகத்தில் பத!சலி, திருமால் மற்றும் நான்முகன் இத்தல ஈசனை வழிபட்டு பேறு பெற்றுள்ளனர் என்பதைக் கோபுரத்தில் சிற்பகளாக வடித்துள்ளனர்.

பதிகம்

திருஞானசம்பந்தர் 11, அப்பர் (திருநாவுக்கரசர்) 21 பதிகங்களிலும் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் பதிகங்கள் இரண்டாம் திருமுறையிலும், அப்பரின் பதிகங்கள் ஐந்தாம் திருமுறையிலும் தொகுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு

இக்கோயிலில் பல கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதன்மையானது 'புகழ் மாது விளங்க' எனத் தொடங்கும் முதலாம் குலோத்துங்கனுடையது. இக்கோயிலைக் கட்டுவித்து இறையிலி நிலங்கள் வழங்கியது குறித்தும் கடம்பூர் கோயிலைச் சேர்ந்த மகேஸ்வரர்கள் ஆறு காசுகளைப் பெற்று நந்தா விளக்கெரிய ஒப்புக்கொண்டது, கடம்பூரினை உத்தம சதுர்வேதி மங்கலம் எனக் குறிக்கப்பட்டதும் கல்வெட்டில் உள்ளது.

முதலாம் குலோத்துங்கன் கடம்பூர் கல்வெட்டில் செயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்று நாட்டுக் கோட்டத்து இறையூர் கிழான் பரிசாக தந்த ஆறுகாசுகளைக் கொண்டு ராஜ பயங்கர வளநாடு மேற்கா நாட்டு கடம்பூர் கோவிலை சேர்ந்த மகேஸ்வரர்கள் இத்தளி ஈசனுக்கு நந்தா விளக்கு எரிய' ஒப்புக்கொண்ட செய்தி உள்ளது.




திருப்பணிகள்

மொகாலயப் படையெடுப்பிற்குப் பிறகு சிதிலமடைந்து, கவனிப்பாரற்ற இக்கோயிலைத் தேவகோட்டை அரு. அருணாச்சலம் செட்டியார் முழுவதுமாய் பிரித்து பழைய கற்களுக்கு எண்களிட்டு, புதிதாகக் கற்கள் சேர்த்து அர்த்தமண்டபம், மகா மண்டபம் அமைத்து, வெளிப்பிரகாரத்தில் இருந்த தேவியை உட்பிரகாரத்தில் தனி சன்னதியில் பிரதிஷ்டை செய்ததுடன், பிரகாரத்திற்குச் சுற்றுச் சுவர் எழுப்பி, பெரிய அளவில் திருப்பணி செய்தார். இதற்கு ஒரு வரலாறு உண்டு.

ஊர் மக்கள், அருணாச்சலம் செட்டியாரை சந்தித்து கோவிலைச் செப்பணி விண்ணப்பித்தனராம். அதற்கு அவர், 'பார்க்கலாம்' என்று சொன்னாராம். காரணம் அந்த நேரத்தில் சேத்தியாத்தோப்பு அருகில் உள்ள திருக்கூடலையாற்றூர் ஆலயத் திருப்பணிகளைச் செய்து கொண்டிருந்தார். ஒருநாள் செட்டியார் கனவில் திருக்கடம்பூர் திருப்பணியைத் தொடங்குமாறு ஈசன் பணித்தார். திருக்கூடலை ஆற்றுக்கு கற்களை வண்டியில்



எடுத்துக்கொண்டு சென்றிருந்தனர் வண்டி ஓட்டிகள்.

இரவில் ஓட்டிச் சென்றவர்கள் கண்ணுறங்கவே, மாட்டு வண்டிகள் திசை மாறி கடம்பூர் செல்ல ஆரம்பித்தன. காலையில் தகவலைக் கேள்விப்பட்டதும் ஈசனை வணங்கி கடம்பூர் கோயிலைத் திருப்பணி செய்யச் சொன்னார். அதன்படி 15 வருடங்கள் கட்டி முடித்து கும்பாபிஷேகம் நடந்தது.

கும்பாபிஷேகம்

1897—ல், குடமுழுக்கு செய்தார். அவர் மரபில் வந்த அருணாச்சலம் செட்டியார் 1920—ல் குடமுழுக்கு நடந்தது. அடுத்து, 1942—லும், பின், 03.04.1980—லும், அதன் பின், 21.06.2002—லும் நடைபெற்றது. சமீபத்தில் 07.03.2024—லும் குடமுழுக்கு நடைபெற்றது.




பிரார்த்தனை

சதய நட்சத்தினரும், செவ்வாய் தோஷம் உள்ளவர்களும் இங்குள்ள முருகனுக்கு சிவப்பு வஸ்திரம் சாத்த வேண்டிக் கொள்கிறார்கள். செவ்வாய்க் கிழமைகளில் இவருக்கு விசேஷ பூஜை ஹோமம் நடக்கிறது. இங்கு சஷ்டியப்த பூர்த்தி, ஆயுள் விருத்தி ஹோமம் அதிக அளவில் செய்து கொள்கிறார்கள்.

பூஜை

தினமும் காலை, உச்சி, மாலை, இரவு என நான்கு கால பூஜை. இத்தலத்தில் விநாயகருக்கே முதலிடம். பூஜையை கன்னி மூலை ஆரவார விநாயகர் சன்னதியில் தொடங்கி, கோயில் முன்புறமுள்ள சிறிய உருவில் உள்ள விநாயகர் இடத்தில் முடிப்பது வழக்கம்.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 9 மணி முதல் 12 மணி வரை, மாலை 5 மணி முதல் 7 மணி வரை.

நிர்வாகம்

தமிழக இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையின் கீழ் உள்ளது.

தொடர்புக்கு; குருக்கள் சரவணன் 77 08768 04 .

இருப்பிடம்

காட்டுமன்னார் கோயிலில் இருந்து முட்டம் செல்லும் சாலையில் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. டவுன் பஸ் வசதி, ஆட்டோ வசதி உண்டு.

(தொடரும் வலம்.....)


அலமாரி

# புத்தக விமர்சனம்

## பாலைவனப் பூ

**ஆசிர்யர்கள்:** வாரிஸ் டைரி, காத்லின் மில்லர்

**தமிழில்:** எஸ். அர்ஷியா




**விலை : ரூ. 450**

**வெளியீடு:**

**எதிர் வெளியீடு**

மிக மகிழ்ச்சியான தினம் என்று நீங்கள் எந்த நாளைக் கூறுவீர்கள்? பிறந்த நாள், திருமண நாள், முதல் குழந்தை பிறந்த தினம் இப்படி ஏதாவது ஒன்றை நாம் கூறலாம். ஆனால் தன்னுடைய அறுவை சிகிச்சைக்குப் பிறகு நிம்மதியாகச் சிறுநீர் கழித்த நாள் தான் வாரிஸ் மிக மகிழ்ச்சியான நாள் என்று கூறுகிறார். சராசரியாக ஒருவர் சிறுநீர் கழிக்க இரண்டு நிமிடங்கள் ஆகுமென்றால் என்ன காரணம்?

பேதம் இல்லாமல் எல்லாக் கண்டங்களிலும், எல்லாத் தேசங்களிலும், எல்லா மாநிலங்களிலும் பெண்களின் நிலை பாடுடையதாகவே இருக்கின்றது. மதங்களின் கரங்களிலும் சடங்குகளைக் கைமாற்றும் நீட்சியாலும் பெண்களைத் தங்கள் உடமையாகக் கருதும் ஆண்களின் ஆதிக்கம், கடவுளுக்காகவும் தங்களின் சந்ததிகளுக்காகவும் சிலுவை சுமப்பவர்களாக ஏற்றுக் கொள்கிறார்கள். எங்கோ யாரோ ஒரு சில பெண்கள் வெகுண்டெழுந்து, அதிலிருந்து மீற முயலும் போது அவர்களை நோக்கி எல்லாத் திசைகளிலிருந்தும் வீசப்படும் நவரசக் கயிறுகள் பெண்ணுடலையும் எண்ணங்களையும் தளைகளாய் பிணைத்துக் கொள்கின்றன. அப்படி ஒரு தளையிலிருந்து துண்டித்துக் கொண்டவர் வாரிஸ் டைரி என்று பாலைவனப் பூ எனும் இந்த நூலின் மொழிபெயர்ப்பாளர் எஸ். அர்ஷியா அவர்கள் கூறியிருப்பது நிதர்சனம் என்பது வாசித்து முடித்த பின் உணர முடியும்.

சிறப்புச் சிறுகதை



# சமிக்ஞை

**கிறிஸ்டி நல்லரெத்தினம்**

**வீ**ட்டின் நடுவே இருந்த ஊஞ்சல் தனியே ஆடிக்கொண்டிருந்தது. அதில் உட்கார்ந்து கொண்டோ அல்லது படுத்துக் கொண்டோ தேவாரங்களை முணுமுணுத்துக் கொண்டோ இருக்கும் அப்பு அங்கில்லை. அவரின் சிம்மாசனம் அது. அதில் உட்கார்ந்து கொண்டு எங்கள் குடும்ப பிணைக்குகளை பஞ்சாயத்து செய்யும் அந்த ஜீவன் இல்லாத வீடு வெறிச்சோடிக்கிடந்தது.

அப்பு, அவர்தான் என் தாத்தா, என்னிடம் கொண்டிருந்த அந்தப் பாசப்பிணைப்பு புறவயமானதன்று. எங்கள் இருவரையும் இணைத்த அந்த நூலை எவரும் தொட்டதில்லை. "' ஏ, பையா, உன்ன உங்கம்மா தூக்கிறதக்கு முன்னமே நான்தான் தொட்டுத் தூக்கினன் தெரியுமோ?" என்று கூறி பெருமைப்படுவார். என்னை ஏனே அவர் "'பையா" என்று அழைப்பதில் ஒரு அணுக்கமான உரிமையும் உறவும் இருப்பதாய் தோன்றும்.




அம்மாதான் அவர் ஒரே மகள். எனவே அவருடன் தாத்தாவின் பாசமுடன் உரிமையும் ஒட்டிக்கொண்டது. 'மகள், அத எடு! இத எடு' என்று அம்மாவை விரட்டிக்கொண்டே இருப்பார். அம்மாவும் அவர் அன்பில் அடைக்கலமாவார். அப்பாவிற்கும் தாத்தாவிற்குமிடையே ஏனே பசை போதவில்லை. அப்பா எமது குடும்பத்தில் சங்கமமானது அறுபதுகளில். அப்பா ஒரு 'வேதக்காறன்'. சமயம் மாறி வந்து அம்மாவை கைப்பிடித்ததாலோ என்னவோ அப்பாவின்மேல் ஒரு தாத்தாவிற்கு ஒரு இரண்டாந்தரம். அப்பாவிடம் தாத்தா நேராக முகம்பார்த்து பேசமாட்டார். அப்பா என்றும் மந்தையில் இல்லாத ஆடு.

ஒரு முறை அப்பாவிற்கும் அப்புவிற்கும் இடையே ஏதோ பிணக்கு "என்ர சையிக்கிள தொட வேண்டாம் எண்டு சொல்லு" என்று அம்மாவிடம், அப்பாவின் காது பட, சற்று உரக்கவே சொல்லிவிட்டார். சாமானிய குடும்பங்களில் சைக்கிள்தான் அந்நாட்களில் டெஸ்லர். வீட்டிற்கு ஒரு வாகனம் மட்டுமே. அப்பாவோ சாது. ஒருபோதும் அப்புவை போருக்கழைத்ததில்லை! எதிர்வசை பாடி பிளவை பெரிதாக்கும் எண்ணம் அப்பாவிற்கில்லை. அப்புவின் சைக்கிளை அப்பாவும் பின்னர் தொட்டதில்லை. அப்புவைத் தேடி வீட்டிற்கு பலர் வந்து போவதால் எப்போதும் எங்கள் வீடு களைகட்டியிருக்கும். அதற்கும் காரணம் உண்டு. அப்புதான் ஊர் எலும்பு முறிவு



கண்டதில்லை. “இந்த தூளை தேனில கரைச்சு விடியத்தால சாப்பிட வேணும் கண்டியோ? !. என்ன! நான் சொல்லுறது விளங்தோ?” என்று சொல்லி தன் வார்த்தைகளின் புரிதலை உறுதிப்படுத்திக் கொள்வார். தேனுக்குப் பதிலாய் முலைப்பாலும் வந்து போகும்.




மற்றும் ‘பாம்புக்கடி’ வைத்தியர் !. வைத்தியர் என்ன வைத்தியர் ! ஊர் பரியாரியார்.

எங்கள் ஐந்து அறை கல் வீட்டின் முன் பரந்து இருக்கும் குருத்து மணல் முற்றம். முற்றத்தின் மருங்கில் இரண்டு பெரிய மாமரமும் பலா மரமும் (அதென்ன பலா? பிலா மரம் என்றே வாசியுங்கள்!) கிளை விரித்து நிற்கும் வேப்ப மரமும் இருந்தன. அப்புவைப்பார்க்க வருவோர் கூடி இருக்க ஒரு திறந்த ஓலை மேய்ந்த ஒரு குடில். குடில் என்றதும் ‘அம்புலிமாமா’வில் நீங்கள் பார்த்த குட்டி குடிலை கற்பனையில் இழுத்து வந்து எங்கள் முற்றத்தில் வைக்காதீர்கள். உயர்ந்த கூரையுடன் அறைகள் போல் இரு தடுப்பு சுவர் வேலி போட்டு மேய்ந்த அமைப்பு அது. அப்பு இருக்க கதிரை மேசை வசதிகள் உண்டு. மேசை மேல் இருக்கும் ‘ஒத்த றூள் கொப்பி’ தான் அப்பு மருந்து எழுதும் றெஜிஸ்டர். நோய் என வருவோரை தன் முன் இருக்கும் கதிரையில் அமர்த்தி நாடி பிடித்து, இருமச் சொல்லி, முட்டியை தட்டி மேலும் ஏதோ ஏதோ பரீட்சாத்தங்கள் செய்து பின் மேசைக்கு பின்னே இருந்த அலுமாரியை திறந்து வடகம், தூள்கட்டு என பல உருவங்களில் மருந்துகளை பரிமாறுவார். அவற்றை எப்போது சாப்பிட வேண்டும் என்ற விபரங்களை நான் சொன்ன ‘ஒத்த றூள்’ கொப்பியின் ஒரு பக்கத்தில் எழுதி அடிமட்டம் வைத்து கிழித்து நோயாளிக்கு கையளிப்பார். அப்பு எவருக்கும் ‘தண்ணி மருந்து’ கொடுத்ததை

எலும்பு முறிவிற்கு ‘பத்துப் போட’ வருபவர்களைப்பார்க்க எனக்கு ஆர்வம் இல்லை. ஒரு முறை மரத்தால் விழுந்தவனை நாலு பேர் தூக்கிக் கொண்டு வந்து கிடத்தினர். அப்பு அருகில் குந்திக்கொண்டு குசலம் விசாரிப்பது போல் அவனிடம் பேசிக் கொண்டு அவனின் நோய்ப்பட்ட கையை மருந்தெண்ணை தடவி மெதுவாக நீவி விட்டார். அவனும் அப்புவின் கேள்விகளுக்கு அனுகிய குரலில் “ஓம் ஐயா! ஓம் ஐயா” என்று பதில் சொல்லிக் கொண்டு இருந்தான். அவன் முழங்கையில் விலகிய எலும்பு துருத்திக் கொண்டு முழங்கையில் நீலம் பாவித்து வீங்க வைத்திருந்தது. அப்பு அவன் மேல் கையை பலமாக பற்றியவாறு கேள்விகளை தொடுத்தவாறு இருந்தார். ‘இந்த முறை விளைச்சல் எப்படி?! இந்த போகத்தில நெல்லு வில என்னவாம்?!..’ போன்ற கமம் செய்பவனிடம் கேட்கும் கேள்விகளால் அவன் காதை நிரப்புவார். அவன் கவனம் எல்லாம் அவரின் கேள்விகளுக்கு பதில் தேடுவதிலேயே அப்போது இருந்தது. அதுதான் தருணம் என்று அப்பு உணர்ந்திருக்க வேண்டும். சடாரெண்டு அவன் கையை ஒரு பொம்மையின் கையை திருகுவதைப் போல் திருகி பலமாக இழுத்து விட்டார். “ஐயோ! எண்ட ஆண்டவனே “ என்ற அவன் கூக்குரல் கூரையை பிய்த்தது! இந்த தருணத்திற்கு காத்திருந்தாற்போல்

அப்பு ஒரு புன்சிரிப்புடன் ”இனி பத்து ஒண்டு போட்டா சரி, எலும்பு மூட்டுக்குள்ள சரியா கொளுவிற்று .. மூண்டு கிழமையில பத்த கழற்ற ஏலும் “ என்று வலியால் துடித்தவனுக்கு ஆறுதல் வார்த்தைகளை கூறி இனி ‘பத்துப்போடு’வதற்கான ஆயுத்தங்களில் இறங்கினார்.அப்புவின் எலும்பு முறிவு வைத்தியத்தை விட பாம்புக்கடி வைத்தியம் பார்க்க சுவாரசியமாக, ஒரு நாடகத்தன்மையுடன்




கூடியதாய், இருக்கும்.

ஒருமுறை எங்கள் ‘வயல்காறன்’ வேலுமணியை வயல் அறுவடை சீசனில் ஏதோ பாம்பு கடித்துவிட்டது. ஊரார், அவன் வாயில் நுரை தள்ள, தூக்கிக்கொண்டு அப்புவிடம் ஓடி வந்தனர். “புடையன் பாம்பு கடிச்சிப்போட்டாம் ஐயா” என்ற சபையோரின் சாட்சியத்தை காதில் வாங்காமல் கடித்த பாம்பின் உடல் அடையாளங்களை முதலில் கேட்டறிந்து கொண்டார் அப்பு. அந்த விபரணையில் இருந்து கடித்த பாம்பு என்னவென்று கணித்துக் கொண்டு அதற்கான மந்திரங்களை ஓதத் தொடங்கினார். ஏறிய விஷத்தை இறங்கும்படி உருக்கமாய் அம்மாளிடம் வேண்டுவதாகவே அந்த மந்திரங்கள் ஓதப்பட்டன. ஆம், அவை கட்டளைகள் என்பதை விட வேண்டுதல்களே!




அப்பு கையில் ஒரு வேப்பிலை கத்தை எடுத்துக் கொண்டார்.. வேலுமணி அரை பிரஃஜையுடன் வாயில் நுரை தள்ள தரையில் பாதி உணர்வுடன் கிடந்தான். அப்புவின் ஒரு கையில் வேப்பம் கொத்து ! மறு கையில் ஒரு கைப்பிடி மிளகு. வேப்பம் கொத்தால் அவன் கன்னதில் பலமாக மாறி மாறி அறைந்தவாறு மந்திரங்கள் ஓதியவாறு ஒரு மிளகை அவன் பற்களுக்கிடையே திணித்து “மிளக முன் பல்லால கடிச்சி நுனி நாக்கால ருசி பாரு! என்ன உறைக்குதா சொல்லு?” என்று கேட்க அவன் இல்லை என்பதற்கு அடையாளமாக தலையை பக்கவாட்டில் அசைத்தான். பாம்பின் விஷம் தலைவரைக்கும் ஏறிவிட்டது என்பதை உணர்ந்தார் அப்பு. இல்லையெனில் மிளகு உறைத்திருக்க வேண்டுமே. இனி காலம் தாழ்த்த முடியாது!.. செய்வதை விரைவாய் செய்தாக வேண்டும். மீண்டும் வேப்பம் கொத்து கசையடியும் உச்சஸ்தானத்தில் மந்திரங்களும் தொடர்ந்தன. மீண்டும் அதே பரீட்சை!. மிளகு அவனுக்கு உறைக்கவில்லை!. விஷம் இன்னும் இறங்கவில்லை. மந்திரமும் கசையடியும் தொடர ஒரு கட்டத்தில் “ஐயா! மிளகு உறைக்கிதையா” என்றான் உரத்த குரலில். வேப்பம் கொத்தின் விசையோ அப்புவின் மந்திர ஓதல்களோ!. ஏதோ ஒன்று அந்த மாயையை செய்தன. “விஷம் இறங்கிற்று! இறங்கிற்று ! அம்மாளே நன்றி அம்மா!“ என்று பூரண திருப்தியுடன் கூறி தலையை நிமிர்த்தி சூழ்திருந்த கூட்டத்தை பெருமையுடன் பார்த்தார் அப்பு. சூழ்ந்திருந்த கூட்டமும் வாய் திறந்து நின்றது!

ஊர்க்கோயில் இருந்த திசையில் தலையை திருப்பி இரு கரங்களையும் தலைக்கு மேல் கூப்பி தெய்வானை அம்மாளை வணங்கி அந்த சடங்கை முடித்து வைத்தார்.

அப்புவுடனான என் உறவு திவ்வியமானது. அப்பு நல்ல கதை சொல்லி. எனக்கு கம்பராமாயணத்தையும் கீதையையும் ஒரு தொடர்கதையின் சுவாரசியத்துடன் சொல்வார். ராமாயணம் ராமர் கதையை சொல்லும் ஆனால் காட்சியாக காட்டாது என்போர் சிலர். ஆனால் அப்புவின் விவரணங்களுடன் கூடிய ராமர் கதையில் காட்சிகள் அவர் வார்த்தைகளில் ஒரு ரம்யமான காட்சியாய் திரைப்படம் போல் கண் முன்னே விரியும். அவர் வார்த்தைகளில் வனத்தில் சீதை மட்டுமல்ல நானும் வனத்தில் ஒரு கல்லில் உட்கார்த்து காட்சிகள ரசிக்கும் ஒரு உணர்வை உருவாக்கித்தருவார்.

கதை கேட்கும் படலம் முடிந்ததும் ஒரு சிறு பரிசளிப்பு. அவர் அறையில் இருந்த பெரிய முதிரை மர அலுமாரியின் மேல் தட்டில் அவரின் வேட்டி

சால்வையின் பின் மறைத்து வைத்திருக்கும் சிறு டப்பாவை திறந்து இரண்டு மூன்று ‘மில்க்டொபி’ இனிப்புகளை பரிசளிப்பார்.மூன்றுதான் தினக்கணக்கு. அம்மாவின் கட்டளையை மீறி நடக்கும் ஒரு இரகசிய பரிசளிப்பு இது.

“‘அப்பு, இவன் சின்னவனுக்கு டொபி, சொக்களட் ஒண்டும் கொடுக்காதேயுங்கோ!. பல்லு சூத்தை குத்திப் போடும்“ என்ற அம்மாவின் அறிவுரைகளும் புறக்கணிக்கப்படும்.



வாய் நிறைய இனிப்புக்களுடன் நான் அம்மாவிடம் மாட்டிக் கொண்ட தருணங்கள் உண்டு. “ அப்பு, இவன்ர வாய்க்குள்ள டொபி போல!. நீங்களோ குடுத்த நீங்கள்?” என்ற கேள்விக்கு பலமான மறுப்பு தலையாட்டல் அப்புவின் தரப்பில் இருந்து வரும். அப்பு இப்படி குறும்பு பொய் பேசும் வேளையில் தன் வலது கை விரல்களை மடக்கி பெருவிரலை ஆள்காட்டி விரலூடாக நுழைத்து ஒரு சமிக்கை செய்வார். அவர் கண்கள் குறும்பு சிரிப்புடன் “என் விரலைப் பார்” என்று சொல்லாமல் சொல்லும். இது எங்கள் இருவருக்கும் மட்டுமே புரியும் இரகசிய பரிபாஷை!

நாட்கள் உருண்டோடி ஆண்டுகளுக்குள் அடங்கி அவையும் உருண்டோடி!.அப்புவிற்கு பாரிசவாதம் வந்து உடலின் இடது பக்கத்தை இழுத்துக் கொண்டது. சாமி அறைக்குப்பக்கத்தில் தான் அப்புவின் அறை.

அந்த அறையில் இருந்து இப்போ அவர் வெளியே வருவதில்ல. எங்கள் வயல்காரன் சாமித்தம்பிதான் இப்போ அப்புவுக்கு எல்லாம். அவனுக்கும் அப்படி ஒன்றும் இள வயது இல்லை. காலையில் அவரை அணைத்தவாறு மூச்சு முட்ட தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு கிணற்றடியில் இருந்த கதிரையில் உட்கார்த்தி ஒரு குளியல். அவனே அப்புவின் தலையை துவட்டி புது வேட்டி உடுப்பித்து மீண்டும் அவரை வீட்டிற்குள் தூக்கிக்கொண்டு போவான். அப்புவிற்கு சாப்பாடு பிசைந்துதான் ஊட்டி விட வேண்டும். பற்கள் விடைபெற்றுக்கொண்ட வயது அவருக்கு. அதுவும் சாமித்தம்பியின்ர வேலைதான். ஆனால் அம்மாதான் சோறு கறிகள் எல்லாம் பீங்கானில் பரிமாறி தன் கையால பிசைந்து “சாமித்தம்பி!. இத அப்புவிற்கு தீத்தி விடு பாப்பம்! வேணாம்




எண்டு சொன்னாலும் எல்லாத்தையும் தீத்தி விடப்பாரு! நேத்து மத்தியானமும் நல்லா சாப்பிட யில்லை! வர வர உடம்பும் சூம்பிக்கொண்டு போகுது!” என்று சொல்லி வேதனையுடன் அங்கலாய்ப்பார். அம்மாவிற்கும் முன்னரைப் போல் ஓடி ஆடி வேலை செய்ய முடியாது. நாடியில் கைவைத்தபடி அப்புவின் குளியலை பார்த்து ‘எப்படி இருந்த மனுஷன்? வயசு தான் என்னமா அப்புவின்ர சௌந்தரியத்த சிதைச்சுப் போட்டுது?” என்று முணுமுணுப்பார் அம்மா. அப்புவின் தேக சுகம் தேய்பிறையாய் மாறி வருவது அம்மாவின் சோகத்திற்கு முதல் காரணி. வாழ்வின் சோகங்களை வலைக்கரண்டி போட்டா வடித்தெடுக்க முடியும்? வாழ்ந்துதானே கழிக்க வேண்டும். அதுவே உலக நியதி அல்லா?

அம்மாவிற்கும் இது தெரியாததல்ல.

ஒரு நாள் அயல் வீட்டு செல்வி மாமி அப்புவின் நிலையை புரிந்து கொண்டு “இ!ச பாரு புள்ள! எத்தின நாளுக்கு பெரிய ஐயாவ வீட்டோட வச்சு பாக்கப்போறா? சாமித்தம்பியும் நெல்லு மூட்டய

தூக்கிற மாதிரி அவர கஸ்டப்பட்டு தூக்கிற்று கிணத்தடியும் வீடும் எண்டு திரியிறான். ஒரு நாளைக்கு தடுக்கி விழுந்தினமோ அவ்வளவுதான். சீவன் போயிடும் கண்டயோ?” என பயம் காட்டினார்.

செல்வி மாமி சொன்னதும் அம்மாவிற்கு சரியாகவே பட்டது.அப்பாவை மாரடைப்பால் மூன்று வருடங்களுக்கு முன் இழந்த அம்மா தனியாக அப்புவை பார்ப்பதை ஒரு சுமையாகவே இப்போது கண்டார். நானும் மனிசியும் மகனும் குடும்பத்தோட கொழும்பு தெமத்தகொடவில இடம்பெயர்ந்துவிட்டதால் அம்மாவும் தனது கைத்துணையை இழந்து விட்டிருந்தார். தினசரி இரவு கைபேசி அழைப்புகளில் அப்புவின் நிலமை பற்றி அழுது புலம்புவது இப்போ வாடிக்கையாகிவிட்டது.



செல்வி மாமி அம்மாவிடம் “‘டவுனில இப்ப புதிசா ஒரு வயோதிபர் மடம் திறந்திரிக்கினமாம்! இப்ப கனடாவில இருக்கிற நம்மட கோயிலடி சண்முகத்தின்ர கொப்பரும் அங்கதானாம் இப்ப இருக்கிறாராம். வேளைக்கு நம்மட ஊர் சாப்பாடு! வருத்தம் வாதை எண்டால் உடனே டாகுத்தர் அங்கேயே வந்து பாப்பினமாம். ஒவ்வொரு நாளும் தியானம், யோகாசானம் எண்டு எல்லாம் இருக்குதாம். ஒருக்கா உன்ர மகனோட கதைச்சிப் போட்டு அப்புவையும் அங்க சேத்து விடலாம்தானே?” என்று ஓதி வைத்தாள். அம்மா தனது தினசரி நச்சரிப்புக்களுடன் இந்த செய்தியையும் என்னுடன் பகிர்ந்தார். அம்மாவின் வார்த்தைகளின் வலிமையை என்றும் உணர்ந்தவன் நான். ஒரு முடிவை எடுத்த பின் அதன் சாரத்தை என்னிடம் கூறி என் அனுமதிக்காய் காத்திராமல் “‘அதத்தான் செய்வம் மகன்” என்று சம்பாஷணையை முடிப்பார்.







அப்புவின் இடப்பெயர்ச்சி அடுத்த மாதமே நடந்து முடிந்தது. என்னால் வேலை நிமித்தம் கொழும்பில் இருந்து ஊருக்கு உடனே திரும்பி வர முடியவில்லை. ஆனால் அடுத்த மாதமே லீவில் தனியே ஊர் திரும்பி அப்புவின் புதிய வாசஸ்தலத்தை பார்க்க விரைந்தேன்.

அம்மா அப்புவை அந்த வயோதிபர் மடத்தில் சேர்ப்பதற்கு பட்ட கஸ்டங்களை பட்டியல் போட்டார். வயல்காரன் சாமித்தம்பியின் பங்களிப்பை சிலாகித்துப் பேசினர் அம்மா. எனது இடைவெளியை நிரப்பிய அவன் உண்மையில் ஒரு புண்ணியவான்தான். அப்பு இல்லாத எங்கள் வீடு களையிழந்து வெறிச்சோடியிருந்தது. அப்பு உட்காந்திருக்கும் ஊஞ்சல் சலனமற்று ஸ்தம்பித்து நின்றிருந்தது..

தான் பிறந்து வளர்ந்த வீட்டை விட்டு தனது சொந்தங்கள் எடுக்கும் முடிவுகளால் நிகழும் இந்த இடப்பெயர்வுகள் கொடியன. தமது விருப்பத்திற்கு மாறாக, சொந்தங்கள் சொல்லும் தேன் பூசிய வார்த்தைகளை நம்பவது போல் பாசாங்கு செய்து, மௌனமே மொழியாகி பெட்டிக்குள் அடங்கும் பாம்பாக எத்தனை ஜென்மங்கள் தம் புளித்துப் போன மீதி வாழ்க்கையை சோகத்தில் வாழ்ந்து கரைக்கின்றன? மண்ணை மீறும் விதைகளாய் வாழ்ந்து காட்டுகிறேன் பார் என்று சமூகத்தை சவாலுக்கு அழைத்த இளமை ஓய்ந்துவிட வேர்கள் வெட்டப்பட்ட மரத்தின் தனிமையுடன் தம் குறுகிய உலகினுள் சுருங்கிக் கொண்ட ஜீவன்களின் பிரதிநிதிதான் அப்பு இன்று.

அப்புவின் காலை உணவு பரிமாறப்பட்டதும் நானும் அம்மாவும் அவரை பர்க்க அந்த வயோதிபர் மடத்திற்கு சென்றிருந்தோம். அப்புவிற்கென ஒரு தனி அறை. மேலே மின்விசிறி சுழன்று அறைக்கு

ஒரு ஆடம்பரத்தை கொடுத்தது. அப்பு உட்கார்ந்து வாசிக்க நல்ல மரக்கதிரை ஒன்று. மூலையில் ஒரு அரை அலுமாரி. குளியறைக்கு அழைத்துச்செல்லும வாசல் கதவு மூடியிருந்தது. கட்டிலின் அருகில் தொங்கிக் கொண்டிருந்த 'காலிங் பெல்'. அடித்தால் உதவிக்கு ஆள் வரும். அப்பு என்றும்



போலவே வெள்ளை 'பாலாமணி' யும் சாரனும் அணிந்து இருந்தார். கட்டிலில் படுத்தவாறு இருந்தவர் எம்மைக் கண்டதும் எழுந்து உட்கார எத்தனித்தார். முடியவில்லை.

"' நீங்க படுங்க அப்பு! நான் கட்டிலில கிட்ட இருக்கிறன்! எழும்பி கஸ்டப்பட வேணாம் " என்று கூறி அருகில் அமர்ந்து கொண்டேன். அம்மாவும் "' எப்படி அப்பா, எல்லாம் வசதி தானேநல்லா பாத்துக் கொள்ளுகினமா?! உங்கட சாப்பாட்டில சீனி சேர்க்க வேண்டாம் எண்டு சொல்லியிருக்கன்!. இண்டைக்கு குளிப்பாட்டினவையளோ?" என்ற கேள்விக்கு அப்பா இல்லை என்று தலையாட்டியே பதிலளித்தார்.

மீண்டும் ஏதோ சொல்ல வேண்டும் போல் அவருக்கு தோன்றியிருக்க வேண்டும். முகத்தில் ஆழ்ந்த சிந்தனையுடன் கூடிய மௌனம்! பறிபோன சொற்களை மீட்டெடுக்கும் மௌனம்.

"'மகள் நான் வீட்டுக்கு வந்து இருக்கப்போறன் மகள்! இஞ்ச ஏலாது!. இஞ்ச இந்த அறைக்குள்ள தனிச்சிப் போயிட்டன் பிள்ள ! பயமாய் இருக்கு மகள் இஞ்ச எனக்கு யாரு இருக்கா?" என்றபோது அவர் உடல் குலுங்கி அடங்கியது. அப்புவின் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் அம்மா என் முகத்தைப் பார்த்தார். அப்புவின் கண்கள் பனித்ததை அம்மாவும் கவனித்தார்.

'பையா தனிச்சுப் போயிட்டன் ராசா! சாப்பாடும் குளிப்பும்தான் வாழ்கையில்ல பையா குடும்பமடா குடும்பம். அது இஞ்ச இல்ல மகன் ! என்னை நம்மட வீட்டுக்கு கூட்டிப் போ ராசா" என்று என்னைப் பார்த்து சொன்ன வார்த்தைகள் இடியாய் என்னுள் இறங்கின.




அப்போது அறைக்கதவு திறந்து கொள்ள அந்த வயோதிபர் மடத்தின் 'மேற்ரன்' உள்ளே நுழைந்து எம் எல்லோரையும் கண்களால் துலாவி " ஓ! ஐயாவ பார்க்க எல்லொரும் வந்திருக்காங்க போல" என்று கூறி பின் அப்புவைப் பார்த்து " எப்பிடி ஐயா இருக்கிறீங்கள். எல்லாம் வசதிதானே? ஏதாவது தேவையென்டால் சொல்லவேணும். என்ன! சந்தோசம் தானே?" என்ற கேள்விக்கு "'ஓம் ! மெத்த சந்தோசம்! மெத்த சந்தோசம்" என்று தலையை ஆட்டியவாறு கூறி என் கண்களை ஏறிட்டுப்பார்த்தார் அப்பு. பின் அவர் கண்கள் தன் வலது கை விரல்களில் குத்திட்டு நின்றன. என் பார்வை அப்புவின் அந்த கை விரல்களில் குவிந்தது.

பெருவிரல் ஆள்காட்டி விரலூடாக நுழைந்து எம்மிருவருக்கு மட்டும் தெரிந்த அந்த இரகசிய சமிக்கையை உருவாக்கிக் காட்டிற்று!

சிறப்புச் சிறுகதை

# பாலைவனச் சோலை

புவனகிரி கல்யாண்

'பெரியார் தொண்டர் வெற்றிவேல், முருகன் கோவில் காவடி உற்சவத்தை வரவேற்கிறார்...' என்பது காலையில் கிடைத்த அதிரடிச் செய்தி! நம்ப முடியவில்லை! நம்பாமல் இருக்க முடியவில்லை! வயசு ஏற ஏற எல்லோருக்கும் மரண பயம் வரும். பயம் வந்தா பக்தியும் வந்துடும் போல.

உண்மையில் மரண பயம் அவருக்கு ஒன்றும் புதுசா வரப்போவதில்லை! கார்கில் யுத்தத்தில் கலந்துகொண்டு விழுப்புண்ணை நெஞ்சில் தாங்கியவர். கண்ணி வெடியில் சிக்கி வலது காலை இழந்து செயற்கைக்கால் பொருத்தியிருப்பவர். ஆகக் கூடி ஒரு முன்னாள் ராணுவ வீரரான அவருக்கு, மரணத்தைப் பற்றி யாரும் எதுவும் பயமுறுத்தி விட முடியாதுதான்!

அதே சமயம் இந்த 50 வயதில் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் அவர், சமய சந்தர்ப்பங்களில் ஒன்னு கெடக்க ஒன்னு செய்யறதும் புதுசில்லே...




ஒவ்வொரு சித்திரை பௌர்ணமி அன்றும், குடியானவர்கள் தெருவில் இருந்து காவடி வரும். பட்டு வேட்டி சரசரக்க தொந்தியும் தொப்பையுமாக வசதியான குடியானவர்கள், வளைய வருவார்கள். காவடிக்கும் நோகாது அவர்களுக்கும் நோகாது ஆடிவிட்டு, காவடியை இறக்கி வைத்து விடுவார்கள்.

இப்ப நாலைந்து வருஷமா பக்கத்தில் இருக்கிற ஆதிதிராவிடர் காலனியைச் சேர்ந்த காவடிகளும் வந்துகிட்டே இருக்கு. ஊர்ல இருக்கிறதே ரெண்டு தெருதான். ஒன்று குடியானவர் தெரு, மற்றொன்று ஆதிதிராவிடர்கள் காலனி தெரு.

காலனி தெருவில் அந்த இனத்தவர்கள் மட்டும் இருக்கிறார்கள். மாறாக குடியானவர்கள் தெருவில் கோனார், முதலியார், பிள்ளைமார், வன்னியர், ஆசாரி, நாவிதர், துணி வெளுப்பவர் எனப் பலபட்டறை ஆக இருக்கிறார்கள்.

குடியானவர்கள் எடுக்கும் காவடி ஆதிதிராவிடர் காலனிக்குப் போகாது. ஆதிதிராவிடர் காலனியைச் சேர்ந்த காவடி இரண்டு தெருவுக்கு வரும். குடியானவர்கள் என்று தங்களைப் பற்றிப் பெருமையாக பீத்திக் கொள்ளும் உயர்சாதி வகுப்பினர் யாரும் காலனியைச் சேர்ந்த காவடிகளுக்கு தீபாராதனை செய்வதில்லை. வெயில் நேரத்தில் தூக்கிச் சுமந்து வரும் அவர்களின்



கால்களில் நீரூற்றி விழுந்து வணங்குவதுமில்லை!

ஆனால் இந்த உதாசீனங்களுக்கு எல்லாம் அவர்கள் யாரும் சளைத்ததாகவும் தெரியவில்லை. நாக்கில் நீண்ட அலகு குத்திக் கொண்டும், முதுகில் கொக்கி மாட்டி சிறு தேரை இழுத்துக் கொண்டும் அவர்கள் வருவது மனசுக்கு மிகுந்த கஷ்டத்தை உண்டு பண்ணும். இந்தக் காவடி தூக்குற அன்னைக்கு யாரும் வேலைக்குப் போகக்கூடாது என்பது அவர்களின் சட்ட திட்டம்.

“நாளைக்காவது உன் பொண்டாட்டிய சாணி அள்ள வரச் சொல்லு.” என்கிற அதிகாரக் குரல் காதைப் பிளக்கும்.

“நீஎன்ன சாமி கும்பிட்டாலும் நாளைக்கு என்கிட்ட வந்துதான் ஆகணும்.” என்கிற மமதை அந்தக் குரலில் தொனிப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

“சொல்றேன்..” என்கிற இவர்களின் குரலிலும் எதிர்ப்பு தெறிக்கும். இதே முன்பெல்லாம் “சொல்றேன் சாமி...” என்பதாக இவர்களின் பதில் இருக்கும்.

கால நகர்தலில் பொங்கல், தீபாவளிக்குக் கூட யாரும் இனாம் வாங்கப் போகக் கூடாது என்கிற சட்ட திட்டம் இவர்களுக்குள்ளாகவே பேசி நடைமுறைக்கு வர எத்தனித்துக் கொண்டிருக்கிறது.

குடியானவர் தெருவில் குடியிருக்கும் வெற்றிவேல் வீட்டு எதிரே, காலையில் திடீரென துணிப் பந்தல் போடப்பட்டதைப் பார்த்த பின்புதான் ஊருக்கு விஷயம் தெரியும்.

வழக்கமாய் எல்லா நாத்திகவாதிகளின் மனைவி மாதிரிதான் இவருடைய மனைவியும். மிகுந்த பக்தி கொண்டவர்.தன்னுடைய கணவருக்கு காலம்போன காலத்திலாவது சாமி பக்தி வந்து தொலைத்ததே... என்கிற சந்தோஷ அலுப்போடு முகமெல்லாம் பல்லாய் வளைய வந்து கொண்டிருக்கிறாள்.

பானகம் தயாரிப்பதிலும், நீர்மோர் தாளிப்பதுமாக தன்னுடைய மகனையும் மகளையும் ஈடுபடுத்தி மேற்பார்வையிட்டவாறு தெருவுக்கும் உள்ளுக்குமாய் நடந்து கொண்டிருக்கிறாள். சாதாரணமாய் வெற்றிவேல் இது மாதிரியான சாமி காரியங்களுக்கு பைசா செலவழிக்க மாட்டார்! இன்று ஏனோ அநியாயத்திற்கு காசை வாரி இறைத்து கொண்டிருக்கிறார்.






"அந்தக் காலத்துல பஞ்சம், பட்டினின்னு இருந்த நிலையில் நில பிரபுக்கள், மிராசுதாரர்கள், இவங்ககிட்ட நிலபுலன் இருந்த அளவுக்கு மனசு இல்லை. அவங்க கிட்ட இருந்த வசதி வாய்ப்பின் பலனை ஏழை பாழைகளுக்கும் கொடுக்க வேண்டியதுதானே? ஐநூறு ரூபாய் வருமானம் உள்ள கூழ் ஊத்துறதுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வசூல் பண்ணி... காதடைக்க சத்தம் எழுப்ப வேண்டியது... அரைகுறையாக திரிகிற கரகாட்டக்காரிகளை விடிய விடிய ஆடவிட்டு



கொஞ்சமாவது கிடைக்க செய்யணும்ங்கிற நல்ல எண்ணத்தில் ஊரைக் கூட்டி பரிவட்டம் கட்டி, மனசு குளிர வாழ்த்தி, கூழ் ஊற்ற வெச்சாங்க. புகழ் போதை தலைக்கு ஏறி ஆடி மாசத்துல ஒரு நாள் ஊத்துறதுக்கே இவ்வளவுன்னா, தினமும் ஊத்துனா எப்படி என்கிற ஆசையிலாவது கொடை எண்ணம் வளரட்டும் என ஆரம்பிச்ச பழக்கம் இது."






"இப்பதான் அரசாங்கமே இலவச அரிசி என்கிற பேரில் இதைச் செய்யுதே!"

"இப்பவும் கூழ் ஊத்திட்டு கிடக்கிறதை விட்டுட்டு ஏதாவது நோட்டு புத்தகம் எழுதுபொருள் என சாமிய பின்னாடி அனாதையா கொண்டு வர வேண்டியது... இதுக்கெல்லாம் என்னால தலக்கட்டு வரிங்கற பேர்ல நான் கொடை கொடுக்க முடியாது"

சாமி காரியத்துக்குத் தான் இப்படி நாத்திக விதண்டாவாதம் பேசுறாருன்னு சொல்ல முடியாது. போன சித்திரை மாச வெயிலில் ஒரு வெளியூர்க்காரன் காக்கா வலிப்பு வந்து நுரை கக்க, கை காலை இழுத்துக்கிட்டு கிடந்தான். தெருக்கூடி, அவனுக்கு ஆளுக்கு பத்து ரூபா வசூல் பண்ணி வழி அனுப்ப உத்தேசித்தது.

இவர் முறை வந்தப்போ, "அந்த ஆளு என்ன ஊருன்னு கேளுங்க. அந்த ஊருக்கு நான் டிக்கெட் எடுத்து தந்திடறேன். காசுதான் வேணும்னா நான் தரமாட்டேன். இவனை மாதிரி சில பேரு காசு வசூல் பண்ணி



குடிச்சிட்டு கிடக்கிறத நான் பார்த்து இருக்கேன்.”

ஊரே வசூல் பண்ணுவதை விட்டுவிட்டு இவரை வசைபாடித் தீர்த்தது.

வழக்கத்திற்கும் மாறாக ஆதிதிராவிடர்களின் காவடி முன்னதாகவே வந்துவிட்டது.

வெற்றிவேல் தன் மனைவி மக்களோடு எதிர்கொண்டு அழைத்து வந்து பந்தலில் நிறுத்தினார்கள்.

அனைவரின் கால்களிலும் நீர் ஊற்றி மாலை மரியாதை செய்து குடும்ப சகிதமாய் விழுந்து வணங்கி தீபாரதனை தரிசனம் செய்தார்கள். இளைப்பாற பானகமும், நீர் மோரும் தாராளமாய் வழங்கப்பட்டது.

பாவம்! இவருடைய மனைவியே இந்தக் காவடிக்காகத் தான் இத்தனை ஏற்பாடுகள் என்பதை அறிந்திருக்கவில்லை! காவடி தூக்கி வந்தவர்களும், உடன் வந்திருப்பவர்களும் கட்டுக்கடங்காத நெகிழ்ச்சிக்கு ஆளாகியிருந்தனர்.

வெற்றிவேல் தொண்டையைச் செருமிக் கொண்டார்.

“நான் உங்ககிட்ட கேட்டுக்கிட்டது மாதிரியே காவடியை சீக்கிரமா இந்த தெருவுக்கு கொண்டு வந்ததற்கு ரொம்ப நன்றிங்க அம்மாவாசை!”

இவர் வீட்டில் தலைமுறை தலைமுறையாய் பண்ணயம் பார்க்கும் வாரிசு தான் இந்த வயது முதிர்ந்த அமாவாசை.




“என்ன எஜமான் இப்படி பண்ணிட்டீங்க...” என்று வார்த்தை கிடைக்காமல் தடுமாறினார். பின்பு சுதாரித்துக் கொண்டவராய், “நான் என்ன சொல்ல, எங்க இனத்துக்கே பெரிய மரியாதை உண்டு பண்ணிட்டீங்க.” என்றார்.

“தப்பா புரிஞ்சுக்கிட்டீங்கன்னு நினைக்கிறேன். இருந்தாலும் பரவாயில்லை. காவடி தூக்கி வந்த பக்தர்கள் காவடியில தான், நாங்க விழுந்து வணங்கி இருக்கோம். பக்தின்னு வந்துட்டதுக்கு அப்புறம் ஜாதிய பார்க்கக் கூடாது. நீங்க காவடி தூக்கி வந்தா... முகத்தைத் திருப்பிக்கிட்டு நிக்கிற இந்த தெரு ஜனங்க மேலேயும் எனக்கு சந்தேகம் வருது. குறைந்தபட்சம் உங்கள இவங்க யாரும் இன்னும் மனுஷனாவே மதிக்க தொடங்கலேன்னு எனக்குத் தோணுது. நான் பத்தி மார்க்கத்துக்கு வந்துட்டேனா இல்லையாங்கறதில்லே விஷயம். குடியானவர் தெரு காவடி வரும்போது, எப்படி இந்தத் தெரு ஜனங்கள் காலில் நீர் ஊற்றி வழிபாடு பண்ணறாங்களோ, அதுமாதிரி உங்க தெரு காவடியையும் இவங்க வரவேற்கிற வரைக்கும் நான் இது மாதிரியான ஏற்பாடுகளோட காத்துக்கிட்டு இருப்பேன்!” என இருகரம் குவித்தார்.

காவடிகள் மகிழ்ச்சியாய் ஆடிய படி புறப்பட்டன.



# அறிவோம் தமிழர்

## பூவையாருக்கு ஒரு புகழாஞ்சலி!

அன்று இரவு கைப்பேசியில் வந்த அந்தச் செய்தியைக் கண்டதும், என் கண்கள் உடைப்பெடுத்தன.

**'தானறிந்த தமிழுக்கும் தமிழ் தந்த குறளுக்கும்' என வாழ்ந்த (எனது தந்தை) கவிஞர் பூவை செங்குட்டுவன் 5-9-2025 மாலை 5-15.க்கு இறைவனடி சேர்ந்தார் என்பதை மிகுந்த வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்' -பூவை தயா.**

அந்தத் துயரச் செய்தி தந்த தாக்கத்தில் இருந்து மீள்வதற்கு நேரம் பிடித்தது.

நான்கு நாட்களுக்கு முன், ஆகஸ்ட் 31., ஞாயிறன்று மாலை, பூவையாரின் 'வாழ்க்கை என்பது நேர்கோடு' எனும் நூல் வெளியீட்டு விழாவில் அவரைக் கண்டபோது, அவ்வளவு அன்புடன் என் கன்னத்தைத் தட்டி, கைகளைப் பிணைத்துக் கொண்டு, தன்னருகிலேயே இருக்கும்படி அவ்வப்போது சாடை செய்து, அருகிலேயே இருத்திக் கொண்டு அன்பு மழை பொழிந்த 'செந்தமிழ்க் கவிஞர்' செங்குட்டுவன் அவர்கள் காலமாகி விட்டாரா?

குறுஞ்செய்தி மங்கலாகி மறையும்படி, சட்டெனக் கண்கள் குளமானது, வழியும் விழிநீரைத் தடுக்க முடியவில்லை...

'எங்கே இதயம் அங்கே வாழும் அன்பே என்னை ஆளும்' என அவர் எழுதிய வரிகள் பொன்மனச் செம்மலுக்கு மட்டுமல்ல, பூவையாருக்கும் மிக மிகப் பொருந்தும்.




அவரை முதன்முறையாகச் சந்தித்த அந்த நிகழ்வு என் நெஞ்சில் நிழலாடியது.

பொன்மனச் செம்மலின் நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, திரு.ஐசரி கணேஷ் அவர்களின் ஏற்பாட்டில், 'கிழக்கு ஆப்பிரிக்காவில் ராஜு' என்ற அனிமேஷன் படத்தின் பூஜையும், மக்கள் திலகத்துடன் பங்குபெற்ற மூத்த கலைஞர்களை கௌரவித்து விருது வழங்கும் விழாவும் ஒருங்கே நடந்தது.

அன்றைய 'சத்யா ஸ்டுடியோ'வும், இன்றைய 'டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கல்லூரியுமான அவ்விடத்தில் ஜனவரி 17— 2018, அன்று நடைபெற்ற அவ்விழாவில், திரு. ரஜினிகாந்த் 'கிளாப்' அடித்து துவக்கி வைக்க, திரு. கமல்ஹாசன் கேமராவை 'ஆன்' செய்து முதல் காட்சியைப் பதிவு செய்தார்.

பின்னர், மக்கள் திலகத்தோடு பணிபுரிந்த, பழகிய பலரும் விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர். ஏறக்குறைய விருது வழங்கும் படலம் நிறைவடையும் தருணம், விழா அரங்கிற்குள் செல்லாமல், அதாவது கட்டுக்கடங்காத அக்கூட்டத்துக்குள் நுழைய விரும்பாமல், சத்யா ஸ்டுடியோவில் இருந்து மெல்ல வெளியே நடந்து வந்தார் திரு. பூவை செங்குட்டுவன் அவர்கள்.

நான் அவரிடத்தில் ஓடிச் சென்று, "ஐயா ஏன் கிளம்பி விட்டீர்கள்? விருது வாங்கவில்லையா?" என்ற போது, "என்னால் உள்ளே போக முடியவில்லை! இதுவரை அவர்களும் என் பெயரை அழைக்கவில்லை! நாமாகப் போய் நின்று, விருது வாங்க எனக்கு விருப்பமில்லை!" என்றார்.

"என்ன இப்படிச் சொல்லிட்டீங்க? உங்களைப் போன்றவர்களைச் சிறப்பிக்கத் தானே இந்த விழா. நீங்கள் இவ்வளவு தூரம் வந்தும், விருதைப் பெறாமல் செல்லலாமா? தயவுசெய்து அந்த விருதைப் பெற்றுச் செல்லுங்கள்." என கேட்டுக் கொண்டபோதும், அவர் மறுத்தார். நான் மீண்டும் வலியுறுத்த, அவரும் மீண்டும் மறுக்கவே செய்தார்.

ஒருகட்டத்தில், அவரைக் கரம் பிடித்து உள்ளே அழைத்துச் சென்று, கூட்டத்தை விலக்கிக் கொண்டு அந்த அரங்கிற்குள் நுழைந்தேன். அங்கே பாதுகாப்புக்கு நின்றிருந்த 'கருஞ் சட்டை பயில்வான்கள்' என்னைத் தடுத்தனர்.



# பெருமை

அவர்களிடத்தில் நிலைமையை எடுத்துக் கூறியும், “அதெல்லாம் முடியாது. மேலே பெயர் அழைத்தால் நீங்கள் செல்லலாம்.” என்றனர்.

அதற்கு மேல் அவர்களிடத்தில் பேசினால் சரி வராது எனப் புரிந்தது. பூவையாரை ஓரிடத்தில் வந்து அமரச் செய்துவிட்டு, நான் மேடையின் வாயிலில் நின்றிருந்த பேராசிரியை ஒருவரை அழைத்து, ‘ஒரு மாபெரும் ஆளுமைக்கு விருது வழங்கப்படாமல் அவர் வெளியே நிற்கிறார். தயவு செய்து அவரது பெயரை மேடையில் அழைக்குமாறு சொல்லுங்கள்.’ என்று கேட்டுக் கொண்டதும், அவர் போய் அறிவிப்பாளரிடம் தெரிவிக்க, சில நொடிகளில் அவர் பெயரை அறிவித்தார்கள்.


அதன் பின் பூவையார் அவர்கள், மேடைக்குச் சென்றார். விருது பெற்றார்.

## கொற்றவன்

இது, எங்களது முதல் சந்திப்பு எப்படித் துவங்கியது என்பதற்கான விளக்கம் அல்ல. பூவையார் அவர்களின் குணம் இதுதான் என்பதற்கான சாட்சி!

அதன் பிறகு அவரோடு அடிக்கடி கைபேசியில் உரையாடுவதிலும், நேரில் சந்திக்கையில், அன்பைப் பொழியும் அவருடனான அளவளாவல் எல்லாம் என் வாழ்க்கையின் பேறு பெற்ற கணங்கள்! அப்படிச் சந்தித்த






நாட்களுக்குக் கணக்கில்லை!

இயக்குநர் திரு.ஏ.ஜே.பாலகிருஷ்ணன் அவர்களின் இயக்கத்தில் உருவான 'எம்.ஜி.ஆர்.' வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் ஒரு பாடல் எழுத அவரை அழைத்துச் சென்றேன். அற்புதமான பாடலை வடித்திருந்தார்.

ஒருசமயம் நான், பக்திப் பாடல்கள் பதிவாக்க வேண்டும் எனக் கேட்டதும் நான்கு பாடல்கள் கொடுத்தவர், தனியிசைப் பாடல்களாகவும், படங்களில் வைத்துக் கொள்ளவும் என நான்கு பாடல்கள் வடித்துக் கொடுத்தார்.

அதில், பக்திப் பாடல் பதிவாகும் போது இசைக்கூடத்துக்கு வந்து பாடல் உருவாக்கத்தில் எங்களுடன் பங்கெடுத்துக் கொண்டு சிறப்பித்தார்.





நான் எழுதிய முதல் பக்திப் பாடலை நீங்கள் வெளியிட வேண்டும் எனக் கேட்டதும் மகிழ்ச்சியுடன் இசைந்தவர், திருமயிலை கபாலீசர் ஆலயத்துக்கு வந்து பாடலை வெளியிட, இயக்குநர் திரு. ஜெயப்பிரகாஷ் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

கடந்த ஆண்டு அவரது மூன்று நூல்கள் வெளியீட்டின் போது, திரைப்பட ஜாம்பவான்களான இயக்குநர் திரு. எஸ்.பி.முத்துராமன், இயக்குநர் திரு. வி.சி.குகநாதன், இயக்குநர் திரு.கே.பாக்கியராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்ட விழாவில், என்னையும் சிறப்பிக்க நினைத்த பூவையார் அவர்கள், அவரது 'இதனால் சகலமானவர்களுக்கும்' என்ற நூலினை இயக்குநர் திரு. வி.சி.குகநாதன் அவர்கள் வெளியிட, மேடையில் அதன் முதல் பிரதியை என்னைப் பெற்றுக் கொள்ளச் செய்து சிறப்பித்தார்.


இன்னும் அவருடனான பல சந்திப்புகள், நினைவுகளுடன் அவரை இறுதியாகத் தரிசிக்க, பெரம்பூர் பிருந்தா தியேட்டர் எதிரே இருக்கும் திரு. பூவை தயா அவர்களின் இல்லத்துக்கு காலை 9.30 மணிக்குச் சென்றபோது, அந்த மகாக் கவிஞர் பனிப்பேழையில் கிடத்தப்பட்டிருந்தார்.

என் கண்களில் வழிந்த நீரைக் கட்டுப்படுத்தவியலாமல், அவர் மீது ரோஜா மலர் மாலையை வைத்து வணங்கிவிட்டுக் வந்தமர்ந்தேன்.





# கவிஞர் பூவை. செங்குட்டுவன்



நண்பர் வானதி திரு.சரவணன் அவர்களும், பாடலாசிரியர் சங்கத் தலைவர் திரு. தமிழமுதன், ஆவணப்பட இயக்குநர் திரு. டி.எம்.எஸ்.விஜயராஜ் அவர்களும், வந்து இணைந்திருந்தனர்.

அந்தத் தமிழ்ப் பெருங்கவியின் சாதனைகளும், அவரது வாழ்வியல் தடங்களும், அவரது உரையாடல்களும் மனதில் ஓட, நண்பர்களுடன் நேரம் ஓடியது.

பூவையார் அவர்கள், தமிழ்த் திரையிசையில் மிகப்பெரும் உயரம் தொட்டவர். ஆனால் அதையெல்லாம் மண்டைக்குள் ஏற்றிக் கொள்ளாத அவரது எளிமையே அசாத்தியமானது.

அவர் எப்போதும் எல்லோரிடத்தும் அன்பைப் பொழிந்தார். அந்த அன்பில் ஒருபோதும் பாசாங்கு இருந்ததில்லை! அதில் வெற்றுப் புகழ்ச்சி இருந்ததில்லை! யாரிடத்தும் எதையும் எதிர்பாராத உன்னத அன்பு அவரிடத்தில் என்றும் இருந்தது.

அவர் பாட்டுக்கு அவர் வழியில் தனிக் கம்பீரத்துடன் நடந்தபடி இருந்தார். அதனால்தான்,

**‘அவன் தாளத்துக்குப் பாடல் எழுதத் தெரிந்தவன்!**
**ஆனால் தாளம் போடத் தெரியாதவன்!’**
—எனத் தன்னைப் பற்றி அவரால் எழுத முடிந்தது.

‘அவருக்கான அடையாளத்தை அவரே உருவாக்கிக் கொண்டு விட்டார்.’ என்பதுதான் ‘அருட்செல்வர்’ ஏ.பி.நாகராஜன் அவர்கள் பூவையாருக்கு வழங்கிய பாராட்டு!

“என்னைத் தேடி பூவை செங்குட்டுவன் வரவில்லை. நான்தான் அவரைத் தேடிச் சென்றேன். விழா ஒன்றில், ‘திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால்’ என்ற பாடலைக் கேட்ட கண்ணதாசன் அவர்கள், “இந்தப் பாடல் மிக அருமையாய் இருக்கிறது. நான் அந்தக் காட்சிக்கு எழுதப் போகும் பாடலை விடவும் இதுவே சிறந்த பாடல்! இதையே பயன்படுத்திக் கொள்ளுங்கள்” என்று கவியரசரே புகழ்ந்தார் என்றால், பூவை செங்குட்டுவனின் புலமைக்கு இதைவிட நற்சான்று வேண்டுமா?” என ‘அருட்செல்வர்’ அவர்கள் பூவையாரைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் சத்திய வார்த்தைகளன்றோ!

அப்படிப்பட்ட கவித்துவம் மிக்க பூவையாரின் வாழ்க்கைப் போராட்டமும், அவரது வழித்தடமும், எப்படி இருந்தது?

கீழப்பூங்குடி என்ற சிவகங்கை மாவட்டத்தின் குக்கிராமத்தில் இராமையா — இலட்சுமியம்மாள் தம்பதியர்க்கு பிப்ரவரி 12, 1936 அன்று பிறந்த முருகவேல் காந்தி என்ற தவப்புதல்வர்தான், தமிழ்பால் கொண்ட காதாலால் தன் பெயரைச் ‘செங்குட்டுவன்’ என மாற்றிக் கொண்டு, பின்னர் ஊர்ப் பெயரையும் தன்னுடன் இணைத்து ‘பூவை செங்குட்டுவன்’ எனத் தமிழ்த் திரையுலகில் அழியாப் புகழ் பெற்றார்.

வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் திரைத்துறை




மீது கொண்ட காதலால், எட்டாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக் கொண்டார். தான் எப்படித் திரையுலகில் தடம் பதிப்பது என்றே யோசித்து வந்தார்.


பின்னர் தன் கிராமத்தை விட்டு சென்னைக்கு வந்து வாய்ப்பும் தேடினார். வயிறும் வாடினார். ஒன்றிரண்டு ஆண்டுகள் அல்ல, பதிமூன்று ஆண்டுகள் வாட்டத்தில் இருந்தார். ஆனாலும் எழுத்தின் மீதான தேட்டத்தில் இருந்தார். அதனால் அவரது பாடல் புத்தகம் நிரம்பி வழிந்தது. கலைமகளின் அருள் அவருக்குப் பரிபூரணமாகக் கிட்டிவிட்டதை உணர்ந்தவர், பாடல்களை எழுதிக் குவித்தார்.

இவரது வாழ்க்கையில், திருப்புமுனையை ஏற்படுத்தியவர் வயலின் மேதை திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள். அவர்தான், கடவுள் மறுப்புக் கொள்கை கொண்ட திராவிட சித்தாந்தத்தில் திரிந்த பூவையாரை, ஆன்மிக வரிகளைப் புனைய வைத்தவர். அதை இவர் எப்போதும் நன்றியுடன் குறிப்பிடுவார்.




இவர் எழுதிய புகழ்பெற்ற பாடல்களை அந்தக் காலத்தில் முணுமுணுக்காத ஆளே இருக்க மாட்டார்கள் எனும் அளவுக்கு அற்புதமான வரிகளை யாத்து, யார் இந்தக் கவிஞர் என எல்லோரையும் வியக்கச் செய்தவர். தமிழ்ப் பெருங்கவிஞர்களான கவியரசர் கண்ணதாசன், மக்கள் கவிஞர் மருதகாசி, காவியக் கவிஞர் வாலி, உவமைக் கவிஞர் சுரதா, கவிஞர் ஆலங்குடி சோமு, கவிஞர் முத்துலிங்கம் போன்றோர் பலரும் பூவையாரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

‘திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால்
திருத்தணி மலை மீது எதிரொலிக்கும்...’
‘திருப்புகழைப் பாடப் பாட வாய் மணக்கும்!
எதிர்ப்பவரை முருகா உன் வேல் தடுக்கும்...’
‘இறைவன் படைத்த உலகை எல்லாம்
மனிதன் ஆளுகின்றான்!
மனிதன் வடித்த சிலையில் எல்லாம்
இறைவன் வாழுகின்றான்!’
‘குருவாயூரப்பா திருவருள் தருவாய் நீயப்பா!’
‘ஏடு தந்தானடி தில்லையிலே! —அதைப்
பாட வந்தேன் அவன் எல்லையிலே...’
‘நான் உங்கள் வீட்டுப் பிள்ளை
இது ஊர் அறிந்த உண்மை...’
‘தாயிற் சிறந்த கோயிலுமில்லை!
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை!
ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை!



# உங்கள் கவிஞர் பூவை செங்குட்டுவன் அவர்களின் திரைப் பயணம்

## பகுதி - 1

அன்னை தந்தையே அன்பின் இல்லை!'
'காலம் நமக்குத் தோழன்
காற்றும் மழையும் நண்பன்'
'ராதையின் நெஞ்சமே...
கண்ணனுக்கு சொந்தமே...'

—இப்படியான பாடல்கள் இவரது தமிழ் மொழியின் ஆளுமையையும், பாடல் வடிக்கும் திறமையையும் பறைசாற்றியதில், புகழ் பெற்ற கவிஞராக மிளிர்ந்தார். திரைப்பட கதாசிரியர் ஆகவேண்டும் என்பதற்காகச் சென்னைக்கு வந்தவர், மிகச் சிறந்த கவிஞராக நிலைத்த இடம் பிடித்து விட்டார்.

அந்தக் காலத்தில் வானொலியில் தினமும் பலமுறை ஒலிபரப்பான 'தாயிற் சிறந்த கோயிலுமில்லை! தந்தை சொல் மிக்க மந்திரமில்லை!' பாடல்தான் டி.கே.கலாவுக்கு முதல் பாடலாகும்.

அதுமட்டுமா? 'சிம்பொனி' வரை சென்று பெரும் புகழ் பெற்றுவிட்ட 'இசைஞானி' திரு. இளையராஜா அவர்கள், முதன்முதலில் ஒரு பாட்டுக்கு இசை அமைத்தார் என்றால், அது பூவையார் எழுதிய 'ஊரும் பழனியப்பா... என் பெரும் பழனியப்பா...' என்ற பாடல்தான் என்பது இசைஞானியின் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய செய்தி!

திருக்குறளின் 'குறள் தரும் பொருள்' என்னும் நாட்டிய நாடகத்தைப் படைத்த இவரது தமிழ்ப் பங்களிப்பை முன்னாள் குடியரசர் மேதகு அப்துல் கலாம் அவர்கள் வெகுவாய் பாராட்டியுள்ளார். அப்படைப்பு என்றென்றும் தமிழ் மழலைச் செல்வங்களுக்கும், தமிழ் மக்களுக்குமான சொத்து என்றால் மிகையல்ல!




பூவையார் கவிஞர் மட்டுமல்ல, மிகச் சிறந்த நாடகாசிரியரும் கூட என்பது வியப்பான செய்தி! 15—க்கும் மேற்பட்ட மேடை நாடகங்கள், 30—க்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்கள், வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சித் தொடர் என எழுதிக் குவித்தவர். 1000 —க்கும் மேற்பட்ட திரையிசைப் பாடல்கள், 4000—க்கும் மேற்பட்ட பக்தி மற்றும் தனியிசைப் பாடல்கள் என இவரது எழுத்துப் பயணம் மிக நீண்டது.

இவர் எழுதிய, நான் பெற்ற பரிசு, ஓவியன் மகள், வெற்றி நமதே, மனக்கண் போன்ற நாடகங்கள், இவரது எழுத்தாற்றலை நாடக மேடையில் உரக்கச் சொல்லியது என்றால், பூம்புகார் தந்த பொற்செல்வி, தெய்வீகத் திருமணங்கள் போன்ற நாட்டிய நாடகங்கள் இவரது கவிதைத் தமிழை மேடையில் நாட்டியமாடிக் காட்டியது. மேலும் இவர், இரண்டு படங்களுக்கு கதைகளும், மூன்று படங்களுக்குத் திரைக்கதை வசனமும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது நாடகங்களைப் பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், கலைஞர் கருணாநிதி, கொத்தமங்கலம் சுப்பு போன்ற ஜாம்பவான்கள் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

பூவையார் அவர்களைப் பாராட்டும் போது, அவரது மகன் பூவை தயா அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ‘புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?’ என்னும் பழமொழிக்கு ஏற்ப, பூவை தயா அவர்களின் நாடகப் பங்களிப்பும்



அளப்பரியது.

என் நெஞ்சம் உனக்காக, மனிதன் ஒரு புத்தகம், ஜெகஜாலக் கில்லாடிகள், ஜேம்ஸ் பாண்ட் 007, காகிதப் பிருந்தாவனம், நாங்கள் பேசமாட்டோம், கூட்டாஞ்சோறு உள்ளிட்ட சமூக நாடகங்களையும், இதிகாச — புராண வகையில் பார்த்தால், வஞ்சகமே நீ வாழ்க, ராஜயோகம், வீரபாண்டிய கட்டபொம்மன், மகாபாரதம் (கர்ணன்), இராமாயணம், பாதுகா பட்டாபிஷேகம், காரைக்கால் அம்மையார், மணிமேகலை போன்ற இன்னும் பல இதிகாச நாடகங்களையும் மேடையேற்றி வெற்றி கண்ட திரு. பூவை தயா அவர்கள், நாடகாசிரியராக மட்டுமல்லாமல், 800—க்கும் மேற்பட்ட மேடை நாடகங்களில் முக்கிய வேடங்களில் நடித்திருக்கும் வகையில், தந்தையின் அடியொற்றி வரும் தனயன் என்பதை விடவும், தந்தையின் மீது அலாதி அன்பும் மதிப்பும் வைத்து அவரைக் கண்ணும் கருத்துமாகப் பேணி வந்தவர் என்பதும் இங்கே பதிவு செய்யப்பட வேண்டிய செய்தி!






காலத்தால் அழியாப் பாடல்கள் எழுதிய பூவையார் அவர்கள், பெரும்புகழ் பெற்றவர் என்றாலும், எங்கும், எப்போதும், தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாதவராகவே இருந்தார். அதனால்தானோ என்னவோ இவரை அரசும், திரைப்பட சங்கங்களும், தமிழ்ச் சங்கங்களும் போற்ற மறந்து விட்டன.

புரட்சித் தலைவரின் ஆட்சியில் இவருக்கு தமிழக அரசின் ‘கலைமாமணி’ விருது வழங்கப்பட்டது. மேலும் மகாகவி பாரதியார் விருது, கண்ணதாசன் விருது போன்றவை கிடைத்திருந்தாலும், இவரது திறமைக்கும் தமிழ்ப் பங்களிப்புக்கும், உரிய பெருமைகள் எதுவும் வந்து சேரவில்லை என்பதே நிதர்சனம்!

உயரிய மாண்பும், பண்பும், அன்பும் கொண்ட இந்தச் ‘செந்தமிழ்க் கவிஞரின்’ 60 ஆண்டு கலைப்பயணத்தைக் கொண்டாடும் வகையில் ஒரு விழா எளிமையாக வாணி மகால் சிற்றரங்கில் நடைபெற்றது.

‘இவ்விழாவினைக் கொண்டாடியே ஆகவேண்டும்! என்னும் முனைப்புடன் எல்லா வகையிலும் முன்னின்று நடத்திக் காட்டினார் தயாரிப்பாளரான திரு ஏ.எல். அழகப்பன் அவர்கள். உடன் அவர்தம் அருந்தவப் புதல்வர்களான, இயக்குநர் திரு. ஏ.எல். விஜய் மற்றும் நடிகர் திரு. ஏ.எல்.உதயா அவர்களும் பெரும் பங்கெடுத்துக் கொண்டனர். இவர்கள் இருவருக்கும் பூவையார் பெரியப்பா உறவு முறையாவார். அந்தவகையில், பூவையார் மீது இக்குடும்பம் எடுத்துக் கொண்ட அன்பும் மதிப்பும் அளப்பரியது என்பது தெற்றென விளங்கிய



அவ்விழாவில், திரு ஏ.எல்.அழகப்பன் அவர்கள் உரையாற்றும் போது, “எங்கள் வாழ்க்கை பூவையார் அமைத்துத் தந்தது. அவர் மட்டும் திரைத்துறைக்கு வராவிட்டால், நாங்கள் எல்லாம் இங்கே வந்திருப்போமா என்பது கேள்விக் குறிதான்! அவர்தான் எங்கள் குடும்ப வழிகாட்டி!” எனப் புகழ்ந்துரைத்தார்.

ஏனோ அவ்விழா பற்றியச் செய்தி ஊடகங்களில் பரவலாகப் பகிரப்படவே இல்லை என்பது வருந்தத் தக்கது. இவ்விழாவில் கலந்துக்





கொண்டபோது, என்மீது பூவையார் பொழிந்த அன்பு மறக்கவியலாத ஒன்று. ஆனால் அன்றுதான் அவரைக் கடைசியாக நான் பார்ப்பேன் என நினைத்திருக்கவில்லை!

அடுத்த ஆறு தினங்களில் அவர் கிடத்தப்பட்டிருக்கும் பனிப்பேழைக்கு முன், அவர் முகத்தையே பார்த்தவாறு அமர்ந்திருந்தேன்.

பூவையாருக்கான இறுதிச் சடங்குகளை முன்னின்று நடத்தினார் திரு. ஏ.எல். அழகப்பன் அவர்கள். இப்போதும் தந்தையுடன் திருக்குமரர்களான திரு. விஜய், திரு. உதயா அவர்களும் எல்லா ஏற்பாட்டையும் செய்து வந்தனர்.

தன் சகக் கவிஞருக்கு மரியாதை செலுத்த கவிஞர் திரு.முத்துலிங்கம் அவர்கள் வந்தார். கவிஞர் திரு. ஆலங்குடி சோமு அவர்களின் மகன், மகள் வந்திருந்தனர். மேலும், பூவையாரின் அன்பில் நெகிழ்ந்த பலரும் வந்திருந்து மரியாதை செலுத்தினர்.

இல்லத்தில் நடைபெற்ற சடங்குகள் முடிந்து காட்டிற்கு அழைத்துச் செல்ல அமரர் ஊர்தியின் மீது பூவையாரின் உடல் ஏற்றப்பட்ட போது, ‘நான் உங்கள் வீட்டுப் பிள்ளை’ பாடலை ஒலிக்கச் செய்தார்கள்.

புரட்சித் தலைவருக்காக, ‘புதிய




பூமி’ படத்தில் பூவையார் எழுதிய பாடல்!... அப்பாடலுக்கான வரிகளில்,

**“கோவில் என்றால் கோபுரம்**
**காட்டும் தெய்வம் உண்டு அங்கே...**
**உள்ளம் என்றால் உயர்ந்து காட்டும்**
**எண்ணம் வேண்டும் இங்கே...”**

என்ற அந்த வரிகளை மக்கள் திலகம் மிகவும் ரசித்ததோடு, பூவையாரை அவ்வரிகளுக்காகப் பாராட்டிப் புகழ்ந்துள்ளார். அவ்வரிகள் பொன்மனச் செம்மலுக்கு மட்டுமல்ல, பூவையாருக்கும் கூட மிகமிகப் பொருத்தமான வரிகள். காரணம், அவரது வாழ்வும் வாக்கும் அவ்வரிகளின் படிதான் இருந்தது. இதை அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் நன்றாக அறிந்திருப்பர்.

அப்பாடலை அங்கே ஒலிக்கச் செய்தது, எப்பேர்பட்ட பொருத்தமான ஒன்று! தான் எழுதிய அந்த வரிகளின்படி வாழ்ந்தவருக்கு அது மாபெரும் மரியாதை அல்லவா?

அமரர் ஊர்தி புறப்பட்டது.

நாங்கள் அனைவரும் அதனைப் பின் தொடர்ந்தோம்.

இன்றைய காலகட்டத்தில் பல வெற்றிப் படங்களைத் தந்திருக்கும் ஒரு புகழ்பெற்ற இயக்குநர்

என்ற புகழ் போதை எதுவும் இல்லாமல், திரு. விஜய் அவர்களும், சமீபத்தில் 'அக்யூஸ்ட்' என்ற ஒரு 'ஹிட்' படம் கொடுத்த நடிகர் என்ற பிம்பம் ஏதும் இல்லாமல் திரு. உதயா அவர்களும் இறுதி ஊர்வலத்தில் வந்து பூவையாருக்கான தங்கள் மரியாதையைத் தந்தார்கள். தகன மேடையில் பூவையாருக்கு இறுதிச் சடங்குகள் செய்வதையும் முன்னின்று நடத்தி வைக்க திரு. பூவை தயா அவர்களுக்கு உறுதுணையாக நின்றார் திரு.ஏ.எல். அழகப்பன் அவர்கள்.

அன்பால் என்னை ஆட்கொண்ட 'செந்தமிழ்க் கவிஞரின்' பாதங்களை அந்த இறுதி மேடையில் தொட்டு வணங்கினேன். அப்போது அங்கே நின்றிருந்த பத்து பதினைந்து பேரில், குறிப்பிடத்தக்கவர்களாகத் தெரிந்தவர்கள், திரு. பூவை தயா, திரு.ஏ.எல்.அழகப்பன், இயக்குநர் திரு. விஜய், நடிகர் திரு.உதயா, கவிஞர் திரு.நெல்லை ஜெயந்தா, கவிஞர் திரு.கிருஷ்ணன் போன்றோர்கள்.

அடுத்த சில நொடிகளில்... ஜோதியாய் விளங்கும் அந்த ஈசனிடம், ஜோதியாக பூவையாரின் பூதவுடல் சென்று சேர்ந்தது.

பூவையாரின் நினைவுகள் நெஞ்சில் அலைமோத, அங்கிருந்து புறப்பட்டேன். அந்தச் 'செந்தமிழ்க் கவிஞர்' எழுதிய சில வரிகள் மனதில் ஓடியது.


**'அவன் பாட்டுக்கு**
**இப்போதும் மவுசு இருக்கிறது.**
**அதனால் தான்**
**அவன் பாட்டுக்கு எழுதிவிட்டு,**
**அவன் பாட்டுக்கு இருக்கிறான்.'**

எப்பேர்பட்ட நிதர்சன வரிகளை எளிமையாய் எழுதி இருக்கிறார்...

ஆம்! அவர் இருக்கிறார்... தமிழ்த் திரையுலகில் அழியாத் தடமாய் இன்றும் இருக்கிறார்! என்றும் இருப்பார்!..

தமிழகம் தாண்டியும் கூட, தமிழர்களின் ஆலயங்களில், அவர்தம் நெஞ்சங்களில், செந்தமிழ் கவிஞர்' பூவை செங்குட்டுவன் அவர்களின் பாடல்கள் பலவும் ஒலித்துக் கொண்டே இருக்கும் போது, அவருக்கு மறைவென்பது ஏது?

**பூவை செங்குட்டுவன் ஏறத்தாழ 1400 திரைப்பட பாடல்கள் எழுதியுள்ளார். இரண்டு படங்களுக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி உள்ளார்.**



**விருதுகள்**

**கலைமாமணி விருது**

**கண்ணதாசன் விருது**

**2010- கவிஞர்கள் திருநாள் விருது**

**2021- மகாகவி பாரதியார் விருது**

**வாலி விருது - வாலி பதிப்பகம், 2024**

**புகழ்பெற்ற பாடல்கள் (உதாரணத்திற்கு)**

**திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் (கந்தன் கருணை)**

**தாயிற் சிறந்த கோயிலுமில்லை (அகத்தியர்)**

**ஏடு தந்தானடி தில்லையிலே (ராஜராஜ சோழன்)**

**இறைவன் படைத்த உலகை (வா ராஜா வா)**


**நான் உங்கள் வீட்டுப் பிள்ளை (புதிய பூமி )**

**ராதையின் நெ!சமே (கனி/முத்துப்பாப்பா)**


**காலம் நமக்கு தோழன் (பெத்த மனம் பித்து)**

**காலம் எனக்கொரு (பௌர்ணமி)**

**முத்தமிழில் பாடவந்தேன் (மேல்நாட்டு மருமகள்)**






# கிளிப்பாட்டு

திருவப் பணிந்து நித்தம் செம்மைத் தொழில் புரிந்து,
வருக வருவதென்றே—கிளியே!—மகிழ்வுற் றிருப்போமடி!

வெற்றி செயலுக் குண்டு தியின் நியமமென்று,
கற்றுத் தெளிந்த பின்னும்—கிளியே!—கவலைப்படலாகுமோ?


துன்ப நினைவு களும் சோர்வும் பயமு மெல்லாம்,
அன்பில் அழியுமடீ!—கிளியே!—அன்புக் கழிவில்லை காண்.

ஞாயிற்றை யெண்ணி யென்றும் நடுமை நிலை பயின்று,
ஆயிர மாண்டுலகில்—கிளியே!—அழிவின்றி வாழ்வோ மடீ!

தூய பெருங்கனலைச் சுப்பிர மண்ணி யனை
நேயத்துடன் பணிந்தால்—கிளியே!—நெருங்கித் துயர் வருமோ?

**பாரதியார்**




தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS
VARSHA™

புதினம்



# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## பிக்ஷுவின் காதல் 53

அமாவாசை அன்று இரவு சிவகாமி தன்னுடைய மாளிகையில் தன்னந்தனியாக உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்குத் துணையாயிருந்த தோழி நோய்வாய்ப்பட்டிருந்த தன்னுடைய அன்னையைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தமையால், அதை வியாஜமாகக் கொண்டு அன்றிரவு அவளை வீட்டுக்கு அனுப்பி விட்டாள்.

இப்போது நந்தா விளக்கு ஒன்றே சிவகாமிக்குத் துணையாக எரிந்து கொண்டிருந்தது. அவளுடைய உள்ளமோ பல்வேறு சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தது.

மாமல்லர் வரப்போகிறார் என்று எண்ணியபோதெல்லாம் அவளுடைய இருதயம், மேலெழும்பி வந்து தொண்டையை அடைத்துக் கொண்டது. ஆத்திரமும் ஆங்காரமும் ஒரு பக்கத்தில் பொங்கின. துக்கமும் ஆர்வமும் இன்னொரு புறத்தில் பெருகின.





மாமல்லரிடம் வைத்த காதலினாலல்லவா இந்தத் துன்பங்களுக்கெல்லாம் ஆளானோம் என்ற எண்ணம் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. தனது நிலைமைக்குகந்த சிற்பியின் மகன் ஒருவனைக் காதலித்துக் கலியாணம் செய்து கொண்டிருந்தால், தான் இந்த அவகேட்டுக்கெல்லாம் ஆளாகியிருக்க வேண்டியதில்லையல்லவா? காடு சூழ்ந்த தனி வீட்டில் வசித்த தன்னை மாமல்லர் ஏன் தேடி வந்து இப்படிப் பித்துப் பிடிக்கச் செய்ய வேண்டும்? அப்படிச் செய்தவர் மண்டபப்பட்டுக் கிராமத்தில் ஏன் தன்னைத் தன்னந்தனியாக விட்டு விட்டுப் போக வேண்டும்? மாமல்லர் மேலுள்ள ஆசை காரணமாகத் தானே காஞ்சிக்கு அவள் வர நேர்ந்தது! மறுபடியும் அவருடைய காதல் காரணமாகத் தானே கோட்டையிலிருந்து சுரங்க வழியாக வெளிவர நேர்ந்தது! ஆகா! தன்னுடைய துன்பங்களுக்கெல்லாம் காரணம் அவர் தான்! இப்படியாக மாமல்லரிடம் ஒருபுறம் ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டு வந்தாள் என்றாலும், நேரம் ஆக ஆக, 'ஐயோ! அவர் வரவில்லையே?' என்ற ஏக்கமும் ஒருபுறம் அதிகமாகி வந்தது.

அர்த்த ராத்திரியில் சிவகாமி ஆழ்ந்த சிந்தனையிலிருந்த போது திடீரென்று அவள் எதிரில் தாடியும் மீசையுமான முகத் தோற்றமுடைய இருவரைக் கண்டதும் திகிலடைந்தவளாய் நிமிர்ந்து உட்கார்ந்தாள். ஆனாலும் அப்படி வந்தவர்களுடைய முகத்தோற்றம் பயங்கரத்தை விளைவிப்பதாக இல்லை. எப்போதோ பார்த்த முகங்களாகவும் தோன்றின.

"யார் நீங்கள்? இந்த நள்ளிரவு வேளையில் எதற்காக இங்கே வந்தீர்கள்?" என்று அதிகாரத் தொனியில் கேட்டாள்.

"சிவகாமி! என்னைத் தெரியவில்லையா?" என்று




மாமல்லரின் குரல் கேட்டதும், சிவகாமியின் முகத்தில் வியப்புடன் கூடிய புன்னகை மலர்ந்தது.

எத்தனையோ காலத்துக்குப் பிறகு சிவகாமியின் முகத்தில் தோன்றிய அந்தப் புன்னகை அவளுடைய முகத்திற்கு எல்லையற்ற வனப்பை அளித்தது.

ஆனால், அந்த முகமலர்ச்சியானது மாமல்லரின் உள்ளத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கவில்லை. 'ஆ! இவள் இவ்விடம் உற்சாகமாகத்தான் இருக்கிறாள்!' என்ற எண்ணம் அவர் அகத்தில் உண்டாகி முகம் சுருங்கும்படிச் செய்தது.

"பிரபு! தாங்கள்தானா?" என்று உணர்ச்சியினால் கம்மிய குரலில் கேட்டுக் கொண்டு சிவகாமி எழுந்தாள்.


"ஆமாம், நான்தான்! வாதாபிச் சக்கரவர்த்தியின் மாளிகையில் வைபோகமாக வாழும்போது பழைய மனிதர்களைப் பற்றி எப்படி ஞாபகம் இருக்கும்?" என்று மாமல்லர் கடுமையான குரலில் கூறினார்.

அந்த கொடிய மொழிகளைக் கேட்ட சிவகாமி திக்பிரமையடைந்தவள் போல் மாமல்லரைப் பார்த்தது பார்த்தபடி நின்றாள். இவர் உண்மையில் மாமல்லர்தானா அல்லது வேஷதாரியா என்று அவளுக்கு ஐயம் தோன்றி விட்டது.

இப்படி ஒருவரையொருவர் வெறித்துப் பார்த்துக்கொண்டு சும்மா நின்றதைக் கவனித்த தளபதி பரஞ்சோதி, அந்தச் சந்தர்ப்பத்தில் தாம் அங்கிருப்பது அனுசிதம் என்பதை உணர்ந்தார். உடனே மாமல்லரின் காதருகில் வந்து, "பிரபு! காலதாமதம் செய்யக்கூடாது! அதிக நேரம் நமக்கில்லை" என்று சொல்லி விட்டு, அப்பால் முன்கட்டுக்குச் சென்றார்.

பரஞ்சோதி மறைந்த பிறகு மாமல்லர், "ஓகோ! இன்னும் ஞாபகம் வரவில்லை போலிருக்கிறது. போனால் போகட்டும்,






உன் தந்தை ஆயனரையாவது ஞாபகமிருக்கிறதா, சிவகாமி? ஆடல் பாடல் விநோதங்களில் அவரையும் மறந்து விட்டாயா?” என்றார்.

சிவகாமியின் புருவங்கள் நெறிந்தன, கோபத்தினால் சிவந்த கண்கள் அகல விரிந்தன. இதழ்கள் துடித்தன. உள்ளத்தில் பொங்கி வந்த கோபத்தையெல்லாம் பெரு முயற்சி செய்து அடக்கிக் கொண்டு, “இளவரசே! என் தந்தை சௌக்கியமாயிருக்கிறாரா? எங்கே இருக்கிறார்? எப்படி இருக்கிறார்?” என்று கேட்டாள்.




“ஆம்; ஆயனர் சௌக்கியமாயிருக்கிறார். கால்களில் ஒன்று முறிந்து, ஏக புதல்வியை இழந்தவர் எவ்வளவு சௌக்கியமாயிருக்கலாமோ, அவ்வளவு சௌக்கியமாயிருக்கிறார். ‘சிவகாமி எங்கே? என் அருமை மகள் எங்கே?’ என்று வந்தவர் போனவரையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார். சிவகாமி புறப்படு, போகலாம்!”

சிவகாமியின் கண்களில் நீர் ததும்பியது. ஆயினும் அவள் மாமல்லருடன் புறப்படுவதற்கு யத்தனம் செய்வதாகக் காணவில்லை.

“சிவகாமி! ஏன் இப்படி நிற்கிறாய்! உன் தந்தையை உயிரோடு காண விரும்பினால் உடனே புறப்படு!” என்றார் மாமல்லர்.

இன்னமும் சிவகாமி அசையாமல் சும்மா நின்றாள்.

“இது என்ன, சிவகாமி! காஞ்சிக்கு வர உனக்கு இஷ்டமில்லையா? ஆகா! அப்போதே சந்தேகித்தேன், அது உண்மையாயிற்று!” என்று மறுபடியும் மாமல்லர் குத்தலாகச் சொன்னார்.

சிவகாமியின் மௌனம் அப்போது கலைந்தது, “பிரபு! என்ன சந்தேகித்தீர்கள்?” என்று கேட்டாள்.

“அதைப் பற்றி இப்போது என்ன? பிறகு சொல்கிறேன்.”

“என்ன சந்தேகித்தீர்கள்! சொல்லுங்கள் பிரபு!”

“இப்போதே சொல்ல வேண்டுமா?”

“அவசியம் சொல்ல வேண்டும்.”

“வாதாபிச் சக்கரவர்த்தியின் மாளிகையில் சுகபோகத்துடன் வாழ்ந்தவர்களுக்கு என்னோடு புறப்பட்டு வர இஷ்டமாயிராது என்று சந்தேகித்தேன்.”

இதைக் கேட்டதும் சிவகாமி சிரித்தாள்! நள்ளிரவு நேரத்தில் அந்தச் சிரிப்பின் ஒலி மாமல்லரின் காதுக்கு நாராசமாயிருந்தது. சிரிப்பை நிறுத்தியதும் சிவகாமி உறுதியான குரலில் கூறினாள்.

“ஆம் பல்லவ குமாரா! உங்கள் சந்தேகம் உண்மைதான். எனக்கு இந்த மாளிகையின் சுகபோகத்தைவிட்டு வர இஷ்டமில்லை. வாதாபி நகரை விட்டு வரவும் மனம் இல்லை. நீங்கள் போகலாம்!”

இவ்விதம் சிவகாமி கூறியதும், மாமல்லர் கண்களில் தீப்பொறி பறக்க, “ஆகா பெரியவர்கள்

கூறியிருப்பது எவ்வளவு உண்மை!” என்றார்.

“பெரியவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள்?”

“ஸ்திரீகள் சபல சித்தமுடையவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.”

“அந்த உண்மையை இப்போது கண்டு கொண்டீர்கள் அல்லவா? போய் வாருங்கள், பிரபு.”

“ஆகா! உன்னைத் தேடி நூறு காத தூரம் வந்தேனே? என்னைப் போன்ற புத்திசாலி யார்?” என்று தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார் மாமல்லர். பிறகு, “சிவகாமி நீ எனக்காக வரவேண்டாம். உன் தந்தைக்காகக் கிளம்பிவா! உன் தோழி கமலிக்காகப் புறப்பட்டு வா! உன்னைக் கட்டாயம் அழைத்து வருவதாக அவர்களிடம் சபதம் செய்துவிட்டு வந்தேன்!” என்றார் மாமல்லர்.

“நானும் ஒரு சபதம் செய்திருக்கிறேன், பிரபு!”

“நீயும் சபதம் செய்திருக்கிறாயா? என்ன சபதம்?”

“தங்களிடம் எதற்காகச் சொல்ல வேண்டும்?”

“சொல்லு சிவகாமி! சீக்கிரம் சொல்!”

“சொன்னால் நீங்கள் நம்பப் போவதில்லை. சபல புத்தியுள்ள அபலைப் பெண்ணின் சபதந்தானே?”

“பாதகமில்லை, சொல்! நேரமாகிறது!”

“இந்த வாதாபி நகரம் தீப்பற்றி எரிந்து, இந்நகரின் வீடுகள் எல்லாம் சாம்பலாவதையும், வீதிகளிலெல்லாம் இரத்த வெள்ளம் ஓடுவதையும், நாற்சந்திகள் பிணக்காடாய்க் கிடப்பதையும் கண்ணாலே பார்த்த பிறகுதான் இந்நகரை விட்டுக் கிளம்புவேன் என்று சபதம் செய்திருக்கிறேன்!”

“என்ன கோரமான சபதம்! இப்படி ஒரு சபதத்தை எதற்காகச் செய்தாய் சிவகாமி?”

“பிரபு! இந்த நகருக்கு வரும் வழியில் நான் பார்த்த கோரக் காட்சிகளையெல்லாம் நீங்கள் பார்த்திருந்தால் எதற்காகச் சபதம் செய்தேன் என்று கேட்க மாட்டீர்கள். இந்த வாதாபி நகரின் நாற்சந்திகளிலே தமிழ்நாட்டு ஸ்திரீ புருஷர்கள் கட்டப்பட்ட கரங்களுடனே கொண்டு வந்து நிறுத்தப்பட்டதையும், சாட்டையினால் அவர்கள் அடிக்கப்பட்டதையும், அவர்களுக்கு முன்னால் பல்லவ தேசத்தின் நடன கலாராணி நாட்டியமாடியதையும் தாங்கள் பார்த்திருந்தால், சபதம் ஏன் எதற்காக என்றெல்லாம் கேட்க மாட்டீர்கள்.”



“சிவகாமி! அதையெல்லாம் நான் நேரில் பார்க்காவிட்டாலும், எனக்குத் தெரிந்தவைதான். இருந்தாலும் நீ இவ்வளவு கடுமையான சபதம் எடுத்துக் கொள்ளலாமா?”

“பிரபு! பல வருஷங்களுக்கு முன்னால், பல யுகங்களுக்கு முன்னால், என்னை இளவரசர் ஒருவர் காதலிப்பதாகச் சொன்னார். என்னைத் தமது பட்டமகிஷியாக்கிக் கொள்வதாக வாக்குறுதி கூறினார். என்னை ஒரு நாளும் மறப்பதில்லை என்று வேலின் மேல் ஆணையாக வாக்களித்தார். தாமரைக் குளக்கரையில் பூரண சந்திரனின் நிலவில், ‘இந்த ஜன்மத்திலும் எந்த ஜன்மத்திலும் நீயே என் வாழ்க்கைத் துணைவி’ என்று சத்தியம் செய்தார். அவர் சுத்தவீரர் என்றும், சொன்ன சொல் தவறாதவர் என்றும் நம்பியிருந்தேன். அந்த நம்பிக்கை காரணமாகவே அத்தகைய சபதம் செய்தேன்!” என்று சிவகாமி கம்பீரமான குரலில் கூறி மாமல்லரை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வை கூரிய வேலைப்போல் மாமல்லருடைய நெஞ்சிலே பாய்ந்து அவரை நிலைகுலையச் செய்தது.

(சபதம் தொடரும்)




யோகா மேஜிக்

உடலும், மனதும் ஒருங்கிணைக்க வைக்கும் மேஜிக் யோகாவில் உள்ளது. இதை அனுபவித்த பலரும் ஒப்புக்கொள்வார்கள். அதோடு ஆரோக்கியமான வாழ்க்கை முறை தேர்வு செய்யும் பலர் யோகாவையும் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் ஒன்றாக பழக்கப்படுத்திக் கொள்கின்றனர். குறிப்பாக உடல் எடையை குறைக்க முயலும் பலரும் யோகாவை தேர்வு செய்கின்றனர். உண்மையில் யோகா உடல் எடையை குறைக்க உதவுமா? அதனால் இன்னும் என்னென்ன நன்மைகளைப் பெறலாம்?

மன ஆரோக்கியம் : யோகாசனங்களை மேற்கொள்வதால் உடலின் உட்புற அழகு அதிகரிக்கும். தினசரி பயிற்சியால் சிந்தனைகளை ஒருங்கிணைத்து கவனத் திறன் அதிகரிக்கும். மன அழுத்தம் இருக்காது. உடல் அமைதி கிடைப்பதால் பாசிடிவ் எனர்ஜி தானாக கிடைப்பதை உணரலாம்.

உடல் எடை குறையும் : மனம் ஒரு நிலையில் இணையும்போது நம் உடல் மீதும் கவனம் செலுத்த தொடங்குவீர்கள். இதனால் ஒழுங்குமுறைக்கு மாறும்போது உணவு மற்றும் உண்ணும் அளவும் மாறிவிடும். அதோடு அமைதியான மனநிலையில் பாசிட்டிவ் ஹார்மோன்களும் நமக்குக் கை கொடுக்கும். இதனால் உடல் எடையை எளிதிலும், விரைவிலும் குறைத்துவிடலாம் என 2016 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் கூறப்பட்டுள்ளது. எனவே முறையான உணவுப் பழக்கம், ஆரோக்கியமான வாழ்க்கை முறை, யோகா என இருப்போருக்கு உடல் எடை தானாக குறையும்.

இதற்காக 5 எளிய வகை பயிற்சி ஆசனங்கள் இருக்கின்றன. அவை சர்வங்காசனா,








# யாகம்

தனுராசனா, திரிகோணாசனா, நாவாசனா மற்றும் கத்தி சக்ராசனா ஆகிய ஆசனங்கள் உடல் எடையை குறைக்க உதவுவதாக கூறப்படுகிறது. இதை தினசரி 20 நிமிடங்கள் செய்தால் கூட பலனை எதிர்பார்க்கலாம்.

உடலமைப்பு : யோகாவைப் பொருத்தவரை மூச்சுப் பயிற்சிதான் முதன்மையானது. இதை செய்வதால் உடலில் ஆக்ஸிஜன் அனைத்து உறுப்புகளுக்கும் சீராக சென்று சேர்கிறது. சுவாசிக்கின்றன. இதனோடு செய்யும் ஸ்ட்ரெச்சுகளும் உடலமைப்பை சீராக வைக்க உதவும். எலும்புகளுக்கு உறுதியளிக்கிறது.


நச்சு நீக்கி : உடலில் உருவாகும் கெட்ட கொழுப்புகள், நச்சுக் கிருமிகளை நீக்கி உடலை தூய்மையாகவைத்துக்கொள்ள உதவும் சிறந்த பயிற்சி.

## சிவரஞ்சனி

காயங்களின் மருந்து : யோகா பயிற்சி உடலின் ஹார்மோன்களை சீராக இயக்க உதவும். இதனால் நோய் , உடலில் காயங்கள், முக அழகு, பருக்கள் என அனைத்தையும் குணமாக்கும். உடல் காயங்கள் மட்டுமல்ல மனதில் ஏற்பட்டுள்ள காயங்களுக்கும் யோகா சிறந்த மருந்து.




ஒட்டுமொத்த ஆரோக்கியம் : இப்படி உடல், மனம் என யோகாவால்






பல வகையான நன்மைகளைப் பெற முடிகிறது. எனவே தினசரி யோகா பயிற்சி ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஆதாரம்.

யோகாவில் பல வகைகள் உள்ளன, அவற்றில் மிகவும் பிரபலமானவை: ஹத யோகா, வின்யாச யோகா, அஷ்டாங்க யோகா, ஐயங்கார் யோகா, குண்டலினி யோகா, பின்யோகா, பிக்ரம் யோகா, மற்றும் மறுசீரமைப்பு யோகா. இந்த ஒவ்வொரு யோகா வகையும் வெவ்வேறு உடல் நிலைகள், சுவாச நுட்பங்கள் மற்றும் தியான முறைகளை உள்ளடக்கியது, மேலும் உங்கள் விருப்பம் மற்றும் உடற்தகுதிக்கு ஏற்ப சிறந்த வகையைத் தேர்ந்தெடுக்கலாம்.

ஒரு காலத்தில் ஒருவருக்கு லேசாகத் தொப்பை விழுந்தால், `என்னப்பா... நாப்பது வயசுக்குள்ளயா?' என்று ஆச்சர்யமாகக் கேட்பார்கள். இன்றைக்கு இளம் வயதினரைக்கூட விட்டுவைக்காமல், பரவிக் கொண்டேயிருக்கிறது தொப்பை. அதோடு உடல் பருமன் பிரச்னையும் அதிகமாகியிருக்கிறது. பல உடல்நலக் கோளாறுகளுக்கு அடித்தளமாக இருப்பவை இந்த இரு பிரச்னைகளும். உடல் பருமனைக் குறைக்கவும், தொப்பையைக் குறைக்கவும் யோகாவில் சில வழிமுறைகள் இருக்கின்றன.




உடல் பருமன் மட்டுமல்ல, ஒருவருக்குத் தொப்பை போடுவதற்கும் உடல் உழைப்பு இல்லாமல் பல மணி நேரம், ஒரே இடத்தில் உட்கார்ந்தபடி வேலை செய்வதுதான் முக்கியக் காரணம். அதோடு, சரியான நேரத்துக்கு உணவு உண்ணாமலிருப்பது, அளவுக்கு அதிகமாக உண்பது, நேரம் தவறித் தூங்குவது, உடலுக்குக் கேடு விளைவிக்கும் உணவுகளைத் தேடித் தேடி உண்பது, அதிக கெட்டக் கொழுப்பு நிறைந்த உணவுகளை உண்பது போன்றவையும் உடல் பருமன், தொப்பைக்கு முக்கியக் காரணங்கள். இன்னும் மனஅழுத்தம், ஹார்மோன் குறைபாடுகள், பிரசவத்துக்குப் பிறகு பெண்களுக்கு உடல் எடை அதிகரித்தல்... என வேறு சில காரணங்களும் இருக்கின்றன.

உடல் எடையைக் குறைக்க தினமும் சில பயிற்சிகளைச் செய்யவேண்டியது முக்கியம். யோகா, உணவுக் கட்டுப்பாடு போன்றவற்றை முறையாகக் கடைப்பிடித்தால் ஒரே மாதத்தில் இரண்டு கிலோ வரை எடை குறைக்கலாம். அதே நேரத்தில் எடை குறைதல் என்பது ஒவ்வொருவரின் உடல்நிலையைப் பொறுத்து மாறுபடும். எடையைக் குறைப்பதற்கான பயிற்சிகளை மருத்துவ ஆலோசனைக்குப் பிறகு தொடங்குவது நல்லது.

சில யோகா பயிற்சிகள், பலன்கள்...

மற்ற பயிற்சிகளைப்போல் இல்லாமல் யோகா பயிற்சிகளில் மிக மெதுவாகத்தான் எடை குறையும். ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் பயிற்சிகளே உடல் எடையைக் குறைக்கப் போதுமானவை. ஒரே ஒருநாள் பயிற்சி செய்துவிட்டு, எடை மெஷினில் ஏறி நின்று எடை பார்ப்பது உதவாது. தினமும் தவறாமல் யோகா பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

கீழே குறிப்பிட்டிருக்கும் சில பயிற்சிகளைச் செய்தால் தொப்பை குறையும்; இடுப்பைச் சுற்றியிருக்கும் ஊளைச்சதைகள் குறையும். யோகா பயிற்சிகளை ஏற்கெனவே தெரிந்து வைத்திருப்பவர்கள், அவற்றை வீட்டிலேயே செய்யலாம். ஆனால், புதிதாக கற்றுக்கொள்பவர்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று முறையாக யோகா செய்வதே சிறந்தது.

சூர்யநமஸ்காரம்

சூரிய நமஸ்காரம் மொத்தம் 12 நிலைகளைக் கொண்டது. சூரிய நமஸ்காரத்தின் அனைத்து ஆசனங்களும் சூரியனுக்கு நன்றி செலுத்துவதுபோல் அமைந்தவை.

முதலில் இரு கைகளையும் கூப்பி வணக்கம் சொல்வதுபோன்ற நிலை. நேராக நிமிர்ந்து நின்று கைகளைக் கூப்பி மூச்சை உள்ளிழுத்து வெளியேவிட வேண்டும். இரண்டாம்நிலை —




இரண்டு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்தி பின்னோக்கி வளைய வேண்டும். மூன்றாம் நிலை — முன்னோக்கி வளைய வேண்டும்; வளைந்து, இரு கைகளாலும் குதிகாலின் பின்புறம் பிடித்து, முகத்தை கால்களோடு ஒட்டியநிலையில் வைக்க வேண்டும். நான்காம் நிலை — இரண்டு கைகளையும் தரையில் ஊன்றி ஒரு காலை மட்டும் பின்னோக்கி வைக்க வேண்டும் (படத்தில் காட்டியுள்ளதுபோல்). ஐந்தாம் நிலை — இரண்டு கைகளையும் ஊன்றி, இரண்டு கால்களையும் உயர்த்திவைக்க வேண்டும்; இப்போது கைகளை லேசாக வளைத்து, உடலைக் கீழே இறக்க வேண்டும். ஆறாம் நிலை — முழங்கால் தரையிலிருக்க, நெஞ்சுப்பகுதியை உயர்த்த வேண்டும். ஏழாம் நிலை — முந்தைய நிலையில் இருந்தபடி மேல்நோக்கிப் பார்க்க வேண்டும். எட்டாம் நிலை — இரண்டு கால்களையும் உயர்த்தி படத்தில் காட்டியுள்ளதுபோல் நிற்க வேண்டும். கடைசி நான்கு நிலைகளையும் முதல் நான்கு நிலைகளைப்போல் செய்ய வேண்டும்.

ஒரு நிலையிலிருந்து கடைசிநிலை வரை செல்லும்போது முழுத் தண்டுவடத்துக்கும் அனைத்து மூட்டுகளுக்குமான ஒரு பயிற்சியாக இருக்கும். சூரிய நமஸ்காரம் எலும்புகளைப் பலப்படுத்தும்; தேவையற்ற கொழுப்புகளைக் குறைக்கும்.

பாதஹஸ்தாசனம்

நின்று கொண்டு செய்யும் பயிற்சி. நேராக நிமிர்ந்து நின்று, கைகளை தலைக்கு மேலாக உயர்த்தி, மூச்சை வெளியிட்டபடி முன்னோக்கி வளைய வேண்டும். இந்தப் பயிற்சியைச் செய்தால் அடிவயிற்றில் சேர்ந்திருக்கும் கொழுப்பு குறையும்.

ஜானுசிரசாசனம்

அமர்ந்த நிலையில் செய்யும் பயிற்சி. ஒரு காலை மடக்கி வைத்துக்கொண்டு, ஒரு காலை நீட்டி, இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி முன்னோக்கி வளைய வேண்டும். வளைந்து படத்தில் காட்டியுள்ளதுபோல் ஒரு கையால் இன்னொரு கையைப் பற்றிக்கொள்ள வேண்டும். 30 விநாடிகள் இதே நிலையில் இருக்க வேண்டும். இதேபோல் இரண்டு பக்கமும் மூன்று முறை செய்ய வேண்டும். இந்தப் பயிற்சி, தொப்பை குறைக்க உதவும்.

பவனமுக்தாசனம்

படுத்த நிலையில் செய்யும் பயிற்சி. படத்தில் காட்டியுள்ளதுபோல் இரண்டு கால்களையும் கோர்த்துப் பிடித்து இயல்பான சுவாசத்தில் 30 விநாடிகள் செய்ய வேண்டும். இதேபோல் மூன்று முறை செய்ய வேண்டும்.




தனுராசனம்

குப்புறப்படுத்து செய்யும் பயிற்சி. படத்தில் காட்டியுள்ளதுபோல் இரண்டு கால்களையும் மடித்து கைகளால் கோத்துப் பிடித்துக்கொள்ள வேண்டும். இயல்பான சுவாசத்தில் 30 விநாடிகள் அப்படியே இருக்க வேண்டும். இதேபோல் மூன்று முறை செய்ய வேண்டும். இந்தப் பயிற்சி வயிற்றில் உள்ள தசைகளை வலுப்படுத்தும்; கெட்ட கொழுப்பைக் குறைக்கும். உடல் எடையையும் தொப்பையையும் குறைக்க மிக எளிமையாக செய்யக்கூடியது யோகா. இந்தப் பயிற்சிகளைத் தனியாக வீட்டில் செய்வது நல்லது. இந்தப் பயிற்சிகளை யோகா மருத்துவர்களிடம் கற்றுக்கொண்டு செய்யவேண்டியது அவசியம்.

யோகா பயிற்சிகளுடன் நடைப்பயிற்சியும் செய்தால், விரைவில் பலன் கிடைக்கும். ஒரு மாதத்துக்கு இரண்டு கிலோ வரை எடை குறைப்பது நல்லது, சரியானது. அதற்குப் பதிலாக நிறையப் பயிற்சிகளைச் செய்து, வேகமாக எடையைக் குறைத்து, மீண்டும் வேகமாக எடையை அதிகரிப்பது நல்லதல்ல. பயிற்சிகளுடன் முறையான உணவுக் கட்டுப்பாடும் அவசியம். அதோடு போதுமான உறக்கமும் வாழ்வியல் முறை மாற்றங்களும் தேவை.




## உலர் கண் நோய்

திரைச் சாதனங்களான தொலைக்காட்சிகள், அறிதிறன்பேசிகள் மற்றும் சமூக ஊடகங்கள் அண்மைக்காலங்களில் நம் அன்றாட வாழ்வின் தவிர்க்கமுடியாத அங்கங்களாகி விட்டன. இவற்றை நாம் நமது பொழுதுபோக்கு, தகவல் தொடர்பு, கல்வி, நண்பர்களுடனும், குடும்பத்தினருடனும் இணைந்திருத்தல், உலகளாவிய நிகழ்வுகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல் போன்றவற்றில் அதிகமாகப் பயன்படுத்தி வருகிறோம். நம்மில் இதன் பயன்பாட்டுக்கு எவரும் விதிவிலக்கல்ல.

பெருகிவரும் தொழில்நுட்ப வளர்ச்சி, மின்னணுவியல் சாதனங்களில் அதிக நேரம் செலவிடும் வாழ்க்கைமுறை, பணிச் சூழல் ஆகியவற்றால் இன்று கண் தொடர்பான சிக்கல்கள் நம் அனைவருக்கும் பொதுவானதாகியுள்ளன. அதிகப்படியான திரை நேரம் நமக்கு உடல் பருமன், தூக்கமின்மை, கண் கோளாறுகள் போன்ற உடல்நலப் பிரச்னைகளையும், மன அழுத்தம், மனப் பதற்றம், மனச்சோர்வு போன்ற மனநல பிரச்னைகளையும் ஏற்படுத்தலாம்.

காணொலி சாதனத்தின்அதிக பயன்பாட்டால் தற்போதைய இளம் தலைமுறையினரிடையே ஏற்பட்டு வரும் பிரச்னைகளில் உலர் கண் நோய் ஒரு பேசுபொருளாக மாறி வருகிறது. இந்த உலர் கண் நோய் உலக அளவில் லட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கும் ஒரு பொது கண் பிரச்னையாக இன்று உருவெடுத்துள்ளது. இந்தியாவிலும் இந்த நோயின் பாதிப்பு அதிகரித்து வருவதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

உலர் கண் நோய் என்பது கண்களில் உள்ள நீரின் அளவு குறைந்து அதன் தரம் போதுமானதாக இல்லாமல் போவதைக் குறிக்கிறது. அதாவது, தேவையான ஈரப்பதத்தை கண்ணின் மேற்பரப்பு இழந்து, கண் எரிச்சல், சிவத்தல், மங்கலான பார்வை போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தும் ஒரு நிலையாகும். கண்களில் உள்ள நீர் கண்ணைப் பாதுகாக்கவும், ஈரப்பதமாக வைத்திருக்கவும், தொற்றுகளைத் தடுக்கவும் உதவுகிறது. இந்த உலர் கண் நோய், மிதமான அசௌகரியம் முதல் கடுமையான பார்வைக் குறைபாடு வரை பல்வேறு கண் பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

ஜர்னல் ஆப் குளோபல் ஹெல்த் இதழ் 2023—இல் நடத்திய ஓர் ஆய்வு உலக அளவில் 11.59% முதல் 57.47% வரையிலான மக்கள் உலர் கண் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது. இந்திய நகர்ப்புற மக்களிடையே உலர் கண் நோயின் பாதிப்பு 20 முதல் 30% வரை உள்ளதாக அகில இந்திய கண் மருத்துவச் சங்கம் தெரிவிக்கிறது.









என். பத்ரி

சென்னை, மும்பை, தில்லி போன்ற பெரு நகரங்களில் இந்த எண்ணிக்கை 40 சதவீதமாக இருக்கிறது. தற்போது, 20 வயதுக்கும் மேற்பட்ட100 பேரில் 15 பேர் உலர் கண் நோயின் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

தினசரி 6 மணி நேரத்துக்கும் மேல் திரைப்பயன்பாடு உள்ளவர்களில் 60 % மக்களிடையே இந்த உலர் கண் நோய் அறிகுறிகள் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. ஆண்களைவிடப் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும், 50 வயதுக்கும் மேற்பட்டவர்கள், மாதவிடாய் நிறுத்தத்தை நெருங்கும் பெண்கள்ஆகியோர் இப்பிரச்னையால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.


நமது கண்களில் உள்ள கொழுப்பு அடுக்கு, நீர் அடுக்கு, மியூகோசல் ஆகிய மூன்று அடுக்குகளும் முறையாகப் பணியாற்றும்போது உலர் கண் நோய் ஏற்படுவதில்லை. உலர் கண் நோய் வர முக்கியக் காரணம் கண்ணின் கொழுப்பு அடுக்கு




பாதிக்கப்படுவதுதான் என்றும் கூறப்படுகிறது.


பொதுவாக நாம் ஒரு நிமிஷத்துக்கு 12 முதல் 14 முறை கண் சிமிட்ட வேண்டும். ஆனால், அதிக நேரம் திரைச்சாதனங்களை பார்க்கும் போது, நாம் கண் சிமிட்டுவது இயல்பாகவே குறைந்து விடுகிறது. இதனால், கண் இமைகளில் இருக்கும் மீபோமியன் சுரப்பி ஆவியாக விடுகிறது. கண்களைத் தொடர்ந்து சிமிட்டும்போது மீபோமியன் சுரப்பி கண்களில் தொடர்ந்து இருக்கும். நீண்ட நேரம் கண் சிமிட்டாமல் இருப்பதால் உலர்கண் நோய் பாதிப்பு ஏற்படுகிறது.

உலர் கண் நோயின் தொடக்கால அறிகுறிகள் கண் உறுத்தல், கண்கள் சிவத்தல் கண்களிலிருந்து தொடர்ந்து தண்ணீர் வருவது போன்றவையாகும். எனவே,



உலர் கண் பாதிப்புகளைத் தவிர்க்க நமது நீண்ட நேர திரைச்சாதனப் பயன்பாட்டின்போது நமது கண்களுக்கு ஓய்வு கொடுத்து, கண்களை அடிக்கடி சிமிட்ட வேண்டும். இமைகளை உயர்த்திப் பார்ப்பதைக் குறைக்க வேண்டும். கணினித் திரையை கண் அளவுக்குக் கீழே இருக்குமாறு தாழ்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். கணினியில் நெடுநேரம் பணிபுரிபவர்கள் அடிக்கடி கண்களுக்கு ஓய்வளிக்க வேண்டும்.

குளிர்சாதன அறையில் அதிக நேரம் இருக்கும் நபர்களும் குளிர்ந்த காற்று கண்களில் நேராகப் படுவதைத் தடுக்க வேண்டும். அதேபோல், காண்டாக்ட் லென்ஸ்களைப் பயன்படுத்துபவர்கள் அதிக கவனத்துடன் இருப்பது நல்லது.




அதிகப்படியான திரை நேரம் நமது சமூகத் தொடர்புகளைக் குறைத்து தனிமைக்கு வழிவகுக்கிறது. அன்றாடத் தூக்கம் பாதிக்கப்படாமல் இருக்க படுக்கைக்குச் செல்வதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பே திரைச் சாதனங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவது நல்லது. திரைச் சாதனங்கள் வெளிப்படுத்தும் நீல நிறக் கதிர்கள் நம் கண்களில் பெரிய எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, இந்தத் திரைச் சாதனங்களை நமது உடல் நலமும், மன நலமும் கெட்டுவிடும் அளவுக்குப் பயன்படுத்துவதை நாம் தவிர்ப்பது நல்லது. அவற்றின் பயன்பாட்டுக்கென்று நேரக் கட்டுப்பாட்டை வகுத்துக் கொண்டு பயன்படுத்துவது நல்லது. நமது குழந்தைகளுக்கும் இவ்வாறான பயிற்சியை அளிப்பது நமது கடமை.




திரைநேரத்தைக் குறைத்து குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிடுதல், புத்தகங்களைப் படித்தல், உடற்பயிற்சி செய்தல் போன்ற பிற செயல்பாடுகளிலும் நாம் ஈடுபடுவது நல்லது. இவற்றை உணர்ந்து இனியாவது திரைச்சாதனங்களில் உலா வருவதைக் குறைப்போம்.

உலர் கண் நோய் என்பது கண்களுக்குப் போதுமான உயவுத்தன்மை இல்லாத ஒரு பொதுவான நிலையாகும், இதனால் கண்கள் வறண்டு, அரிப்பு, எரிச்சல், வலி மற்றும் பார்வை மங்கல் போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தும். இது போதுமான கண்ணீரை உற்பத்தி செய்யாமலோ அல்லது கண்ணீர் விரைவாக ஆவியாவதாலோ ஏற்படலாம். வயது, சில நோய்கள், சுற்றுச்சூழல் காரணிகள், ஒவ்வாமை மற்றும் காண்டாக்ட் லென்ஸ் பயன்பாடு ஆகியவை இதன் பொதுவான காரணங்களாகும்.

உலர் கண் நோயின் அறிகுறிகள்:

கண் எரிச்சல் மற்றும் அரிப்பு:
கண்கள் வறண்டு, அரிப்பு அல்லது எரிச்சல் உணர்வை ஏற்படுத்தும்.
கண் வலி:
கடுமையான கண் வலி ஏற்படலாம்.
கண்களில் நீர் வடிதல்:
சில சமயங்களில் கண்கள் நீர் வடித்து எரிச்சலை ஏற்படுத்தும்.
மங்கலான பார்வை:
பார்வை மங்கலாகத் தெரியலாம்.
வெளிப்புறப் பொருள் உணர்வு:
கண்களில் ஏதோ ஒன்று இருப்பது போன்ற உணர்வு ஏற்படும்.

உலர் கண் நோயின் காரணங்கள்:
குறைந்த கண்ணீர் உற்பத்தி:
போதுமான நீர் கண்ணீர் உற்பத்தி செய்யப்படாதது.

அதிகரித்த கண்ணீர் ஆவியாதல்:
கண்ணீர் மிக விரைவாக ஆவியாகிவிடுவது.
சுற்றுச்சூழல் காரணிகள்:
அதிக சூரிய ஒளி, காற்று அல்லது வறண்ட வானிலை.

மருத்துவ நிலைமைகள்:

முடக்கு வாதம், ஸ்ஜோக்ரென்ஸ் நோய்க்குறி மற்றும் தைராய்டு நோய் போன்ற சில நோய்கள்.

மருந்துகள்:

சில மருந்துகள் மற்றும் கண் சிகிச்சை.

கான்டாக்ட் லென்ஸ்:

காண்டாக்ட் லென்ஸ்கள் அணிவது அல்லது அவற்றின் பராமரிப்பு.


வயது:

வயதாவதால் உடலில் ஏற்படும் மாற்றங்கள்.

ஒவ்வாமை:

மகரந்தம், தூசி மற்றும் செல்லப் பிராணிகளின் பொடுகு போன்றவை.

சிகிச்சை முறைகள்:




கண்களை ஈரப்பதமாக வைத்திருக்க செயற்கை கண்ணீரை பயன்படுத்தலாம்.

வாழ்க்கை முறை மாற்றங்கள்:

அதிக நேரம் திரைகளைப் பார்ப்பதைத் தவிர்ப்பது, போதுமான நீர் அருந்துவது.

ஊட்டச்சத்து:

ஒமேகா—3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த உணவுகளை உட்கொள்வது.

சூழலை மாற்றுதல்:

ஏர்கண்டிஷனர்களைத் தவிர்ப்பது.

மருத்துவ சிகிச்சை:

தேவைப்பட்டால் மருத்துவர் வேறு சில மருத்துவ சிகிச்சை முறைகளை பரிந்துரைக்கலாம்.

பருவ காலங்களில் தொற்றுகள் ஏற்படுவது வழக்கம். அந்த வகையில் கோடை காலத்தில் வெப்பம் அதிகமாக இருக்கும் போது அது நேரடியாக கண்களை பாதிக்கக் கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதனை அலட்சியப்படுத்தும் போது பாதிப்பு தீவிரமடைந்து பார்வைத் திறன் குறைய நேரிடும். கடந்த சில வாரங்களாக உலர் விழி, கண் அழற்சி, புறஊதா கதிர்வீச்சு பாதிப்பு, ஒவ்வாமை பாதிப்பு ஆகியவை அதிக அளவில் ஏற்படுகின்றன.

உலர் விழி பிரச்னை கண்களில் போதிய ஈரத்தை தக்க வைப்பதற்கான கண்ணீர் சுரக்காதபோது ஏற்படுகிறது. இதற்கு சொட்டு மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கலாம். இளம் சிவப்பு கண் நோய் எனப்படும் கண் அழற்சி பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. கண் இமைக்கு உள்ளே அமைந்திருக்கும் திசுவில் வீக்கம் அல்லது அழற்சி ஏற்படும்போது இத்தகைய பாதிப்பு உருவாகிறது.



அசுத்தமான கைகளால் கண்களைத் தொடாமல் இருப்பதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம். சூரியனிலிருந்து வரும் புறஊதா கதிர்வீச்சு பல வகையான கண் நோய்களை விளைவிக்கக் கூடும். இந்த கதிர்வீச்சு கண் புரை, விழிப்புள்ளிச் சிதைவு, ஃபோட்டோகரட்டாடிஸ் போன்றவற்றை ஏற்படும். இத்தகைய பாதிப்பைத் தவிர்க்க சூரிய ஒளியிலிருந்து கண்களைக் காக்கும் கண்ணாடிகளை அணியலாம்.

கோடை காலத்தில் உடலில் நீர்ச்சத்தைக் குறையாமல் வைத்திருக்கும் பானங்களை அருந்த வேண்டும். செயற்கை குளிர்பானங்கள், கார்பனேற்றப்பட்ட பானங்களைத் தவிர்க்க வேண்டும். கணினி, கைப்பேசிகளை பயன்படுத்துகின்றபோது 20—20—20 என்ற விதியை பின்பற்றினால் கண் பாதிப்புகளில் இருந்து தவிர்க்கலாம்.

அதாவது, 20 நிமிஷங்களுக்கு ஒருமுறை திரையில் இருந்து பார்வையை விலக்கி 20 அடி தொலைவில் உள்ள ஓரிடத்தை, 20 விநாடிகள் பார்க்க வேண்டும். இதன் மூலம் டிஜிட்டல் திரையைத் தொடர்ந்து பார்ப்பதனால் ஏற்படும் கண் பாதிப்புகளை குறைக்க முடியும்."



# மழலை

குழந்தைகளை பார்த்தவுடன் 'கொஞ்ச' வேண்டுமென்ற உணர்வு ஏற்படுவது ஏன்?

எங்களது பூனைக்குட்டியைப் பார்த்தவுடன் என் மகனின் முகம் பிரகாசமாக மாறுகிறது, அவன் அந்த பூனைக்குட்டியை சற்று இறுக்கமாகவே அணைத்துக் கொள்கிறான். அவ்வளவு இறுக்கமாக அணைக்க வேண்டாம் என பலமுறை அவனிடம் சொன்னாலும், அந்த பஞ்சுபோன்ற உயிரினத்தைப் பார்த்ததும் அவ்வாறு செய்ய வேண்டுமென்ற ஆவல் அவனுக்கு எழுகிறது.இது குறும்பு அல்ல, அதேசமயம் பூனைக்குட்டியைக் காயப்படுத்த வேண்டும் என்ற நோக்கமும் அவனுக்கு இல்லை. இது ஒரு தீவிரமான உணர்ச்சியின் வெளிப்பாடு. என் மகனுக்கு 14 வயது, ஆனால் ஆவேசமாகக் கட்டிப்பிடிப்பது அல்லது அழகான விஷயங்களை இறுக்கமாக அணைப்பது, கையாள்வது என்ற தன்னிச்சையான தூண்டுதல் எல்லா வயதினரிடமும் பொதுவானது.

எனக்கு 30 மற்றும் 40 வயதுடைய சக ஊழியர்கள் உள்ளனர், அவர்களும் இதே உணர்வை ஒப்புக்கொள்கிறார்கள். இன்னொருவருக்கு, சமீபத்தில் குழந்தை பிறந்தது. தனது மகனை "இறுக்கமாக கட்டிப்பிடிக்க வேண்டும் மற்றும் அவனது குண்டான கால்களைக் கடிக்க விரும்புவதாகவும்" அவர் கூறுகிறார்.உளவியலாளர்கள் இதை 'அழகான, அன்பான முறையில் ஆக்ரோஷப்படுவது' என்று விவரிக்கிறார்கள். மேலும் நமது மூளை எவ்வாறு தீவிரமான அன்பை, அழகை கையாளுகிறது என்பதற்கான ஒரு வெளிப்பாடுதான் இது.






இது என்ன மாதிரியான உணர்வு?

ஆஸ்திரேலியாவில் உள்ள நியூ சௌத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் சமூக உளவியலாளர் லிசா ஏ. வில்லியம்ஸ், "நம்மால் கையாள முடியாத அளவுக்கு அழகான ஒன்றோடு நாம் தொடர்பு கொள்ளும்போது உணரக்கூடிய அதிகப்படியான நேர்மறையான உணர்வுகளை சமாளிப்பதற்கான ஒரு வழிமுறையாக இந்த 'அழகான, அன்பான






முறையில் ஆக்ரோஷப்படுவது’ உள்ளது.” என்று கூறுகிறார். இந்த வலுவான உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகளுக்குப் பின்னால் உள்ள நோக்கம் என்பது தீங்கு விளைவிக்கக்கூடியது அல்ல. மாறாக, அன்பு மற்றும் மகிழ்ச்சியின் அதீதமான உணர்ச்சிகளைச் சமாளிக்க உங்கள் மூளை எவ்வாறு உதவுகிறது என்பதுதான் இது.


குழந்தைகள், பூனைக்குட்டிகள் அல்லது அகன்ற கண்களைக் கொண்ட நாய்க்குட்டிகளைப் பார்க்கும்போது நாம் அடிக்கடி இதை உணர்கிறோம்.“இது நமக்குப் பிடித்தமான ஒன்றை கொஞ்ச அல்லது கிள்ள விரும்பும் உணர்வாக வெளிப்படுகிறது, ஆனால் யாரையாவது காயப்படுத்தும் நோக்கத்துடன் அந்தத் தூண்டுதலைச் செயல்படுத்த எந்த விருப்பமும் இருப்பதாகத் தெரியவில்லை” என்று வில்லியம்ஸ்

குமுடு ஜெயவர்தன

கூறுகிறார். உறவினர்கள் அல்லது நண்பர்களின் அழகான குட்டிக் குழந்தையைப் பார்த்ததும் `ச்சோ ஸ்வீட்’ என்று கொஞ்சிக்கொண்டே சட்டெனக் குழந்தையின் கன்னத்தில் கிள்ளிவிடுவோம். சில நேரங்களில் நாம் கிள்ளிய வலி தாளாமல் குழந்தைகள் வீறிட்டு அழும். நாய், பூனை போன்ற




செல்லப்பிராணிகளிடமும் அதேபோன்றுதான்



நடந்துகொள்வோம். அவற்றின் காதுகளைப் பிடித்துத் திருகுவது, மிருதுவான தோலை நசுக்குவது எனப் பாடாய்ப்படுத்துவோம். அவை `வீல்' என்று கத்தும்போதுதான் பிடியை விடுவோம். இதையெல்லாம் ஏன் செய்கிறோம். சிறிய குழந்தை, சிறிய பிராணிகள் என்று தெரிந்தும் ஏன் அத்தனை வன்முறையைக் கையாள்கிறோம்.

மூளையின் செயல்பாடு தொடர்பான பல்வேறு ஆய்வுகள் உலகம் முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மூளையில் இருந்து கிடைக்கும் சிக்னல்களே நம் உணர்வுகளைத் தீர்மானிக்கின்றன. நாம் சோகமாக இருப்பதை மூளை உணர்த்தினால்தான் கண்களில் கண்ணீர் வரும். நாம் புரிந்துகொள்ள முடியாத ஆச்சர்யங்களில் மூளையும் ஒன்று.

அண்மையில் அமெரிக்காவின் கலிபோர்னியா ரிவர்சைட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆய்வில் குழந்தைகளிடமோ, செல்லப்பிராணிகளிடமோ மகிழ்ச்சியான தருணத்தில்கூட ஏன் ஆக்ரோஷமாக நடந்துகொள்கிறோம் என்பதைக் கண்டறிய ஆய்வு நடத்தப்பட்டது. 18 முதல் 40 வயதுக்குட்பட்ட 54 பேரிடம் மூளை நரம்பியல் ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வின் முடிவில் நாம் அளவுக்கு அதிகமாக மகிழ்ச்சியாக இருக்கும்போதோ, நெகிழ்ச்சியாக இருக்கும்போதோ, மூளையில் நமது உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அமைப்பு சற்று ஆக்ரோஷமான உணர்வை வெளிப்படுத்துகிறதாம். அதனால்தான் சட்டென்று அழகான வன்முறைகளைக் கையாள்கிறோம் என்கிறது ஆய்வு முடிவு. செல்லப்பிராணிகளைப் பொறுத்தவரை, பெரிய விலங்குகளைக் காட்டிலும் அழகான குட்டிகளிடம்தான் அவ்வாறு நடந்துகொள்கிறோம் என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது.




ஆக்ரோஷமாக 'கொஞ்ச' ஏன் தூண்டப்படுகிறோம்?

மிகவும் அழகான ஒன்றுக்கு ஆக்ரோஷமாக எதிர்வினையாற்றுவது என்பது ஒரு முரண்பாடான நடத்தையாகும். இது உளவியலாளர்கள் இருவகை உணர்ச்சி வெளிப்பாடு **(Dimorphous emotional expression)** என்று குறிப்பிடுவதிலிருந்து உருவாகிறது. இது நமது வெளிப்புற உணர்ச்சிகள் நமது உள் உணர்வுகளுடன் ஒத்துப் போகாதபோது நிகழ்கிறது.இது ஒரு விசித்திரமான ஆனால் முற்றிலும் இயல்பான எதிர்வினை. அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், "வயது மற்றும் கலாசாரங்களைக் கடந்து பல தரப்பு மக்களால் இந்த உணர்வு பகிர்ந்து கொள்ளப்படுகிறது" என்று கூறுகிறார்கள். அழகான விஷயங்களைப் பார்க்கும்போது நம் மூளையில் என்ன நடக்கும்?





நாம் அழகான ஒன்றைப் பார்க்கும்போது, நமது மூளை டோபமைனை வெளியிடுகிறது, இது ஒரு ‘நல்லுணர்வு’ அல்லது வெகுமதிக்கான ஹார்மோன் ஆகும். சுவையான உணவு, அன்பு அல்லது இலக்குகளை அடைதல் போன்ற விஷயங்கள் மூலமாகவும் இது தூண்டடப்படுகிறது.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் மூளையின் ‘அமிக்டலா’, அவ்வப்போது இந்த நேர்மறையான உணர்ச்சிகளால் அதிகமாகத் தூண்டப்படலாம். அமிக்டலா விரைவாக உங்களது உணர்ச்சிகளை நிறுத்துவதால், அவற்றை செயல்படுத்துவதிலிருந்து நீங்கள் தடுக்கப்படுகிறீர்கள்.இலங்கையில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளரான முனைவர் காந்தி ஹெட்டிகோடா, “இந்த டோபமைன் அமைப்பு செயல்படுத்தப்படும்போது, நமக்கு இறுக்க அணைத்தல், கிள்ளுதல், கொஞ்சுதல் தேவை என்று உணர்கிறோம்“ என்று கூறுகிறார்.

இருப்பினும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் பகுதியும் அதே நேரத்தில் செயலில் இருப்பதால், நம்மால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும்.‘இத்தகைய முறையில் அன்பைக் காட்டுவது, தீவிரமான உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கும், அதிகப்படியான நேர்மறை உணர்ச்சிகளை பாதுகாப்பான முறையில் நிர்வகிப்பதற்கும் ஒரு ஆரோக்கியமான வழியாகும்.’ என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். மூளை எவ்வாறு முரண்பாடான உணர்ச்சிகளை ஒரே நேரத்தில் கையாள முடியும் என்பதை இது காட்டுகிறது.

உளவியலாளர்களின் கூற்றுப்படி,இது உணர்ச்சிகளை சிறப்பாக நிர்வகிப்பதற்கான ஒரு வழிமுறையாகும். இது தீவிரமான நேர்மறையான உணர்வுகளை பாதுகாப்பான, சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் செயலாக்க அனுமதிக்கிறது. பொதுவாக தங்கள் உணர்ச்சித் தூண்டுதல்களைக் கட்டுப்படுத்துவதில் சிக்கல் உள்ளவர்கள், பிரச்னைகளை சந்திக்க நேரிடும். மனநல மருத்துவர் டாக்டர் கபில ரணசிங்க, “அழகு, கோபம் அல்லது ஆசை போன்ற எந்தவொரு வலுவான தூண்டுதலையும்




கட்டுப்படுத்தத் தவறினால், அது பொருத்தமற்ற அல்லது சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைக்கு வழிவகுக்கும்“ என்று சுட்டிக்காட்டுகிறார்.

“ஒரு வலுவான தூண்டுதல் எழுந்தவுடன் அதற்கு எதிர்வினையாற்றுவது ஆபத்தானது. அதை நிர்வகிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.”

எல்லோருக்கும் இத்தகைய உணர்வு இருக்குமா?

பெரும்பாலான மக்கள் (உளவியலாளர்களின் கூற்றுப்படி 50% — 60%) ‘அழகான, அன்பான முறையில் ஆக்ரோஷப்படுவது’ என்ற உணர்வை அனுபவிக்கிறார்கள் என்றாலும், கணிசமான எண்ணிக்கையிலான மக்களுக்கு அவ்வாறு இல்லை. அதற்காக, அவர்களிடம் ஏதோ தவறு இருப்பதாக அர்த்தமில்லை.

‘அழகான, அன்பான முறையில் ஆக்ரோஷப்படுவது’ என்ற உணர்வை அனுபவிக்காதவர்களுக்கு, அத்தகைய உணர்ச்சிகள் தீவிரமாக எழவில்லையா அல்லது அவர்கள் வேறு ஏதேனும் வழிகளில் அதை வெளிப்படுத்துகிறார்களா என்பது உளவியலாளர்களுக்கு தெளிவாகத் தெரியவில்லை.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

2025

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY




## AUGUST




## SEPTEMBER







## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email:
editor@ithamil.com


HAPPY
Diwalii
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA